ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" | "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" | "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—௬. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ ஆவணி௴ ௨௳ (18-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௭.

## தோத்திரம்.

பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற் பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தே னாகி
அருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணவா னந்த மாகி
இருள்தீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்.

—தாயுமானசுவாமிகள்.

# தேச முன்னேற்றத் திறவுகோல்

(திரு. சி. அகிலேஸ்வரன், தலைத்தீவு.)

"செந்தமிழ்நா"டென்ற மெட்டு. (தொகுதி-4, பகுதி 9-ன் தொடர்)

உண்ணும் உணவும் பிறதேச சப்பொருள்
உடுக்கும் உடையும் பிறதேசம்
எண்ணம் முழுதும் பிறதேச சத்திலே
என்னென்று தேசம்முன் னேறுவதோ? 1

யந்திரம் வாங்கி நெசவுசெய் வோமோ?
நித்தியம் கைத்தெறி கொண்டுநெய் வோமோ?
சுந்தர மான இலங்கா தேவியும்
சோம்பற் புதல்வரை ஈன்றனளோ? 2

சோற்றுக்கும் சீலைக்கும் திண்டாட்டம் இன்னே
சூதுக்கும் வாதுக்கும் கொண்டாட்டம்
வேற்றூரை நம்பியே சோம்பேறிக ளானோம்
விழித்தெழுமின் தேசத் தொண்டர்களே 3

நெல்லும் பருத்தியும் நன்றாகச் செய்ய
நேரிடும் லாபமும் ஒன்றாக
அல்லும் பகலுமாய்ச் செல்வம் வளர்ந்திடும்
ஆரும் மதிப்பர்நம் தேசத்தையே 4

வாளா கிடக்கின்ற மேட்டு நிலங்களை
மாட்சி உறும்பனந் தோப்புகளை
நாளா வளர்த்தியில் பண்பு படுத்துவோம்
நானா விதப்பயிர் நாட்டுவோமே 5

அழையா விருந்துபோல் ஆகின்றதே நாம்
அனுப்பும் புகையிலை போகின்றது
பிழையேதும் பேசாமல் மலையாளத்தை இனிப்
பெரிய குருஎன்று பேணுவோமே 6

நெய்தற் றொழில்தன்னில் ஏவப்பட்டே ஜப்பான்
நித்தியம் பஞ்சிற்குத் தேவைப்பட்டு
உய்தற் குரிய விளம்பரம் ஒன்றை
உலகெங்கும் இப்போ தனுப்பியது 7

பருத்தியை வைத்துப் பயிராக்கும் உங்கள்
பஞ்சத்தைப் போக்கி உயிராக்கும்
விருத்திசெய்தே நாளும் பஞ்சை அனுப்பும்
வேண்டும் வேண்டும் என்று கேட்கின்றதே 8

காடு திருத்திப் பருத்தி விதைப்போம்
கரும்புடனேநெற் கழனிகள் செய்வோம்
தேடுவார் இல்லாப் புகையிலையே அன்றித்
தேசம் விரும்பும் பயிர்செய்வோம் 9

வேலி அடைத்துப்பின் பூமி திருத்துவோம்
வேலைக்குத் தொண்டரைச் சேகரிப்போம்
மூல தனம்பெற ஐக்கிய சங்கத்தை
முதல்கட்டி ஓம்பி வளர்த்திடுவோம் 10

இலங்கை விவசாய மந்திரியார் இதற்
கேற்ற முறைசெய்து தந்திடுவார்
நலங்கொள்ள ஐக்கிய நாணய சங்கமும்
நாளும் உதவிகள் செய்திடுமே 11

பஞ்சுப் பொதியினைச் சிப்பங்கட்டி எதிர்
பார்க்கும் ஜப்பானுக்கே ஒப்பங்கட்டி
நெஞ்சு குளிரப் பணம்பெற லாம்இதில்
லட்சியம் வைப்பீர் சகோதரரே 12

வர்த்தகம் செய்துள்ள லாபத்தை யேகொண்டு
வாய்ப்பான யந்திரம் செய்துநெய்வோம்
கர்த்தன்ம காத்துமா காந்தி சொன்னபடி
கைராட்டி னத்தையும் ஆட்சிசெய்வோம் 13

தேர்ந்தெடுத் தேநல்ல மாணவரைப் பிற
தேசம் அனுப்பி இரும்புருக்கும்
நேர்ந்த இயந்திரம் செய்யும் முறைகளை
நேராகக் கற்று வரச்செய்வோம் 14

கைத்தொழில் வர்த்தக மந்திரியார் இந்தக்
காரியத்திற் பலன் தந்திடுவார்
சித்தம் இடமாக வைத்தேஇவ் வண்ணம்
செய்யவாரும் தேசத் தொண்டர்களே 15

நாளும் அரசாங்க மன்றத்திலே சும்மா
நாற்காலிக் குப்பார மாயிராமல்
வாளின் முனைபோல் மதிஉடை யாரையே
மாசற்ற ஈசராய்த் தேர்ந்திடுவோம். 16

(வரும்)

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில், உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—4.

# மானிப்பாய்த் தச்சர் கொலை.

## புருடனும் மனைவியும் எதிரிகள்.

## இடியப்பம் சாப்பிடும்பொழுது கூப்பிட்டான்.

## விளக்குமாற்றாலடித்த பெண்கள்.

## சாட்சியின் தடுமாற்றக் கூற்று. | சிலைக்கம்பு விளையாட்டு.

## முதலாம் எதிரிக்கு ஆறுவருடச் சிறை.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 13

யாழ்ப்பாணம் சுப்ரீம் கோட்டில் நீதியரசர் எல். எம். மாட்டினஸ் முன்பாகவும் ஆங்கிலம் பேசும் ஜூரிக் கனவான்கள் முன்பாகவும் மானிப்பாய் வாசிகளாகிய தச்ச வகுப்பைச் சேர்ந்த (1) சின்னர்—கதிர்காமர் (2) கதிர்காமர் பெண் பாறுவதி முதலியவர்கள்மீது சென்ற வைகாசிமீ 19-ந் திகதியளவில் அவ்வூர் வாசியாகிய கந்தர்—வல்லிபுரம் எனபவரைக் கத்தியாற் குத்திக் கொலை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருவாளர்கள் N. பொன்னம்பலம், (தலைவர்) S. மருதமுத்து, K. முருகேசு, M. J. இராசையா, K ஜோகுப்பிள்ளை, A. P. யேசுதாசன், V. துரைசுவாமிப்பிள்ளை முதலாயினோர் ஜூரர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

முடிக்குரிய நியாயவாதி நிகால் குணசேகரா அவர்கள் வழக்காளி சார்பாகவும் நியாயதுரந்தரர் சாம். ஏ. சபாபதியின் அநுசரணையின் பேரில் பிரபலநியாயவாதி எஸ். துரைசுவாமி தம்பு அவர்கள் எதிரிகளின் சார்பாகவும் ஏற்பட்டார்கள்.

முடிக்குரிய நியாயவாதி வழக்கின் விபரத்தை ஜூரிமார்களுக்குச் சிறிது நேரமாக எடுத்துரைத்ததின் மேல் டாக்டர் K. இராசா அவர்கள் இறந்தவரதும் எதிரிகளதும் காயங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இத்துடன் இடைவேளைக்கெனத் கோடு கலைந்தது.

மானிப்பாய் வாசியும் இறந்தவரது தம்பியுமாகிய கந்தர்—விசுவலிங்கம் என்பவர் சாட்சியங் கூறுகையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"இறந்தவரது வீட்டில் நானும் இறந்தவரும் அவரது மனைவியும் இறந்தவரது மாமனாகிய கதிரேசுவும் மாமியுமே வசித்து வந்தோம். அருணாசலம்—முருகேசு என்ற எம்முடைய சொந்தக்காரனொருவர் அடுத்த வீட்டில் வசித்து வருகிறார். அதற்கும் ஒரு வீட்டுக்கு அப்பால்தான் எதிரிகள் வசித்து வருகிறார்கள். 1-ம் எதிரியினது வீட்டிலே அவரது மனைவியாகிய 2-ம் எதிரியும் 2-ம் எதிரியினது சகோதரியாகியசின்னத்தங்கமும் புருடனாகிய கந்தையாவும் வசித்து வருகிறார்கள். சம்பவம் நடைபெற்றவன்று காலை 8 அல்லது 9 மணியளவில் நானும் அண்ணனாகிய இறந்தவரும் இடியப்பம் சாப்பிட்டுக் கொண்டிருக்க மாமனாகிய கதிரேசு வேறோர் இடத்திலிருந்து தேனீர் பருகினார். அத்தருணத்தில் 1-ம் எதிரியாகிய கதிர்காமர் ஒழுங்கையிலுள்ள எமது படலை வாசலில்வந்து நின்று "ஏடேய் வல்லிபுரம். இங்கே வா" எனக் கூப்பிட்டார். நான் எதிரியினது குரலிலிருந்தே எதிரி யென மட்டுப் படுத்தினேன். இறந்தவர் வழக்கமில்லாதன வழக்கமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில்இடைவேளையில் எழும்பிப் போனதைக் கண்டு நானும பின் தொடர்ந்தேன். நான் படலையடிக்குப் போன போதே எதிரிகள் இருவரையும் முன்னாகவே விலத்தப்பட்ட எதிரிகளாகிய கந்தையாவையும் பெண்சின்னத்தங்கத்தையும் கண்டேன். அப்பொழுதே எதிரி இறந்தவரது இடது தோள் மூட்டில் குத்தினார். அதைக்கண்ட நான் உடனே எதிரேயுள்ள சம்மாலைக்குச் சென்று வண்டிலின் சிலைக் கம்பொன்றை எடுத்துக் கொண்டு ஓடிவந்தேன். வரும்போது 2-ம் எதிரி இறந்தவரது கழுத்தில் பனந்தடியாலடித்தார். உடனே இறந்தவர் அப்பனந்தடியைப் பறித்து எதிரியின் தலையில் அடிக்க 1-ம் எதிரி அவரது நெஞ்சில் குற்றினார். குத்துப்பட்டவர் அதேயிடதகில் முழங்கால் குத்தி வீழ்ந்தார். பின்னர் முதலாம் எதிரி காலால் மிதித்துக் கொண்டு கத்தியை இழுக்கு முன்னரே நான் சிலைக்கம்பால் எதிரிக்கு அடித்தேன். அவ்வடி எங்கு பட்டதென எனக்குத் தெரியாது. அந்நேரத்தில் சின்னததங்கம் கொடுவாக்கத்தியொன்றைஓங்க நான் அவருக்கு அடித்தேன். பின்னர் நால்வரும் "வல்லிபுரம் செத்துப் போனான்" எனச் சொல்லிக் கொண்டு ஓடிப்போனார்கள். முருகேசு அதன் பின்னர் பொலீஸ் விதானையிடம் போனார். அதன் பின்னர் நாங்கள் கத்தினோம். நானே அண்ணனது பிரேதமென டாக்குத்தருக்கு அடையாளம் காட்டினேன்.

சாட்சியை நியாயவாதி துரைசுவாமி தம்பு குறுக்குவிசாரணை செய்த போது கூறியவற்றின் சாராம்சம்:

"1-ம் எதிரியின் மைத்துனனாகிய நாகனாதியை எனக்குத் தெரியும். அவன் அதிகமாகக் குடித்துவிட்டு அவ்விடங்களில் பாடிக்கொண்டும் தூஷணையாகப் பேசிக்கொண்டும் ஆடிக்கொண்டும் திரிபவன். அவ்வொழுங்கையில் சப்தங்கேட்டால் நாகனாதி போகிறானென யாவரும் சொல்வர். இது நடைபெறுவதற்கு ஏறக்குறைய ஒருமாசத்தின் முன்னர் நாகனாதிக்கும் முருகேசுவுக்கும் ஒரு ரூபாவிலிருந்து தகாறு உண்டாகியதென எனக்குத் தெரியாவிட்டாலும் நான் கேள்விப்பட்டேன். இருநாட்களின் முன்னரும் நாகனாதி குடிவெறிமிகுதியினால் முருகேசுவை மிகவும் நீதியீனமாகப் பேசினான். கந்தையா அறிவித்தல் கொடுததகின்பேரிலேயே விதானை வந்தார் என்பது எனக்குத் தெரியாது. 1-ம் எதிரியின் வீட்டில் நாகனாதி சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது முருகேசுவின் தூண்டுதலின் பேரில் இரு களவர்கள் அங்குசென்று, தூஷணையாகப் பேசி எதிரியினது வீட்டிற்குக் கல்லால் எறிந்தார்களென்பதும் முதல்நாளாகிய சனிக்கிழமையன்று இரவு 1-ம் எதிரியின் வீட்டில் முருகேசு பகுதியாருக்கும் எதிரியினது பகுதியாருக்குமிடையில் சண்டை நடைபெற்றதென்பதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் பார்வதி, சின்னத்தங்கம் என்ற இருபெண்களும் முருகேசுவுக்கு விளக்குமாற்றா லடித்ததாகக் கேள்விப்பட்டேன். அச்சண்டையில் கதிரேசுவும் இறந்தவராகிய வல்லிபுரமுமே முருகேசுவைப் பிடித்துவந்தார்களென்பது எனக்குத் தெரியாது. விதானை வரும்போது முருகேசுவும் இறந்தவராகிய வல்லிபுரமும் கதிரேசுவும் நானும் 1-ம் எதிரியின் படலையில்நின்று ஓடவில்லை. நான் எதிரியினது படலையை முறித்துக் கல்லால் எறியவில்லை. மேற்கு ஒழுங்கையின் அந்தத்தில் கொழுத்த மனிதன் ஒருவர் கடை வைத்திருக்கிறார். எதிரி கொழுத்த மனிதனின் கடையில் சாமான் வாங்கப் போகவேண்டுமானால் எங்கள் எல்லோருடைய வீட்டையுங்கடந்தே போதல்வேண்டும். சம்பவம் நடைபெற்றவன்று காலை விதானையின் வேண்டுகோளின்படி இரு சாட்சிகளைக் கந்தையா கூட்டிக் கொண்டு விதானை வீட்டுக்குப் போனமை எனக்குத் தெரியாது. நான் பொலீஸ் விதானையிடம் எதிரி படலையில் வந்துநின்று "வாடா உன்னைக் குத்திக் கொல்லுகிறேன்" எனச் சொல்லவில்லை. விதானை என் அம்மாதிரித் தனது டயறியில் எழுதினாரென்பது எனக்குத் தெரியாது தேனீர்குடித்தவர் எப்படி ஒழுங்கைக்குப் போனாரென்பது எனக்குத் தெரியாது. குத்து நடைபெறும் போது இறந்தவராவது எதிரியாவது வாயைத் திறக்கவில்லை. நீ என்னசெய்யப்போகிறாயென இறந்தவர் எதிரியைக் கேட்டதாக விதானை தனது டயரியில் நான்சொன்னதாக எழுதியிருப்பது சுத்தப்பொய். சிலைக்கம்பால் நான் அடித்ததாக விதானையிடமாவது, பொலீசிடமாவது நீதிபதியினது 1-ல் விசாரணையிலாவது பயமிகுதியினாற் சொல்லவில்லை. டாக்குத்தர் எதிரியடைந்துள்ள காயங்களைப்பற்றி விபரித்ததன்மேல் நான் கூறினேனாயினும் பயமிகுதியினாற்தான் நான் சொல்லாதிருந்தேன், நான்சொல்லாத அனேக விஷயங்களைப் பொலிஸ் விதானையும், பொலிசாரும், பொலிஸ் நீதிபதியும் வாக்குமூலமாகப் பதிந்திருக்கிறார்கள். பொலிஸ் நீதிபதி எழுதியிருப்பதுபோன்று ஒரு குத்துக் குத்தியதின் பின்னரே நான் போனதாகச் சொல்லவில்லை. எதிரி குத்தப்பட்டிருந்த கத்தியை இழுக்கும்போதே நான் சிலைக்கம்பினால் அவரது தலையில் அடித்தேனாயினும் எதிரி தனது கையிலிருந்த கத்தியால் என்னைக் குத்தவில்லை.

நீதியரசர்:—பொலிஸ் நீதிபதிக்கு 2-ந் தவணையின்போதும் இவ்விடத்திலும் நீ சிலைக்கம்பு விளையாட்டைப்பற்றிக் கூறுகிறாய். அப்போதிருந்த உனதுபயம் இப்பொழுது எங்கு போனது.

சாட்சி:— நீதியரசர் இப்போது என்னைக் காப்பாற்றுவார் என எண்ணியே இங்கு கூறினேன்.

நீதி:—நீ வீட்டுக்குப் போகும் போது நான் உன்னுடன் கூட வரமாட்டேன்.

அதன்பின்னர் கோடு கலைந்தது.

யாழ்ப்பாணம் 14

இன்று கோடு கூடியதும் மானிப்பாய்வாசியும் இறந்தவரது மாமனுமாகிய சிதம்பரி-கதிரேசு கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"நானும் எனது மனைவியும் விஸ்வலிங்கமும் இறந்தவரது வீட்டிலேயே வசித்து வருகிறோம். சம்பவம் நடைபெற்றவன்று நான் குசினிக்கருகேயுள்ள வெளியிடத்திலிருந்து காப்பி குடித்துக்கொண்டிருக்க இறந்தவரும் விஸ்வலிங்கமும் வீட்டினுள்ளிருக்கும் திண்ணையிலிருந்து இடியப்பம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது 1-ம் எதிரி படலைவாசலில் நின்றுகொண்டு "வல்லிபுரம் வாடா இங்காலே" எனக் கூப்பிட்டார். நான் எதிரி நின்றதைக் காணாவிட்டாலும் குரலிலிருந்து மட்டுப்படுத்திக்கொண்டேன். உடனே வல்லிபுரம் எழுந்து போனார். நானும் போனேன். அப்போது முருகேசுவின் படலையடியில் 1-ம் எதிரியும் 2-ம் எதிரியும் கந்தையாவும் அவரது மனைவியாகிய சின்னத்தங்கமும் நின்றார்கள். 1-ம் எதிரி ஒரு கையில் கல்லுடனும் மற்றக் கையில் கத்தியுடனும், 2-ம் எதிரி பலகைக் குத்தியுடனும், கந்தையா என்பவர் இரும்புக்கம்பியுடனும், சின்னத்தங்கம் என்பவள் ஓர் கூரிய சொடுவாக் கத்தியுடனும் நின்றார்கள். இறந்தவன் அங்கு போனதும் "ஏனடா என்னைக் கூப்பிட்டாய்" என்று கேட்க 1-ம் எதிரி உடனே இடதுகையில் குத்தினார், அப்போது 2-ம் எதிரி அவனுக்கு முதுகில் கையிலிருந்தபலகையால் அடித்தார். அதன்பின் 1-ம் எதிரி ஓங்கி இறந்தவனது நெஞ்சில் குத்த அவன் கீழேவீழ்ந்தான். இதைக்கண்ணுற்ற விசுவலிங்கம் சம்மாலைக்கு ஓடிப்போய்ச் சில்லுக் கம்பொன்றை எடுத்துவந்து எதிரி கத்தியை இழுக்கும்போது தலையில் அடித்தான். இதனைக்கண்ட சின்னத்தங்கம் விசுவலிங்கத்தின்மீது கொடுவாட்கத்தியை ஓங்க அவன் அவளது தலையில் அடித்தான். பின்னர் நால்வரும் ஓடினார்கள். கதிர்காமுவாகிய எதிரி கத்தியையுங்கொண்டு ஓடினார். நானே முருகேசுவை விதானைவீட்டிற்கு அனுப்பினேன்.

மீண்டும் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும்பொழுது முன்னுக்குப் பின் முரணாகவும் அனேகவசனங்களைத் தாம் சொல்லாதிருக்க வழக்குக் கொப்பியில் காணப்படுவதாகவுங் கூறினார்.

அதன் பின்னர் அருணாசலம் முருகேசு மானிப்பாய்போலீஸ் ஸ்டேசனைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் D. H. R. A. கொறேயா முதலியோர்கள் சாட்சியங் கூறினர்.

அப்பால் நியாயவாதி திரு. S. D. தம்பு அவர்களும் நீதியரசரும் வழக்கைப் பற்றி எடுத்துரைத்ததின்மேல் ஜூரிக்கனவான்கள் சிறிது நேர ஆலோசனையின் பின்பு ஏகமனதாக 1-ம் எதிரி கொலைக் குற்றமல்லாத கைபிழை பாட்டுக் குற்றத்திற்குக் குற்றவாளியெனவும், 2-ம் எதிரி சுற்றவாளி யெனவும் கூறினர்.

அடுத்த நாட்காலை 11 மணியளவில் நீதியரசர் 1-ம் எதிரிக்கு 6—வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## தமிழ்ப் பிரவேச வகுப்பு

"நாவலர்"
சைவப்பிரகாச வித்தியாசாலை

ஷை வித்தியாசாலையில் 5-9-35 தொடக்கம் செவ்வாய்க்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் பின்னேரம் $4\frac{1}{4}$ மணி முதல் 6மணி வரை தமிழ்ப் பிரவேசவகுப்பு ஒன்று வைத்து, பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களால் வேதனமின்றிக் கற்பிக்கப்படும். இவ்வகுப்பில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் 7-ம் வகுப்பிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் படிக்கும் மாணவர்களும் ஆங்கிலக் கல்லூரிகளில் உயர்தரவகுப்பிற் படிக்கும் மாணவர்களும் சேர்ந்து படிக்கலாம். சேர விரும்புகிறவர்கள் 1-9-35 க்கு முன் அவ்வப்பாடசாலைத் தலைமையாசிரியர்மூலம் எனது விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டும்.

இங்ஙனம்
த. கைலாசபிள்ளை
மானேசர்

சைவப்பிரகாச வித்தியாசாலை
வண்ணார்பண்ணை
14-8-35

(23) 18-8-35—3

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ காற்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி - ௯. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ ஆவணிமீ ௨ (18-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி - ௭.


## அநுராசபுரம் - - - ஒளிகுன்றிக் கிடக்குந் தலைநகர்.

[சுன்னாகம், திரு ம. போ. கனகசபை அவர்கள் எழுதியது.]

ஏறக்குறைய இற்றைக்கு இரண்டு மாசங்களின்முன் அநுராசபுரத்துக்குச் சில நண்பர்களுடன் செல்லநேர்ந்தது. அப்பொழுதுபோசன் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாங்கள் புகைரதஸ்தானத்திலிருந்து நகரைநோக்கிச் செல்லுங்கால், வீதிகளில் பெரும் ஆரவாரங்கள் காணப்பட்டன. எங்கேபார்த்தாலும் தலைகளாகவே காணப்பட்டன. மற்றைய வருடங்களைக்காட்டிலும் இவ்வருடமே கூடிய தொகையான யாத்திரீகர்கள் தரிசித்தார்கள். இந்த யாத்திரீகர்கள் கைகளில் தாமரை மலர்களும், கமுகம்பூ முதலியனவும் கொண்டு "சாது, சாது" என்ற உச்சரிப்புடன் சென்றுகொண்டிருந்தார்கள். சைவாலயங்களில் திருவிழாக் காலங்களில் காணப்படும் நடவடிக்கைகளுக்கு இது முழு மாறாகவேயிருந்தது. சனக்கூட்டத்தில் ஒருவரையொருவர் தள்ளுவது அல்லது முழங்கைகளால் இடிப்பதுபோன்ற ஒழுக்கத் தவறுகள் இங்கு காணப்படவில்லை. இவர்களின் ஒழுக்கச் சாதுரியம் சைவர்களாகிய எம்மவரின் கண்களை விழிக்கச்செய்தது. நாங்கள் அங்கு யாத்திரீகர்களாகச் செல்லவில்லை. பழமைவிருப்பும் சரித்திரப் பற்றுடையாராகவே சென்றோம். அநுராசபுரம்-ஒளி குன்றிக்கிடக்குந் தலைநகர் என்பது எங்கள்கண் முன்னிருந்தது.

### பிறேசின் மாளிகை

பிறேசின் மாளிகை அல்லது லோவ மகா பாய என்னுமிடத்தையே முதற்றரிசித்தோம். இது துட்டகைமுனு என்னுமரசரால் கட்டப்பட்டது. இது தற்போது குட்டிச் சுவராகக் குன்றிவருகின்றது. தனிமையான கருங்கற் றூண்களே காணப்படுகின்றன. இவற்றில் சில நேராகவும், சில சரிவாகவும் சில முறிந்து துண்டங்களாகவும் காணப்படுகின்றன. மகிமை பொருந்திய மாளிகை எங்கே? ஏழடுக்குச் சாளர மண்டபங்கள்—பித்தளைத்தகடுகள் முதலிய இவைகளெல்லா மெங்கே? இவைகளெல்லாம் மறைந்துவிட்டன. ஆனால் துட்டகைமுனுவின் செய்கைகள் இலங்கைச் சரித்திரத்தில் என்றும் மங்காது துலக்கமாக வரையப்பட்டிருக்கின்றன.

### பரிசுத்த அரசமரம்

பரிசுத்த அரசமரம் மகாமேகத்தோட்டத்தில் நிற்கின்றது. இதை லட்சக்கணக்கான புத்தர்கள் வணங்குவார்கள். இதனுடைய தாய்மரத்தின் நிழலிலேயே கௌதம புத்தர் நிர்வாணபதவிபெற்றார். இதன் கிளையொன்று சங்கமித்தாவால் இந்தியாவினின்றுங் கொண்டுவரப்பெற்று மகிந்தாவால் இந்தத் தோட்டத்தில் நாட்டப்பட்டது. இந்த மரத்தின் கிளைகள் தங்கி நிற்பதற்கு இரும்புத்தூண்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளின்முன் நாட்டப்பெற்ற இம்மரம் இன்றும் சங்கமித்தாவினதும் புத்தபெருமானினதும் மகிமையை விளக்கியவண்ணம் நிற்கின்றது.

### மகா விகாரை

மகா விகாரை இந்த அரசமரத்தினருகேயுளது. இஃதோர் பெரிய கலாநிலையமாக ஒருகாலமிருந்தது. இதைச்சேர்ந்த வாசிகசாலையையுந் தரிசித்தோம். அங்கு சமய வழிபாட்டிற்குரிய உருவங்களும் சமயக் கொள்கைகள் எழுதப்பட்ட ஏடுகளும் ஏனைய பொருள்களுங் காணப்பட்டன.

### றுவான்வேல டஹோபா

துட்டகைமுனுவின் கட்டிடங்களுள் றுவான்வெல டஹோபா அல்லது மகா துப்பா என்பதும் பிரேசின் மாளிகையுமே அவரது ஆட்சிக்கு ஞாபகசின்னமாக விளங்குகின்றன. இந்த டஹோபா இரண்டாம்முறை திருப்பிக்கட்டி முடிவுபெறுகின்றது. கௌதமபுத்தர் இலங்கைக்கு மூன்றாம்முறை விஜயஞ்செய்தபோது தங்கிநின்ற இடத்திலேயே இந்த டஹோபா கட்டப்பெற்றதெனக்கூறப்படுகின்றது. செபஞ்செய்யுமிடத்தில் புத்தரின் உருவத்தைக்குறிக்கும் பெரிய கற்சிலையொன்று சிதைந்தநிலையில் காணப்படுகின்றது. சுவர்களில் சரித்திரசம்பந்தமான சில காட்சிகளின் சித்திரங்கள் காணப்படுகின்றன. இன்னொருபுறத்தில் துட்டகைமுனு கண்டுலா என்னும் குதிரைமீதும் எலாராவென்னும் தமிழரசன் தனது யானைமீதும் இருந்து போர்புரியும் காட்சியை விளக்கும் உருவங்கள் காணப்படுகின்றன.

### அபயகிரி விகாரை

அபயகிரிவிகாரை வாலகம்பாவால் கட்டப்பட்டது. இவ்வரசர் தமிழரின் கண்களிலகப்படாது தப்பி ஓடிக்கொண்டிருக்கும்பொழுது ஓர் சைவவேதியன் இவரைக்குறித்து "பாருங்கள், எப்படி அந்தப் பெரிய கருமைநிறமுடைய சிங்களன் ஓடுகிறானென்பதை" என்று கூறிப் பரிகாசஞ் செய்ததாகவும் அப்பொழுது அரசர் தான் திரும்பவும் தனது ராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளும் அதிஷ்டம் உடையவனாகில் ஓர் விகாரைகட்டுவானென நிர்ணயித்திருந்ததாகவும் அபய என்பது அரசனுடைய பெயரெனவும் கிரி யென்பது அந்த வேதியனுடைய பெயரெனவும் அவ்விரு பெயர்களையுங் கொண்டே அபயகிரியென இவ்விகாரை பெயர்பெற்றதெனவும் சரித்திரவாயிலாக அறியக்கிடக்கின்றது. இந்த விகாரையின்மீது நின்றால் அநுராசபுரத்தின் ஒருபெரும்பாகத்தைப் பார்க்கலாம்.

### லங்கராம டஹோபா

வாலகம்பாவே இதையுங் கட்டினார். இது தற்போது புதுக்கிக் கட்டப்பெற்று வருகின்றது. இது றுவான்வெல டஹோபாவுக்கு வடபுறத்தேயுளது. லங்கராம டஹோபாவுக்கும் தூபராம டஹோபாவுக்கும் இடையே ஓர் அழிந்துகிடக்கும் காளிகோயில் காணப்படுகின்றது. அவ்வழியே செல்லாநிற்பவர்கள் இலைகளைப்பறித்து ஓர் கயிற்றில் தூக்கிவிட்டுச் செல்வார்கள். சிலரிடத்தில் இதன் காரணத்தை நான் விசாரித்தபொழுது அவர்கள் அவ்வழியே செல்வதற்கு அத்தெய்வத்தினுத்தரவுபெற்றே செல்லவேண்டுமென்றும் அதற்கடையாளமாகவே இலைகளைப்பறித்து அவ்விடத்தில் வைத்துச் செல்வார்களெனவும் கூறினார்கள்.

### தூபராம டஹோபா

பின்னர் தூபராம டஹோபாவைத் தரிசித்தோம். இதுபோன்ற டஹோபா இலங்கையில் முன்னொருபோதுங் கட்டப்படவில்லை. இது கி. மு. 306-ம் ஆண்டில் தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தில் புத்தபெருமானது வலது மணிப் பூட்டெலும்பு தரிசனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

### எலராவின் சமாதி

பிறேசின் மாளிகைக்கும் பரிசுத்த அரசமரத்துக்கும் அருகாமையில் எலாராவின் சமாதியும் ஞாபகசின்னமுங் காணப்படுகின்றது. துட்டகைமுனு தனது தகுந்த எதிரியாகிய எலாராவைக் கொன்றபின் அவரது கட்டளைப்படி இந்த ஞாபகசின்னம் அமைக்கப்பட்டது. அவ்வழியே செல்பவர்கள் அமைதியாக வணக்கத்துடன் செல்லவேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டது.

### ஈசுறுமுனி

எலாராவின் சமாதிக்குச் சமீபத்தில் ஓர் கற்குகை காணப்படுகின்றது இதுதான் ஈசுறுமுனிக்கோயில். இந்தக் கற்பாறையினின்றும் திசவீவாவைப் பார்க்கலாம். இது தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்டது.

### மிகிந்தலை

அநுராசபுர நகரிலிருந்து 8½ மைல் தூரத்துக்கப்பால் மிகிந்தலைப் பாறை காணப்படுகின்றது. இதற்குக் காட்டுவழியாகவே செல்லவேண்டும். மிகிந்தலைக்குச் சென்றதும் மலையேறினோம். மலைச் சிகரத்தையடைந்ததும் ஓர் விகாரையைக்கண்டோம். அது தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. அழிந்தநிலையிற் கிடக்கும் புத்தரின் உருவமொன்றையும் விஷ்ணுவினதும் அவரது இரு துணைவிகளினதும் உருவங்களையும் கண்டோம். அதற்கருகேயுள்ள சுவரில் பிள்ளையார் உருவம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சிலநேரம் இழந்தென்றல்வீச ஆனந்தித்திருந்தோம். அப்பொழுது இருட்டறையில் வெளிச்சந் தோன்றியதுபோல் சரித்திரவாயிலாக நான் அவ்விடத்தைப்பற்றி யறிந்திருந்தவோர் விஷயமொன்று என்மனதிற் றோன்றியது. அந்தவிடத்திலேயே இராசவம்சத்தைச்சேர்ந்த மகிந்தாவென்னும் சமயதொண்டர் தேவநம்பியதீசனைச் சந்தித்துப் புத்தசமயத்துக்குத் திருப்பினதாக ஐதிகம்.

அநுராசபுரம் பண்டைக்காலத்தில் உலகிற் சிறப்புப்பெற்று விளங்கிய தலைநகரங்களிலொன்று. நகரை யலங்கரித்துக் கொண்டிருந்த மகிமைபொருந்திய மாளிகைகளும், பரிசுத்த அரசமரமும், டஹோபா, விகாரை என்னும புத்தாலயங்களும், தடாகங்களும், நீர்ப்பாய்ச்சும் வாவிகளும் இன்றும் உலகுக்கு அதிசயத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஈராயிரம் வருடங்களுக்குமுன் இதோர் நாகரீகமடைந்த நகராகவிருந்தது. அதிக பழமையான நகரசபை அநுராசபுரத்திலேயே யிருந்ததென்று சேர். பொன். அருணாசலமவர்களுந்தமது "இலங்கைச் சரித்திர"த்திற் கூறியிருக்கின்றார். அந்நாட்களில் அவர்களால் கையாளப்பெற்ற உருவங்களும், மட்பாத்திரங்களும், ஆயுதங்களும், கோப்பைகளும், தண்ணீர்ப் பாத்திரங்களும் அவர்களடைந்திருந்த நாகரீகத்தைக் குறிக்கின்றன. அநுராசபுரந் தொடக்கம் பொல்லநறுவையீறாக வீடுகளிருந்தனவெனவும் ஓர் சாவல் நிலத்திலிறங்காது வீட்டுக்கூரைகளிற் பறந்தவண்ணம் ஒரு நகரிலிருந்து மற்ற நகருக்குச் செல்லக்கூடியதா யிருந்ததெனவும் கூறப்படுகின்றது.

அநுராசபுரமே! உனக்கு என்ன சம்பவித்தது? காலன் உன்னைக் கவர்ந்துவிட்டானா? உனது மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் எங்கே? உனது ஞாபகசின்னங்கள் எங்கே? இங்கும் அழிவு, அங்கும் அழிவு, எங்கும அழிவாகவே காணப்படுகின்றது. தற்காலத்தில் பட்டங்கள் பெற்றிருக்கும் எஞ்சினியர்களைக்கூட அதிசயிக்கச் செய்யும் விகாரைகளும், வாவிகளும், நீர்ப்பாய்ச்சும் வாய்க்கால்களும அழிந்தனவா? செந்தழிப்பான நெற்பயிர்கள் விளைந்தவிடமெல்லாம் காடுகளாக மாறிவிட்டனவே! மிகச் சொற்பகாலத்துக்கு முன்னரே இவைகளையிட்டு அரசாட்சியார் முயற்சியெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நகரில் திருவிழாக்காலங்களைத்தவிர மற்றைக்காலங்களில் ஆரவாரங் கிடையா. எல்லாஞ் சோமபலாகவே யிருக்கிறது. ஆயினும் அநுராசபுரத்தின் பழமையும மகிமையும் மறைந்துபோகவில்லை இன்று இப்படியாகவிருக்கிறது அநுராசபுரம்—அழிந்து கிடக்கும் ஓர் தலைநகர்.

கதைப்பகுதி.

# உத்தம மனைவி.

(திரு. போன். குமாரவேற்பிள்ளை.)

(௬)

திங்கள் ஆறு சென்றன. மனோன்மணி மணாளனை விடுத்துவந்த நாட்டுவங்கி உவகைக்குரிய அறிகுறிகள் ஒன்றுமில்லாதிருந்த ஆலூர் மாசிலாமணிப்பிள்ளை இல்லம் இன்று மிகுந்த இன்பச்சாயல் உடையதாய் விளங்கிற்று. ஆண்களும் பெண்களும் இளையோரும் மூத்தோரும் பலர் ஆண்டெக் குழுமியிருந்தனர். எல்லார் முகத்திலும் புன்னகைப் பூக்கள் உவகைச் செந்தேனுடன் பொலிந்தன. "மெற்றிக்குலேஷன்" என்னும் ஆங்கிலத் தேர்வில் ஒருமுறையோ பலமுறையோ தோல்வியுற்ற இளைஞர்கள் ஒழிந்த ஆலூர் வாசிகள் யாவரும் அவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இவ்விழாவுக்குக் காரணமென்ன? சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுவந்த கண்மணி என்னும் பெண்மணியே இதற்குக் காரணம். இவள்தான் மாசிலாமணிப்பிள்ளையின் இரண்டாவது புதல்வி. இவளின் வருகையை ஆலூர் மக்கள் பலநாட்களாக எதிர்பார்த்திருந்தார்களாதலின் யாவரும் அன்று அங்குவந்து சேர்ந்தனர். அவர்கள் கண்மணியொடு உரையாடி அவளின் உயர்ந்த நோக்கத்தையும் அகன்ற அறிவையும் அறிந்துசென்றனர். பழமை பழமை எனப் பாவனை பேசுபவர்கள் சிலர் அவள்மீது சற்று வெறுப்புடையவர்களானார்கள். பெண்ணானவள் நாணமுவடையளாயிருத்தல்வேண்டும். இவள்தன்மை அளவிறந்தது எனப் பேசினருமுளர். பெண்கள் சிலர் அவளின் நடையுடைபாவனையில் ஈடுபட்டவர்களானார்கள். அவர்கள் அவளைப்போற் றும்செய்துபார்க்கு மாவலுடையராய்ச் சிறிதுநேரத்தில் தம் இல்லம் ஏகினர். காதிலும் கழுத்திலும் அதிகமான நகைகள் அணிதல் இயற்கையழகைக் குறைத்தலாகும் என அவள் கூறியது கேட்ட பெண்களிற் சிலர் உடன்றனே அந் நகைகளைக்கழற்றி மடியில் மறைத்தனர். மூக்கைத்துளைத்து நகையணிதல் நமது நாகரீகத்தின் பிற்போக்கு எவ்வளவென்பதை அளந்து காட்டும் நல்ல அளவுகோலாம் என அவள் கூறியதும் பெண்களிற் பலர் பழைய துளையை மறைத்தற்கு மருந்தெனவென யோசிக்கலாயினர். அவள் கண்பிறழத் தம் அறிவிழந்தவர்களானார்கள் சில இளைஞர்கள். அவள் புன்னகையால் நாணி நைந்தனர் பெண்கள் சிலர்.

மாசிலாமணிப்பிள்ளை வந்தவர்கள் யாவர்க்கும் முகமன் மொழிந்து உபசரித்தனர். மாலைப்பொழுதானதும் யாவரும் தத்தம் இல்லங்கட்கேகினர். மாசிலாமணிப்பிள்ளை இல்லத்தை ஆறு திங்கள் மூடிய இருள் பின்னரும் வந்தடைந்தது. மனோன்மணியும கண்மணியும ஒருவரை ஒருவர் தழுவிக் குழைந்தனர். இருவர் உள்ளமும் துயரநெருப்பால் உருகி நீராகிக் கண்வழியோடிற்று. மாரிமுத்தம்மையார் அறிவிழந்து ஓர்பால்கிடந்தனர். மாசிலாமணிப்பிள்ளை தனது கண்ணீர் மல்குதலை மற்றோர் காணாது மறைக்கத் தெண்டிக்கின்றார். இவர்கள் இங்ஙனம் கையறு நிலையில் வீற்றிருக்கப் பகல் கங்குலாகி மணி ஏழாயிற்று. பின்னர் ஆடவர் என்பதற்கேற்க மாசிலாமணிப்பிள்ளை எழுந்து "கழிவிரக்கம் கொள்வதனால் ஆம் பயனென்? கண்மணி, நீ இங்ஙனம் கலங்குவாயானால் உன் சகோதரி என்செய்வாள். நீயன்றோ அவளுக்குத் தேற்றரவு கூறல்வேண்டும். எல்லாம் விதியின்வண்ணம் நடக்கின்றன. நம்மால் எதனையாவது மாற்ற முடியுமா?" என்றார்.

இவ்வுரைகேட்டதும் மனோன்மணியைத் தழுவியவண்ணம் நின்ற கண்மணி விலகிவந்து உரமான குரலில், "அப்பா, நீங்கள்கூறுவது எல்லாவற்றுக்கும் பொருந்தாது. தொட்டதெல்லாவற்றுக்கும் "விதி விதி" எனக் கரைதல் எவ்வளவு இழிதகைமை. விதியென்றால் என்ன? மனித முயற்சிக்கு அப்பாற்பட்டதே விதியின்வண்ணம் நடத்தற்குரியது. மனிதனால் முடிக்கக்கூடிய யாவற்றையும் மனிதனேமுடித்துவிடல்வேண்டும். எல்லாவற்றையும்ஒருங்குசேர்த்து விதியின் தலையில்ஏற்றிவிட்டால் அப்பாழத்த விதிதான்என்செய்யும்" என்றாள்.

தனக்கிருந்தபேராசையே மனோன்மணியின் நல்வாழ்வுக்கு இடர்செய்தது என்னும் உணர்ச்சியுடைய மாசிலாமணிப்பிள்ளை அப்பால் ஒன்றுங் கூறாதிருந்தனர்.

"அப்பா, வெள்ளை உள்ளம் படைத்த என் சகோதரிக்கு ஒரு வஞ்சநெஞ்சினனை மணம்முடித்து வைத்தீர்களே! இது தகுமா! இதுமுறையோ! அவ் ஆடவனின் வஞ்சத்தன்மை அவன் முகத்தில் தழைத்திருக்கவில்லையா? அவன் கண்களில் கரவு புலப்படவில்லையா? அவ்வஞ்சப்பயல் நாசமுறுவானாக!" என்றாள் கண்மணி.

"இச்செய்திகள் யாவும் யாண்டறிந்தனை" என்றார் மாசிலாமணிப்பிள்ளை.

"ஐயோ! அப்படிச் சொல்லாதே! வீழ்ந்தாரை நசித்தல் திறனன்று. அவர் இன்று அல்லல்மிக்குடையராய்த் தெருத்தொறும் அலைந்து கொண்டிருக்கின்றனர் எனவும் பெண்ணொருத்தி அவரை ஏமாற்றி அவரிடமுள்ள ஒரு இலட்சம் ரூபாய்களையும் பற்றிகொண்டதுமன்றி அவரை உத்தியோகத்தினின்று விலகும் வண்ணமும் செய்துவிட்டனள் எனவும் கண்டோர் கூறினர்" எனக் கூறி மிச்சக் கண்ணீரையும் உகுத்தாள் மனோன்மணி.

"மற்றொரு பெண்ணை விரும்பி உன்னை இடர்க்கடலுள் வீழ்த்திய பதடியை நினைந்துருகும் நெஞ்சம் உன்னிடம் இன்னும் இருக்கின்றதா? மீட்டும் நீ உன் கணவனை யடைந்து வாழ்க்கை நடத்தாதிருப்பதற்கு அப்பெண்ணே காரணமென யான கருதுகின்றேன். அப்பெண் அங்ஙனம் செய்திராவிடின் செல்வமும் உத்தியோகமுமுடைய உன்கணவனிடம் நீ செல்வதறகு என்ன தடையுளது? உனது மூர்க்கநாயகன்மீது உனக்குக் காதல் இருக்கும்வரையும் நீ அப்பெண்ணைச் சபிக்கவேண்டியவளே. அப்பெண்ணை உனது நிலையற்ற நாயகன் எவ்வண்ணமும் ஏமாற்றலாம். அதற்காக நீ சற்றேனும் இரங்கிவிடாதே! உன்னை ஏமாற்றிய கயவன் யாரை ஏமாற்றினாற்றான் உனக்கென்ன? உன் கணவனொடு மீண்டும் சேர்ந்து வாழும் விருப்பம் உனக்குண்டேல் அப்பெண்ணை எவ்விதத்திலும் தேடிப்பிடித்து ஒரு இலட்சம் ரூபாய்களையும் அவனிடமே சேர்ப்பித்து விடுகின்றேன். உன் கருத்தென்ன?" என்றாள் கண்மணி.

"கண்மணி, சிதறிய என் உள்ளத்தை நடுங்கச்செய்யாதே. என் கணவனொடு என்னைச்சேர்ந்து வாழச்செய்தற்குரிய தன்மை ஒன்றும் என்னிடம் இப்பொழுதில்லை. அவற்றை அன்றே நீத்துவிட்டேன். ஒத்த உணர்ச்சியற்ற இருவர்களைத் தங்கள் நலங்கருதிப் பொருத்திவைக்கும் பெற்றோர் நன்னெறி யடையும்வண்ணம் தனித்திருந்தே என்காலத்தைக் கடத்த முடிபுசெய்துள்ளேன். பெற்றோர்களின் சுயநல எண்ணத்தால் பிள்ளைகளானோர்க்கு அல்லல்வரும் என்னும் உண்மைக்கு யான் ஒரு இலக்கியமாகத் திகழ விரும்பிவிட்டேன். எனது கொள்கை மக்கள் உள்ளத்தில் ஒரு புரட்சி எண்ணத்தை எழுப்பிப் பல பெண்களை இன்பவாழ்வு நடாத்தச்செய்யும் என்னும் எனது நம்பிக்கை ஒன்றே இவ்வுலக இன்பத்திலும் பன்மடங்கு இன்பத்தை எனக்கு அளிக்கக்கூடியதாயிருக்கின்றது. என் நாயகனினும் என் பெற்றோர்களே குற்றமுடையவர்கள். அவர்கள் தாங்கள் அடையவேண்டியவற்றை அடைந்து புனிதமுடையவர்களானார்கள். தங்களுக்கு உத்தியோகத்தன் ஒருவன் மருகனாக வரல்வேண்டும்என எண்ணினார்கள். அஃது அங்ஙனமேயாயிற்று. என்னால் யானடையவேண்டிய இன்பத்தை அவர்கள் அடைந்து மகிழ்ந்துகொண்டனர். யான் துன்பத்தைப்பெறவேண்டியவளானேன். யான் விரும்பினால் என் நாயகனை அடைந்துவாழத் தடையென்ன? என்னைத் தடுப்பவர் யார்? என்நாயகனொடு கூடிவாழ்தலைத் துன்பவாழ்க்கைஎனவும் தனித்து வாழ்வதை இன்பவாழ்க்கை எனவும் கருதிவிட்டேன். ஆனால் என் நாயகன் உண்ண உணவும் உடுக்க ஆடையுமின்றித் திரிகின்றனர் எனக் கேட்டபின்னர் துன்பத்தாற் சூழப்பெற்றேன். அவர் இன்னவிடத்திற்றான் நிற்கின்றார் என்பதை நன்கு அறிவேனேல் என்னிடமுள்ள ஐயாயிரம் பெறுமதியான நகைகளையும் விற்று அவருக்கு அனுப்பிவிட எண்ணியிருக்கின்றேன். அவர் நிற்குமிடத்தைக் கண்டு வந்து சொல்லுமாறு சில பெரியோர்களிடம் கூறியுள்ளேன்" என்றாள் மனோன்மணி. (தொடரும்)

சரித்திரப்பகுதி

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது]

# "இலங்கைச் சரித்திரக் கதைகள்"

[சுன்னாகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது.]

3

## நீதியிற்சிறந்த எல்லாள மன்னன்.

### I 'தமிழரின் முதலாம்படையெழுச்சி' அல்லது எல்லாளன் இலங்கையை வெற்றி கொள்ளல்

தீசன் இறக்க, அவன் தம்பியான உத்தியன் இத்தீவுக்கு அரசனானனென நாம் முன்னரே வாசித்துள்ளோம். இவனும் தன் முன்னோனைப் போலவே புத்தபெருமானிடத்திற் பக்தியுள்ளவன். இருந்தும், இவன் சில சமாதிகளைக் கட்டினனேயன்றி, சிறப்பான வேறு வேலைகளைச் செய்யவில்லை. இவன் கட்டுவித்த சமாதிகளில் மிகுந்தலை மலையிலுள்ள "அம்புஸ்தலை சமாதி"யே விசேடித்தது.

உத்தியனின் பின் அவன் இளையோரிற் சிலர் ஒருவர் பின் ஒருவராக அரசராயினர். அவர்களுந் தம் காலம் முழுவதையும் புத்த சமயத்திற்காகவே செலவழித்தனர். அரசியலில் அவர்கள் கவனம் குறைந்தது.

"அரசனெவ்வழி குடிகளுமவ்வழி" என்பதற்கிணங்கச் சனங்களும் சமய பத்தியிற் சிறந்து விளங்கினர். யுத்த வீரர் யுத்தப் பயிற்சியை விடுத்தனர். அவர்கள் கமக்காரராகவும், பக்தர்களாகவும் விளங்கினர். இப்படியாக அரசியல் வலிமை குறைவதினாற் றமக்குக் கேடு வருமென அரசர்களாவது பிரசைகளாவது சிந்தித்திலர்.

இங்ஙனம் அரசியல் சீர்குலைந்திருப்பதை ஏற்ற தருணமாகக் கொண்டு, சில பிரதானிகள் சிற்சில பகுதிகளைத் தமக்காக்கிச் சிற்றரசராயினர். அவர்கள் வலிமை நாளுக்குநாள் அதிகரித்தது. ஈற்றில், அரசனின் ஆணையை மீறித் தாமே அரசனாகவுஞ் சிலர் முயன்றனர்.

இதனை யறிந்த சூரத்தீசன் என்னும் அரசன், பிரதானிகளை யடக்குவதற்காக மலையாள தேசத்திலிருந்து இரு தமிழரை வரவழைத்தான். அவர்களும் படையுடன் வந்து கலகத்தை யடக்கினர். ஆனால், அந்தோ! அரசன் அவர்களை வரவழைத்ததால், சிங்களச் சாதியாருக்குப் பெருங் கேட்டைச் செய்து விட்டான். அரசியல் நிலைமையை அறிந்த அப்பாவிகள், மன்னனை மாய்த்துத் தாம் சிம்மாசனமேறினர். சிம்மாசனமேறி 22 வருடகாலம் இலங்கையை ஆட்சி செய்தனர்.

இவர்கள் சாதியில் தமிழர்; சமயத்தில் இந்துக்கள்; ஆட்சியிற் கொடியர். இவர்களாண்ட 22 வருடகாலமுஞ் சிங்கள சாதியாரும், புத்தசமயமும் அனுபவித்த இடுக்கண்கள்பல.

இப்படியாகப் பல துன்பங்களையும் அனுபவித்து வருங் காலத்தில் ஒருநாள் தீசனின் கடைசித் தம்பியான அசேலன் என்பான், ஒரு பெரும் படையைத் திரட்டி, அவர்களுக்கெதிராக யுத்தத்துக் கெழுந்தான். யுத்தத்தில் தமிழர் இருவரும் இறந்துபட, அசேலன் அரசனானான்.

அசேலனும் அரசனாகிப் பத்து வருடகாலம் அரசியற்றினான். அரசியலில் அசட்டை கொண்டதால், தம் முன்னோர் அடைந்த துன்பங்களை அசேலன் அறிந்து, இராச்சியத்தைச் சீர்ப்படுத்துவதில் ஊக்கங் கொண்டான். எவ்வகையாக ஊக்கப்பட்டும், செவ்வனேசீர்ப்படுத்தினான் அல்லன்.

இலங்கையின் சீர்கேட்டையறிந்த தமிழர், இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தனர். இப்படையெழுச்சிக்குச் சோழதேசத்து அரசகுமாரனான எல்லாளன் என்பான் தலைவனாகவிருந்தான். அவன் இலங்கையை அடைந்து, தள்ளாப் பராயத்தனான அசேலனைக் கொன்று தானே அரசனானான். முதலாவது முறையாக இந்தியாவிலிருந்து தமிழர் படையெடுத்து வந்தமையின் இப்படையெழுச்சியை, "தமிழரின் முதலாம் படையெழுச்சி," எனச் சரிதாசிரியர் கூறுநிற்பர். இப்படையெழுச்சியின் பயனாக மீண்டும் இலங்கை தமிழர் கைப்பட்டது. இப்படியே இன்னும் பல முறைகளில் தமிழர் இங்கு படையெடுத்து வந்து வெற்றி பெற்றனர்.

(தொடரும்)

அரசாங்கசபை வரவு செலவு விவாதம்

# வருடமொருமுறையாவது வாய்திறக்கச்சந்தர்ப்பம்

## "தேவைகளை வாயினல் நிவிர்த்திக்கும் தெக்ஷிணமூர்த்திகள்"

## தேர்தலை எண்ணித் தேவைகளைக் குறித்துப் பேசுவதற்கு ஏற்ற தருணம்

## வரவு செலவுக்குள் வந்த தேசீய ஞானம்

வாயாடிச் சோடியின் வக்கணை

## இந்தியா - இஞ்சி - இராமநாதன் கல்லூரி

## யாழ்ப்பாணத் தெருக்களும் ஆஸ்பத்திரிகளும் திட்டத்தில் குறைவு

(கொழும்பு நிருபர்)

கொழும்பு, ஆகஸ்டு 16.

அரசாங்க சபையில் வரவுசெலவுத்திட்ட விவாதம் ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்தின் மறுவருட செலவுத்திட்டத்தை இரண்டாம்முறை நிறைவேற்ற வேண்டுமெனச் சபை முதல்வர் பிரேரித்ததும் இவ்விவாதம் ஆரம்பிக்கும். தங்கள் தங்கள் கொள்கைகளை அவிழ்த்துவிடுவதற்கும் தங்கள் தங்கள் தேர்தல் தொகுதிகளின் தேவைகளை எடுத்துக்கூறுவதற்கும் அங்கத்தினர்களுக்கு இதுதான் வாய்ப்பான தருணம். அவர்கள் பொதுவாக, அரசாங்கசம்பந்தமான எந்த விஷயத்தைப் பற்றியும் பேசலாம். வருட முழுவதும் பேசாமடந்தைகளாக விருந்துவரும் அங்கத்தினர்கள்கூட இச் சந்தர்ப்பத்தில் எழுந்து தாங்கள் ஏற்கனவே எழுதி மனனம்பண்ணி வைத்திருக்கும் பேச்சுகளை நிகழ்த்துவார்கள். பொதுத்தேர்தலுக்குமுன் தங்களுடைய திறமையையும் தங்கள் தொகுதிகளில் தங்களுக்குள்ள சிரத்தையையும் காட்டுவதற்கு அங்கத்தினர் பெற்றிருக்கும் கடைசிச்சந்தர்ப்பம் இதுவானபடியால் இவ்வருட விவாதம் முந்தியவருட விவாதங்களைக் காட்டிலும் நீண்டதாயிருக்குமென நிச்சயமாகக்கூறலாம்.

பொதுவாக அரசாங்கசபை கூடும் வாரங்களில் கூட்டம் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமைவரை நடைபெறும். வெள்ளிக்கிழமை தவிர மற்றத்தினங்களில் கூட்டம் பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பித்து இரவு 7-30 மணிவரை நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில்மட்டும் கூட்டம் மாலை 6 மணிக்கு முடிந்துவிடும். ஆனால் சபையின் ஆயுள் குறுகிவிட்டபடியாலும் அது கலைபடுவதற்குமுன் பல விஷயங்கள் முடிவுகட்டப்படவேண்டியிருப்பதாலும் இவ்வருட வரவு செலவு விவாதத்தைப்பற்றிச் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. திங்கட்கிழமைகளிலும் கூட்டம் நடத்துவதற்கும் பிற்பகல் 2-30 மணிக்குப் பதிலாகக் காலை 10 மணிக்கே கூட்டத்தை ஆரம்பிப்பதற்கும் அங்கத்தினர்கள் ஒழுங்குசெய்திருக்கிறார்கள்.

### திட்டத்துக்குப் புகழ்

சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரவு செலவு விவாதம் ஆரம்பித்தது. இவ்வருடம் மொறட்டுவாப் பகுதிப் பிரதிநிதி திரு. W. A. டீ. சில்வா முதலில்பேசினர். இவர் சபையிலுள்ள முதிய அங்கத்தினர்களுள் ஒருவர். இந்துமதக் கல்வியை விருத்திசெய்வதற்காகச் சைவவித்தியாவிருத்திச்சங்கம் இருந்துவருவது போலப் புத்தமதக்கல்வியை விர்த்தி செய்வதற்காக விருந்துவரும் புத்தபிரம்மஞான சங்கத்தின்தலைவர் இவர். இவர் ஒருபெரிய செல்வந்தர். ஜயதிலகா, சேனநாயக்கா, W. A. டீ. சில்வா என்ற மூவருமே சிங்கள சமூகத்தின் "பெரியமூவர்" (The Big Three) சென்ற பொதுத்தேர்தலின் பின்பு இந்த மூவரும் மந்திரிகளாக வர முயற்சிசெய்தார்கள். வயதில் குறைந்த முந்திய இருவரும் வெற்றி பெற்றார்கள். நமது டீ. சில்வாவைமட்டும் ஜயதிலகரின் மைத்துனர் திரு. பத்துவந்துடாவை (ஸ்தலஸ்தாபன மந்திரி) தோற்கடித்துவிட்டார். இவருக்குப் புத்தமதக் கிரந்தங்களிலும் இலங்கையின் பண்டையவரலாற்றிலும் சிறந்த ஞானம் உண்டு. கமத்தொழிலிலும் பத்திரிகைத் தொழிலிலும் இவர் அதிக சிரத்தை எடுத்துவந்திருக்கிறார். சிலகாலத்துக்கு முன் நின்றுபோன "மோணிங்லீடர்" பத்திரிகை இவருடையதே.

சென்ற செவ்வாய்க்கிழமை வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி திரு. W. A. டீ. சில்வா பேசியபொழுது மந்திரி சபையினர் ஒரு சிறந்த திட்டத்தைத் தயாரித்திருப்பதாகவும், அதைத் திறமையான முறையில் சபைக்குச்சமர்ப்பித்ததற்காகத் திரு. சேனநாயக்காவைத் தாம் பாராட்டுவதாகவும், அதன் முக்கிய பிரேரணைகள் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் ஆதரவைப் பெறும் எனத் தாம் நம்புவதாகவுங் குறிப்பிட்டார். அவர் மேலும், இறந்தவர்களின் ஆதனங்கள்மீது விதிக்கப்படும் பூதல்வரி நீக்கப்படுவது விரும்பத் தக்கதென்றும், வருமானவரியையே இலங்கையின் பிரதான வரியாக்கவேண்டுமென்று திரு சேனநாயக்கா கூறிய யோசனையை அறிவாளிகள் யாவரும் ஆதரிப்பார்களென்றும், நீதிஸ்தலங்களில் விதிக்கப்படும் அபராதங்களைச் செலுத்தத் தவறுவோரைச் சிறைக்கு அனுப்பாமல் நீதிஸ்தலங்களிலேயே சிலமணித்தியாலங்களுக்கு மறியலில் வைத்தால் போதுமென்றும், கல்வி விஷயத்தில் பாடசாலைகளின் பிரதமாசிரியர்களுக்குத் தற்பொழுது இருப்பதைக்காட்டிலும் அதிக சுதந்திரம் அளிக்கவேண்டுமென்றுங் கூறினர்.

### தீவிரவாதியின் சினம்

இவருக்குப்பின் மொரவக்கைப் பகுதிப் பிரதிநிதி டக்ரர் S. A. விக்கிரமசிங்க பேசினர். திரு. டீ சில்வா ஒரு பழுத்த மிதவாதியென்றால் டக்ரர் விக்கிரமசிங்க ஒரு பெரிய தீவிரவாதி. உண்மையில் இவரை மிஞ்சிய தீவிரவாதி அரசாங்க சபையில் கிடையாது. இவர் ஒரு 'வாலிபர்; ஆங்கில மாதை மனைவியாகப் பெற்றிருக்கிறார். தேசீய உடை (வேட்டி, வெனியன், சால்வை) அணியும் ஐந்தாறு அங்கத்தினர்களுள் இவரும் ஒருவர். உலகின் பல பாகங்களில் இவர் சுற்றுப் பிரயாணஞ் செய்திருக்கிறார். ருஷியாவில் தற்பொழுது அனுஷ்டிக்கப்படும் அபேதவாதக் கொள்கையில் இவருக்கு அதிக பிரியம். பொதுவாக இவருடைய கொள்கைகளுக்கு அரசாங்கசபையில் அதிக ஆதரவு கிடையாது.

திரு. சேனநாயக்காவின் வரவு செலவு திட்டம் இவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. திட்டத்திலுள்ள பிரேரணைகள் மிகவும் பிற்போக்கானவையென்றும் அவை பொதுசன நன்மைக்கு மிகவும் பாதகம் விளைக்கக்கூடியவையென்றும் இலங்கையின் ராணுவப் பாதுகாப்புக்காகச் செலவு செய்யப்பட்டுவரும் தொகையை அதிகரிப்பதற்கு எவ்வித அவசியமும் ஏற்படவில்லையென்றும் பூதல் வரியை நீக்குவதற்கு முன் அதனல் சனங்களுக்குக் கஷ்டம் நேர்ந்திருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் இங்கிலாந்தின் கொடிய ஆட்சியால் துன்புற்றுத் தவிக்கும் இந்தியாமீது திரு. சேனநாயக்கா குறை கூறியிருக்கக் கூடாதென்றும், திரு. சேனநாயக்காவின் விவசாயத் திட்டங்கள் தவறிவிட்டனவென்றும் அவர் கூறினர்.

ஐரோப்பிய நியமன அங்கத்தினர்களிலொருவராகச் சமீபத்தில் நியமிக்கப்பட்ட திரு. சீ. ஜே. பிளாக் பின்னர் பேசினர். இவர் சொற்ப நேரத்தில் பல முக்கிய விஷயங்களைப் பற்றிப் பேசினர். வரவுசெலவுதிட்டத்தை இவர் பாராட்டி விட்டு நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தை விரைவில் ஆரம்பிப்பதன் அவசியத்தை வற்புறுத்தினர். இவருடைய பேச்சு முடிந்ததும் கூட்டம் மறுநாள் வரை பின்போடப்பட்டது.

### சர்வகலாசாலைக் கனவு

புதன்கிழமை அரசாங்கசபை கூடியதும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. நெவின்ஸ் செல்வத்துரை முதலில் பேசினர். அங்கத்தினர்களின் கவனத்தைக் கவரக்கூடிய முறையில் இனிய குரலில் பேசுவதில் இவர் பெரிய சமர்த்தர். சர்வகலாசாலை விரைவில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் அது கொழும்பில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் இவர் விரும்புகிறார். இக்தச் சர்வகலாசாலைப் பிரச்னையே தாம் அரசாங்கசபை அங்கத்தினராகவரத் தீர்மானித்ததற்கு முக்கிய காரணமாக விருந்ததென்று அவர் பலமுறை கூறியிருக்கிறார்.

நேற்று சர்வகலாசாலையைப்பற்றியே இவர் அதிகம் பேசினர். சர்வகலாசாலைக்காக ஒன்பது வருடங்களுக்குமுன் 30 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டபோதிலும், அப்பணத்தைச் செலவுசெய்வதற்கு இதுவரை நடபடிக்கை எடுத்துக்கொள்ளப்படாதது மிகவும் வருந்தத்தக்கதென்றும் சர்வகலாசாலையைக் கண்டியில் ஸ்தாபிக்க வேண்டுமெனப் பழைய சட்டசபை செய்திருக்குந் தீர்மானம் மாற்றப்பட வேண்டுமென்றும், கண்டியில் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் இடம் மலேரியாக்காய்ச்சல் வாய்ந்ததென்றும் சட்டக்கல்லூரி, வைத்தியக்கல்லூரி முதலியவை கொழும்பில் இருந்துவருகிறபடியால் சர்வகலாசாலையையும் கொழும்பிலேயே ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

### ஏழைகள்மீது பேச்சிரக்கம்

அவர் மேலும், பூதல்வரியை நீக்குவதற்குப்பதிலாக அதை வைத்துக்கொண்டு ஏழைகளுக்கு உதவிசெய்வது நலமென்றும், உடை விஷயத்தில் வரி குறைக்கப்பட்டிருப்பது போல உணவுவிஷயத்திலும் வரி குறைக்கப்படவேண்டுமென்றும், அரிசிமீது இப்பொழுது இருந்துவரும் 1 ரூபாய் தீர்வையை 20 சதத்தீர்வையாகக் குறைத்தால் சனங்களின் கஷ்டம் குறையுமென்றும் கூறினர். லைடன் தீவையும் மண்டைதீவையும் யாழ்ப்பாணத்துடன் தொடுப்பதற்காகப் பாலங்கள் கட்டவேண்டுமென்றும், நெடுந்தீவில் ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதற்கு உடன்பட்டதற்காகச் சுகாதார மந்திரிக்குத் தாம் நன்றிகூறுவதாகவும் கூறினர்.

### வாயாடிச் சோடி

அடுத்தபடியாகப் பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. G. G. பொன்னம்பலம் பேசினர். திரு. S. W. R. D. பண்டாரநாயக்காவுடன் வாய்ச்சண்டை நடத்துவது இவருடைய முக்கிய கடமைகளிலொன்றாக விருந்துவருகிறது. அரசாங்கசபையில் அங்கத்துவம்பெற்றகாலந்துவங்கி இவர் இக்கடமையைச் செவ்வனே ஆற்றிவருகிறார். இவர் ஏதாவது பேசினல் திரு. பண்டாரநாயக்கா உடனே எழுந்து இவரைக் கேலிபண்ண ஆரம்பித்துவிடுகிறார். திரு. பண்டாரநாயக்கா ஏதாவது பேசிவிட்டால் இவர் உடனே எழும்பிவிடுகிறார். இருவரும் பேச்சுவன்மை வாய்ந்தவர்கள். இருவரும் பரிஸ்டர்கள். இருவரும் அனேகமாக ஒரேவயதினர். இருவரும் மற்றவரைக்காட்டிலும் தான் செட்டிக்காரன் என்பதை நிரூபிப்பதில் கவனஞ்செலுத்திவருகிறார்கள்.

நேற்றுத் திரு. பொன்னம்பலம் முதலில் பேசியபடியால் அவரைத் தாக்குவதற்குத் திரு. பண்டாரநாயக்காவுக்குத் தருணம் கிடைத்தது. "கவனிக்கத் தகாதவரும் கொள்கையற்றவருமான பருத்தித்துறை அங்கத்தினர்" என்று அவர் தமதுபேச்சைத் துவங்கினர்.

வடமாகாணப் பிரதிநிதிகளுள் திரு. ஆனந்தத்தைத்தவிர மற்ற நால்வரும் வரவு செலவுத் திட்டத்தைக் குறித்து அரசாங்கசபையில் பேசிவிட்டார்கள்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஏறக்குறைய $2\frac{1}{2}$ மணிநேரம் பேசினர். அரசாங்கசபைப் பொக்கிஷசாலையில் பணம் நிரம்பி வழிந்தபோதிலும் பொதுசனங்களின் பணப்பெட்டிகள் வெறிதாகக் கிடக்கின்றனவென்றும், பூதல்வரியை நீக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும், யப்பான் துணிகள்மீது உள்ள தீர்வையைக் குறைக்காமல் பிறிட்டிஷ் துணிகளின் தீர்வையை மட்டும் குறைப்பதால் ஏழைகளுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாதென்றும், இந்தியாவிலிருந்து வரும் உணவுப்பொருள்களைக் கட்டுப்படுத்துவதால் ஆபத்து நேரிடக்கூடுமென்றும், கதிர்காம ஆலய நிர்வாகத்தைச் சீர்திருத்துவதில் இதர சமூக அங்கத்தினர் இந்து அங்கத்தினர்களுடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் அவர் கூறினர். முட்டைவிலை 100-க்கு 25 வீதம் ஏறிவிட்டதாக அவர் சொன்னபொழுது, திரு. செனநாயக்கா அது உண்மையல்லவென்று தெரிவித்தார்.

### இந்தியா இஞ்சி

திரு. சு. நடேசபிள்ளை பின்னர் $1\frac{1}{2}$ மணிநேரம் பேசினர். அவர், வரவு

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

ஒருவன் இல்வாழ்க்கையைத் தரும வழியாக நடத்துவானுகில், துறவறத்திற் போய்ப் பெறும் பயன் என்ன.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை - 3.

# நெடுந்தீவுக் கொலை வழக்கு.

## படுக்கையில் வெட்டி உமலில் பொதிந்து கடலில் கட்டிய வரலாறு.

## எதிரிக்குத் தூக்குத்தண்டனை.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 12

யாழ்ப்பாணம் சுப்ரீம் கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும், ஆங்கிலம் பேசும் ஜூரிக் கனவான்கள் முன்பாகவும், நெடுந்தீவு வாசியாகிய வைத்தியனாதர்—இராமனாதர் என்பவர்மீது சென்ற பங்குனி மாதம் 16-ந் திகதியளவில் அவ்வூர் வாசியாகிய சின்னத்தம்பி—வைததிலிங்கம் என்பவரைக் கொடுவாக் கத்தியால் வெட்டி அவரது மரணத்தை வருவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

J. V. செல்லப்பா (தலைவர்) K. அம்பலவாணர், M. J. இராசையா, M. சிற்றம்பலம், K. முருகேசு S. மருதமுத்து, V. துரைசுவாமிப்பிள்ளை முதலியோர்கள் ஜூரிக்கனவான்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகராவும், எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. T. C. இராசரத்தினத்தின் அநுசரணையின் பேரில் பிரபலநியாயவாதிகள் திரு. S. துரைசுவாமி தப்புவும், திரு. C. கனகரத்தினமும் திரு. H. கதிரவேலுவும் ஏற்பட்டனர். முடிக்குரிய நியாயவாதி நிகால்குணசேகரா அவர்கள் வழக்கின் சாராம்சத்தை ஜூரிக்கனவான்களுக்கு எடுத்துரைத்ததின்மேல் டாக்டர் V. தியாகராசா அவர்கள் சாட்சியங்கொடுத்தார். சாட்சியத்தின் சாசாராம்சம் வருமாறு:—

"நானே ஜூடிஷல் மெடிக்கல் ஆபீசராக நெடுந்தீவில் கடமைபார்த்து வருகிறேன். சென்ற பங்குனிமாதம் 20-ந் தேதியன்று மாலை 5மணியளவில் இறந்தவராகிய சி. வைத்தியலிங்கத்தின் பிரேதத்தைப் பரிசோதித்தேன். அப்பிரேதம் அவருடையது தானெனப் பெருமாள் ஐயம்பிள்ளையும், நெடுந்தீவு மேற்குப் பகுதிப் பொலிஸ் விதானை K. கந்தையாவும் அடையாளங் கண்டுபிடித்துக்கூறினர்.

பிரேதம் கடலில் 3 அடி ஆழமான இடத்தில் முகங்குப்புறக் கிடந்தது. இடதுகாலை மடித்து இடுப்புடன் சேர்த்து ஈர்வாணியாற் கட்டப்பட்டிருந்தது. இரு பாரியகற்கள் அரையின் இருபுறங்களிலும் கட்டப்பட்டிருந்தன. கழுத்தையும் புயத்தையும் சேர்த்துக் கடலிலுள்ள கல்லுடன் கட்டப்பட்டிருந்தது. கீழ் அலகும் முகத்தின் மிருதுவான பாகங்களும் காணப்படவில்லை. வலது பாதத்தினது தோலும் பிரிந்திருந்தது. பிரேதம் வெளிறி வெதும்பியிருந்ததுடன் அழுகல்பிடிக்கத் தொடங்கிவிட்டது. அதனது கையில் 4-அங்குல நீளமும் 2-அங்குல அகலமுமான "சரஸ்வதி" பச்சை குத்தப்பட்டிருந்தது. கயிற்றின் தழும்புகள் கையிலும் தோழிலும காணப்பட்டன. இறந்தவரது உயரம் 6-அடி 2-அங்குலம்.

காயங்கள்.

கழுத்தின் இடதுபக்கத்தில் முடிச்சுக்குக்கீழ் இரண்டு கூரிய கத்திக்காயங்கள் காணப்பட்டன. அவை இடதுபக்கத்துப் பெரிய இரத்தோட்டு நரம்பையும் மிடறையும் இரைக்குழாயையும் மிடற்று நாம்பையும் மற்றும் தசை முதலியவற்றையும் துண்டாக அறுத்துக் காணப்பட்டன பிடரியிலும் முன்னெற்றியிலும் எலும்புகளிலும் காயங்கள் காணப்பட்டன. ஆண்குறியின் நுனியும் வெட்டப்பட்டிருந்தது, காயங்களை உத்துநோக்கின் இரத்தப் பெருக்கின் காரணமாகவே மரணம் சம்பவித்திருக்குமென எண்ணுகிறேன். (காட்டப்பட்ட) இக்கத்திபோன்றதால் உண்டாகியிருக்கலாம். சரீரம் நாறத்தொடங்கியதால் வயிற்றில் மதுபானம் இருக்கிறதோ எனச் சொல்லவியலாது, மரணம் உடனேயே சம்பவித்திருக்கும். இறந்தவன் சத்தம்செய்திருக்கமுடியாது. கடலில் ஏறக்குறைய 90—மணித்தியாலம்வரையில் பிரேதம் கிடந்திருக்கும்.

அதன்மேல் நெடுந்தீவு வாசியாகிய இராமநாதர் சின்னத்தம்பி என்பவன் சாட்சியங் கூறுகையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"கடந்த பங்குனிமாதம் 16-ந் தேதியன்று இரவு 9-மணியளவில் நான் எனதுவீட்டில் சகோதரமுறை பூண்ட சின்னத்தம்பி என்பவருடன் அட்டாலையின்மீது படுத்திருந்தேன். எதிரி அங்குவந்து என்னைக் கூப்பிட நான் என்னகாரியம்எனக்கேட்டேன். சின்னத்தம்பியும் நித்திரையினின்று விளித்துக்கொண்டார். பின்னர் எதிரி தான் வைத்தியலிங்கத்தைக் கொலை செய்துவிட்டதாகவும் அப்பிரேதத்தைக் கடலுள் போடுவதற்காக வரும்படியாகவும் கூறினார். நான் வரமுடியாதெனக்கூற எதிரி என்னைப் பிடித்திழுத்தார். நான் கொலைநடந்த இடத்திற்குச் சென்றேன். அங்குள்ள ஒரு வாங்கின்மீது துணியால் மூடப்பட்டிருந்தது. துணிக்கு மேற்பக்கத்திலும் இரத்தக் கறைகள் காணப்பட்டன. அங்கு இருந்த ஓர் உமலை எடுத்து அதனது வாயை விரித்துப் பிடிக்கும்படி கட்டளைபண்ணினர். உடனே நான் அப்படிச்செய்ய முடியாதெனத் தெரிவித்தேன். பின்னரும் எதிரி கட்டாயப்படுத்தியதால் உமலை விரித்துப் பிடித்தேன். எதிரி சவத்தைத் துணிகளுடன் அதற்குள் தூக்கிப்போட்டார். அதன்பின்னர் நாங்களிருவருமாகச் சண்முகத்தினுடைய வீட்டிற்குச் சென்று அவனையும் கூட்டிவந்து பிரேதம் பொதிந்த உமலை ஓர் ஏர்க்காலில் வண்டிக்கட்டாக கட்டிக் கடற்கரைக்குக் கொண்டுசென்றோம். எதிரியே பிரேதத்தைக் கடலினுட் கொண்டுசென்று உமலினுள் இருந்த பிரேதத்தை வெளியே எடுத்து ஒரு கற்பாறையுடன் சேர்த்துக் கட்டினர். பின்னர் நானும் சண்முகமும் குளித்துவிட்டு எங்கள் எங்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டோம். நான் எதிரியிடம் "வைத்தியலிங்கத்தை என் இறக்கப்பண்ணினாய்" எனக் கேட்டபோது, வைத்தியலிங்கமென்னைக் கத்தியால் குத்த முயற்சித்தபையால் நான் அவரை வெட்டினேன்" எனக் கூறினர். (பார்த்து) இக்கொடுவாக்கத்தி வாங்கின் கீழ்க் கிடந்தது.

சாட்சி மீண்டுங் குறுக்கு விசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"இறந்தவர் மத்தியகல்லூரி ஆசிரியர் ஒருவர்க்கு அடித்தவர் என்பது உண்மைதான். ஓர்முறை நெடுந்தீவுக் கிராமச்சங்க அக்கிராசனராது மேடையில் தேங்காயை அடித்து உடைத்து வீண் கலவரத்தை உண்டாக்கியவர். அத்துடன் அங்குள்ள கரையார் சிலரை முழந்தாட்படியிட்டு நிற்கச்செய்தவர்.',

பின்னர் பிரேதத்தைக் கடலுக்குக் கொண்டுசென்றவர்களுள் ஒருவனாகிய நாகனாதர்-சண்முகம் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

சம்பவம் நடைபெற்றவன்று இரவு எதிரி என்னைக்கூப்பிட்டார். நான் வெளியேவந்தேன். அப்போது சின்னத்தம்பியும் நின்றார். உடனே அவர் தன்னைப் பின்பற்றும்படி எம்மிடம் கூற நான் கூடிக்கொண்டு வைத்திலிங்கத்துடைய வீட்டிற்குச் சென்றேன். சென்றதின்மேல் எதிரி வீட்டினுட் சென்று சிறிதுநேரத்தின்பின் உள்ளேவரும்படி அழைத்தார். நான் உட்சென்றதும் எதிரி கத்தியால் வெட்டி வைத்திலிங்கத்தைக் கொன்றுவிட்டதாகக்கூற நான் ஏன் அப்படிச்செய்தாயெனக் கேட்டேன். அப்போது எதிரி "தனக்குச்செய்த பிழைகளுக்காகவும் இறந்தவர் தன்னைக் குத்த வந்தபடியால் குத்தியதாகவுங் கூறினார். நானும்சேர்ந்தே பிரேதத்தைக் கடற்கரைக்குக் கொண்டுபோனோம். எதிரியே கடலினுள் பிரேதத்தைக் கொண்டுபோனார். பின்னர் எம்மையும் வரும்படி யழைக்க நாங்களுஞ் சென்று பிரேதத்தைக் கட்டினோம். பின்னர் நாங்கள் குளித்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டோம். அடுத்த நாள் எதிரி என்னைத் தோட்டத்தில் கண்டு வேலாயுதத்தைக் கூட்டிச் சென்று அங்குகிடக்கும் உமலை எடுத்து வரும்படி கூறினார். சிறிதுதூரத்திற்கு வேலாயுதம் சென்று நின்றுவிட்டார். அப்பால் உமல் எடுக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இச்சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்யப்பட்டதின்மேல் ஆறுமுகம்-மாரிமுத்து என்பவரையும் இறந்தவரது மனைவியும் எதிரியினது சகோதரியுமாகிய வள்ளியம்மையையும் வைத்தியனாதர்-ஆறுமுகத்தையும், சுப்பிரமணியர்-கணபதிப்பிள்ளையையும் விசாரணைசெய்யப்பட்டதின்மேல் நெடுந்தீவு மேற்கு பொலிஸ்விதானை கார்த்திகேசு-கந்தையா கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"கடந்த 17-ந் திகதியன்று வை. ஆறுமுகம் என்பவர் என்னிடம் வந்து 16-ந் திகதியன்று இரவு என்னுடன் கூடவிருந்து இராச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு அடுத்தநாள் வருவதாக உறுதிகூறிச்சென்ற வைத்திலிங்கம் வரவில்லையெனக் கூறினார். நான் அதனைப் பதிவுசெய்துள்ளேன். நான் வைத்திலிங்கத்தின் வீட்டிற்கு அருகே சென்று வேறொருவனைப் பார்த்துவரும்படி அனுப்ப, அவன் திரும்பிவந்து அங்கு ஒருவருமில்லை யென்பதாகத் தெரிவித்தான். பின்னர் 10 மணியளவில் நான் வைத்திலிங்கத்தின் மனைவியை அவளது தாயார்வீட்டில் சந்தித்துக் கேட்டபோது அவள் தான் சிலநாட்களாகத் தாயாருடன் வசித்துவருவதாகவும் 16-ந் திகதியன்று தான் கணவனைச் சந்தித்ததாகவும், யாழ்ப்பாணம் போகவேணுமெனச் சொன்னதாகவும் கூறினள். அடுத்தநாட் காலை நான் மணியகாரனுக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு அன்று சாயங்காலம் வைத்திலிங்கத்தின் வீட்டைச் சோதனைசெய்தேன். அப்போது அங்கு இரத்தக்கறைகள் படிந்திருந்தது. வாங்கு கழுவப்பட்டிருந்தது. நிலம் செதுக்கி மெழுகப்பட்டிருந்தது. 20-ந் திகதியன்று இறந்தவனுடைய சவத்தைத் தேடும்படி ஆட்களை அனுப்பினேன். நான் அனுப்பிய ஆட்களுள் ஒருவராகிய கணபதிப்பிள்ளை பிரேதத்தைக் கண்டுபிடித்தார். 20-ந் திகதியன்று சாயங்காலம் நான் டாக்குத்தருடன் கடற்கரைக்குச் சென்றேன். நானே பிரேதத்தைக் குறிப்புக் காட்டினேன்.

எதிரி நல்நடத்தையுடையவன். இறந்தவன் அனேகமாகக் குடித்துவிட்டுத் திரிபவன்."

அதன்பின் மணியகாரன் முதலியோர் சாட்சியங் கூறினார்கள்.

அதன்பின்பு எதிரியாகிய வைத்தியநாதர்—இராமநாதர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"சம்பவம் நடைபெற்றவன்று பகல் 2 மணியளவில் வைத்திலிங்கம் என்னைச் சந்தித்து வீட்டுக்கு வரும்படி கூற நான் பயமிகுதியினால் அவரது வீட்டிற்கு அன்றைய இரவு சென்றேன். என்னைக் கண்டதன்மேல் அவர் வில்லுக்கத்தியை விரித்து என்னைக் குத்தவந்தார். "உங்கள் புகையிலைக் கன்றுகளை வெட்டியது போதாது. அதைவிட அனேக இடுக்கண்கள் செய்யப்போகிறேன். உங்கள் யாவருடைய வீடுகளையும் தீக்கிரையாக்கப் போகிறேன். நான் ஒருவன்தான். நான் போகத் தயாராயிருக்கிறேன். விளக்கை நூாடா" எனச் சொன்னார். அவர் குத்தவர நான்குளறினேன், கும்பிட்டேன். அதனைக் கண்ட வைத்திலிங்கம் இந்த வில்லுக்கத்தியால் உன்னைக் கொல்ல முடியாது எனக் கூறிக் கூரையில் செருகியிருந்த கொடுவாக்கத்தியை எடுத்துத் தான் படுத்திருந்த வாங்கின் கீழ் வைத்துவிட்டுப் படுத்தார். என்னையும் படுக்கச்சொல்ல நானும் படுத்தேன். பின்னர் அவர் தட்டியை நீக்கித் துப்ப நான் இதுவே தகுந்த தருணம் என நினைத்துக் கீழே கிடந்த கொடுவாக்கத்தியை எடுத்து இரு கையினாலும் பிடித்து ஓங்கி வெட்டினேன். கழுத்தில்தான் வெட்டினேன். அத்தருணத்தில் எனது மனங் குழப்பமடைந்திருந்தமையால் எத்தனைமுறை வெட்டினேனெனவும் என்ன செய்தேனெனவும் தெரியாது. அதன்பின்னர் சின்னத்தம்பியை அழைத்துவந்து அவனது உதவியுடன் பிரேதத்தை உமலினுள் பொதிந்தேன். திரும்ப நாங்கள் இருவருமாகச் சென்று சண்முகத்தை அழைத்துவந்து மூவருமாகக் கடற்கரைக்குப் பிரேதத்தைத் தூக்கிச்சென்று கடலினுள் பிரேதத்தைக் கல்லுடன் கட்டினேன். பின்னர் எனது மாமனாகிய வேலாயுதரிடம் உமலை எடுத்து வரச்சொல்ல அவர்மறுக்க நானே அதனை எடுத்துவந்து எரித்தேன். இரத்தக்கறைகளை இல்லாது செய்தேன். இச்செய்கைகளைப் பய மிகுதியினால் ஒருவருக்கும் கூறாதிருந்தேன். காத்திராப்பிரகாரம் விதானையைக் கண்டு அவரிடம் கொடுவாக்கத்தியை எடுத்துக்கொடுத்து அவருடன் கூடிக்கொண்டு மணியகாரனிடஞ் சென்று எனது வாக்குமூலத்தைக் கொடுத்தேன்."

யாழ்ப்பாணம் 13.

இன்று கோடு கூடியதும் நியாயவாதி திரு. S. D. தம்பு அவர்கள் 50 நிமிஷ நேரமாக எதிரி தற்பாதுகாப்பிற்காகவே மேற்படி செயலைச் செய்ததாக அநேகமுறையாக வாதாடி ஓர் சொற்பொழிவு செய்தார். அதன்மேல் நீதியரசர் தமது அபிப்பிராயத்தைக் கூறினார். பின்னர் ஜூரிக் கனவான்கள் நீண்டநேர ஆலோசனையின் மேல் "எதிரி கொலைக்குக் குற்றவாளியெனவும், எதிரி வாலிப வயதுடையவனாயையாலும் இச்செயலுக்கு முன் நன்னடத்தையுடையவனாதலாலும் எதிரியின்மீது இரக்கங்காட்ட வேண்டுமென"வுங் கூறினார்கள்.

நீதியரசர் தீர்வையைக் குறிப்பிடு முன்னர் எதிரியாகிய இராமநாதர், "தான் வேண்டுமென்று கொலை செய்யவில்லையெனவும், தன்மீது இரக்கங் காட்டும்படியும்" வேண்டிக்கொண்டான்.

"வருகிற புரட்டாதிமீ 16உ திங்கட்கிழமையன்று கண்டியிலுள்ள போகம்பறைச் சிறைக்கூடத்தினுள் உன்னைத் தூக்கிலிடப்படும்" என நீதிபரசர் தீர்ப்புக் கூறினர்.

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

சென்றகிழமை யாழ்ப்பாணம் உதவி டிஸ்திறிக் நீதிபதியாகவிருந்த திரு. என். சின்னத்தம்பியவர்கள் ஓர் விவாக நீக்க வழக்கில் தீர்ப்பளிக்கும்பொழுது, விசாரணையில் சாட்சிகள் கூறிய சைவ சாஸ்திர விதிகளையுங் குறிப்பிட்டார். இந்த வழக்கில் வழக்காளி ஓர் துரைத்தனப்பள்ளித் தலைமையாசிரியரின் சகோதரி. எதிரி யாழ்ப்பாணத்திலுள்ளவோர் வழக்கறிஞர். வழக்கறிஞருக்கு மாறாக, அவரது மனைவி சார்பாகவே வழக்கு முடிவு பெற்றது. சாத்திர விதியின்படி கருமை நிறமுடைய பெண்களை விவாகஞ் செய்வது தருமமன்று என்றும் சில சாட்சிகள் வழக்கறிஞர் சார்பாகக் கூறினர்களாம். நீதிபதி, இந்த முறையைப் பார்க்குங்கால் தென்னிந்தியாவில் பெரும்பாலான விவாகங்கள் தருமமில்லாதனவாகவே முடியுமெனவும் பழைய விதிப்படிநின்றால், புதிய விதிகளுக்கு இடங்கிடையாதென்றும் தீர்ப்பில் கூறினர். நிற்க, இந்தச் சாட்சிக்காரர்களின் மனைவி மக்கள் என்ன நிறமுடையவர்களென்பதைக் கேட்க நீதிபதி மறந்துவிட்டார்போலும்.

* * *

## வைதீகம்

**வை**தீகமுறைகளைக் கடைப்பிடித்திருக்கும் இந்துக்கள் கடற்பிரயாணஞ் செய்வது மிகக்குறைவு. காரணமென்னவென்றால் சாத்திரவிதிகளையனுட்டிப்பதற்கு வசதிக்குறைவாகவிருக்குமென்பதே. தற்போது கல்கத்தாவிலிருந்து 250 வைதீக இந்துக்களை மாத்திரம் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஓர் யாத்திரையிற் கொண்டுசெல்வதற்கு புறம்பாக ஓர் மரக்கலம் ஒழுங்குசெய்திருக்கிறார்கள். இந்த யாத்திரையில் ஒவ்வொருவிஷயமும் இந்துசமயசாத்திர விதிப்படி நடத்தப்படுமாம். இவர்கள் தங்கள் பிரயாணகாலத்தில் வணங்குவதற்காக ஓர் விஷ்ணு கோவிலும் மரக்கலத்தில் வைத்திருக்கிறார்களாம். * *

## போதுசனசேவை

**அ**ரசாங்கசபை அங்கத்தவர்கள் அரசினர் செலவில் தங்களைச்சேர்ந்த சில்லறை விஷயங்களுக்குச் செலவில்லாது செய்தியனுப்புகிறார்கள் என்று சென்றகிழமை பத்திரிகைகள் கூறின. இவர்கள் வசதியான நேரம் தந்தியனுப்புவதற்காக சில செய்திகள் நான் குறித்துவைத்திருக்கிறேன். விரும்பியவர்கள் பார்த்துக்கொள்ளலாம்.

"கோழி இன்றைக்கு எத்தனை முட்டையிட்டது ?"

"ஆயாவுக்கு நேரமில்லாவிட்டால் பிள்ளைக்குப் பால்கொடுக்கும்படி கிளாக்கிடம் சொல்லு."

"கையிலிருக்கும் ஒரு கடிதம் ஆயாவிடமிருக்கும் இரு கடிதங்களுக்குச் சமானமாகும்."

"இன்றைக்குக் கல்லூரி விடுதலை விடவும்."

"பேசினபடி காசு தரலாம். ஆனால் 100 'வோட்' தரவேண்டும்."

"கடன்காரன் வந்தால் வருந் தெரிவு வரையில் பொறுத்திருக்கும்படி சொல்லு." * * *

## 500 ரூபா இனும்

சிலகாலத்துக்குமுன் பாலசூரியா என்பவரை வெளிக்கடைச்சிறைச்சாலையில் அதிகாரிகள் அடித்து, எலும்புகள் சிலவற்றை முறித்து வேதனைசெய்தார்கள் என்றவோர்புதினம் வெளிவந்தது பலரது ஞாபகத்திலுமிருக்கக்கூடும். இவர் சட்டத்திற்குட்படவேண்டியதல்லாத இவ்வேதனைக்குட்பட்டதனால் இவருக்கு இனமாக 500 ரூபா கொடுப்பதாகச் சென்றகிழமை அரசாங்கசபையில் முடிவுசெய்தார்கள். இச்சம்பவம் நடந்தபோது சுப்பிறீம் கோட்டுத் தலைமைக் கீழ் நீதியரசராகவிருந்த திரு. தொமஸ் கார்வினவர்கள் விசாரணைசெய்து அதிகாரிகளிலேயே குற்றமென்றும் அவர்கள் தாக்கியது உண்மையென்றும் தான் விடுத்த அறிக்கையிற் கூறினர். இந்த நீதியரசர் தற்போது இளைப்பாறிவிட்டார். நிற்க, பாலசூரியாவுக்கு அடிகாயம் பாரதூரமானதென அரசினர் வைத்தியராகவிருந்த டக்றர் இராசசிங்கமவர்கள் சாட்சிப்பத்திரமளித்த காரணமாக அவரது உத்தியோக மேலேற்றமுந் தடைப்பட்டதாம்.

* * *

## ஆனல், 50,000 பெறுமதி

**பா**லசூரியாவுக்கு 500 ரூபா இனமாகக் கொடுக்கும்பொழுது, நமது டக்றர் இராசசிங்கத்தின் செய்தி என்ன? அவருக்கும் மனம் சந்தோஷமாவதற்கு ஏதுஞ் செய்யவேண்டாமா? அதிகாரிகள் அநீதி செய்யும்போது இவர்களுக்கும் அநீதி செய்தார்கள். அதற்காகநட்டஈடுசெய்யும்போது இவர்களுக்கும் நீதிவழங்குவதே முறையாகும. நிற்க; பாலசூரியா என்பவர் சென்றகிழமை ஒருவரிடம் 500 ரூபா தனக்குப் போதியதல்லவெனவும், தனது காயங்கள் குறைந்தபக்ஷம் 50,000 ரூபா பெறுமதியுள்ளதெனவுங் கூறினராம். இவர் வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மத்தியபகுதிப் பிரதிநிதியாவதற்குப் போட்டிசெய்யும் நோக்கமுள்ளவராயிருக்கிறாரென்றும் எனக்கு ஓர் செய்தி கிடைத்திருக்கிறது. இச்செய்தியறிந்திருந்தால் திரு. குணசிங்கா இந்த 500 ரூபா இவருக்கு இனமாகக் கொடுப்பதற்கு அரசாங்கசபையில் சம்மதங் கொடுத்திருப்பாரா? என்றும் சிலர் கேட்கிறார்கள்.

* * *

## ஆரவாரம்

**பொ**துத்தெரிவு எப்போது நடைபெறுமென்று நிச்சயமாக இன்னுங் குறிக்கப்படவில்லையாயினும், இலங்கையின் தென்பகுதிகளில் பொதுத்தெரிவுக்குரிய ஆரவாரங்கள் தொடங்கிவிட்டன. மத்துகமப் பகுதிக்கு இதுவரையில் 5 அபேட்சகர்கள் வந்துவிட்டார்கள். தற்போது சபையிலிருப்பவர் திரு. அத்துலத்முதலி அவர்கள். ஆனல், நமதுகல்விப்பகுதி மந்திரியாருமஇப்பகுதியிற்றான் கண்ணோட்டத்துடன்நிற்கிறார். இவர்இதுவரையில் வேண்டிய உதவிபெற்று நிற்கிறாரெனச் சிலர் கூறுகிறார்கள். இவர் சோதிடத்திலும் பெரும் நிபுணர். ஒருசமையம் தெரிவுபெறாது உத்தியோகமற்றுநிற்பாராகில், மற்றச் சோதிடர்கள் வேறு தேசத்தை நோக்கவேண்டுமென்பதும் ஒரு சிலரின் கதை. அரசாங்கசபையில் நமது அத்துலத்முதலி சென்றகிழமை திரு. கன்னங்கராவை நோக்கி, இங்கிலாந்தில் டக்டர் பிரிஸ் என்பவர் வேண்டியிருக்கும் துப்பாக்கியைக்கொண்டு மததுகமாவில் கள்ள யானைகளையுஞ் சுடக்கூடுமோவென ஓர் கேள்வி கேட்டார். மந்திரியாரும் "முடியாது" என்று பதிலளித்தார். ஆயாவைத தபால் கொண்டுவரும்படி செய்தியனுப்பிய அங்கத்தவரும் அடுத்தமுறை நிச்சயமாகத் தெரிவுபெறுவாராம். * *

## யாழ்ப்பாணத்தில்

**யா**ழ்ப்பாணத்திலும் பொதுத்தெரிவை நோக்கி இரகசியமான ஆரவாரங்கள் நடைபெறுகின்றன. கொழும்பிலிருக்கும் அங்கத்தவர் ஒருவர் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணவிடுதிச்சாலையிற் காணப்படுகிறார். திரு. H. A. P. சந்திரசேகரா K. C., அவர்கள் முன்னரிலும் பார்க்கக் கூடிய தைரியம் பெற்றிருப்பதாகக் கூறுகின்றார். எல்லா விதமான தைரியமும் இவருக்கு இருக்கவேண்டுமென்பதே பெருமபாலாரினுடைய பிரார்த்தனை. இவர் இங்கிலாந்தில் ஒருமுறை நின்றபொழுது இவரை அபிசீனியச் சக்கரவர்த்தியென்றும் சிலர் பிழையாக எண்ணினர்களாம். முசோலினியை எதிர்த்துநிற்கும் சக்கரவர்த்தியாக மதிக்கப்பெற்ற திரு. சந்திரசேகராவுக்குத் தெரிவு — அதிலும் கத்தோலிக்கர் நிறைந்த பட்டினப்பகுதியில் — சுலபமாகவிருக்குமென்றே எல்லாரும் கூறுகிறார்கள். ஒரு பகுதிக்கு ஒருவர் மாத்திரம், அல்லாவிடில் 'மூனறுபேர்' என்றகதையுமொன்றிருக்கிறது. மற்றொரு பகுதிக்கு ஐந்து அல்லது ஆறும். இதில் ஒரு பகுதிக்கு ஒருவரும் வரமாட்டார்களென்பதே ஊர்க்கதை.

# இந்தியச் செய்திகள்.

## புத்தகாயா

புத்தகாயாவின் பரிபாலனத்தைக் குறித்து முன்னரே பல அபிப்பிராயங்கள் காணப்பட்டன. இந்து மகா சபையினரால் நியமிக்கப்பட்ட நிர்வாக சபையினர் புத்தசமயப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து ஆலோசித்து சில பிரேரணைகளை வெளியிட்டது யாவரும் அறிவர். இப்போது பீக்கானீர் சமஸ்தானத்திலிருந்து சஙகராச்சாரியார் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். புதத காயாவின் பரிபாலனத்தைக்குறித்துப் புத்தர் போதிய குறைகளை எடுத்துக்காட்டாதிருக்கும்வரையும் அதில் மாற்றம் ஏற்படுவது அவசியமில்லை என்கிறார். நான்கு இந்துக்களும் நான்கு புத்தரும் சேர்ந்த சபையினர் பொறுப்பில் புத்த காயா பரிபாலனம் விடப்படின் அதனல் பெரும் கெடுதியே வந்தெய்தும். இவ்விஷயமாகஓர்அறிக்கை ஷை சங்கராச்சாரியாரால்வெளியிடப்படும்.

## லாகூரில் வகுப்புக்கலகம்

லாகூரில் சீக்கியருக்குச் சொந்தமான 300 ஆடுகளை மகமதியர் கைப்பற்றிச் சென்றதின் நிமித்தம் பெரும் கலகம் நிகழ்ந்தது. இருபகுதியினரும் கத்திகள் பொல்லுகளுடன் கைகலந்து சண்டைசெய்தனர். 17 பேர் காயமடைந்தனராகக் கூறப்படுகிறது. அவர்கள் பரிதாபமான நிலையில் வைத்தியசாலையில் கிடக்கின்றனர். பட்டாளத்தினரும் பொலிசாரும் ஓடிச்சென்று கலகத்தை அடக்கிவிட்டனர். அநேகர் கைதியாக்கப்பட்டனர்.

## அப்துல் கபர்கான்

எல்லைப்புறக் காந்தியெனப்படும் அப்துல் கபர்கான் சென்ற சிலமாதங்களாக ஆமதபாத் சிறைச்சாலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். அவ்விடம் இவர் தேகாரோக்கியத்திற்கு இணங்காததைப் பன்முறை அரசினர்க்குத் தெரியப்படுததியதாகவும் அரசினர் அவ்விஷயமாக ஏதாவது நடபடிக்கைகள் கையாண்டாரில்லை. இப்போதுதான் உண்மையை அரசினர் உணர்ந்துள்ளார். இமயமலைச் சாரலிலுள்ள ராய்பெறலி என்னும் சுகஸ்தானத்திலுள்ள சிறைச்சாலைக்கு இவரை மாற்றியிருப்பதாக அறிகிறோம். மகாத்துமா காந்தியால் அனுப்பப்பட்ட மாதவதேஜாய் அவர்கள் இவரை ஆமதபாத்தில் சிறைச்சாலையில்தானே கண்டுபேசினர். எல்லைப்புறக் காந்தியவர்கள் சந்தோஷமுடையராகவும், ஆரோக்கியம் சிறிது திருத்தமடைந்தவராகவுங் காணப்பட்டாரென மாதவதேஜாய் பத்திரிகை நிருபருக்குக் கூறினராம்.

## விலகும்படி சொல்கிறார்

தற்போது அவுஸ்திரியாவில் வசிக்கும் சுபாஷ்சந்திரவஸு ஓர் அரிய புத்தி கூறுகின்றார். சர்வதேச சங்கத்தில் இந்தியாவின்பேரால் ஒரு அங்கத்தவர் உளர். இந்தியர் இச்சங்கத்தின் நிலைபேற்றின்பொருட்டுக் கொடுக்கும்பணமே பன்மடங்கு அதிகமானது. இந்தியா இச்சங்கத்தால் அடையும்பயன் சிறிதுமில்லை. இச்சங்கத்தினின்று இந்தியா விலகிவிடில் அதிக லாபம் உண்டாகும். எத்தனையோ நாடுகள் மேற்படி சங்கத்தினின்று விலகி நல்விருத்தியடைகின்றன. ஒரு தீமையும் அடைந்தில. யப்பானியர், ஜர்மனியர், பிறேஜில்நாட்டவர், இன்னுந் தென்னமரிக்காவிலுள்ள எத்தனையோ நாட்டவர் அச்சங்கத்தை விட்டுவிட்டனர். இந்தியரும் அதைக் கைவிடலாமே. இப்போது மேற்படி சங்கத்தில் சமுகமளிக்கும் பிரதிநிதியும் பிறிட்டிஷ் அரசினரால் குறிக்கப்படுபவரே. இந்திய மக்களின் உண்மைப் பிரதிநிதியன்று. இவைகளை நோக்குங்கால் இந்தியாவிற்குப் பிரதிநிதி அச்சங்கத்தில் தேவையின்று. இனிமேல் இந்தியப் பிரதிநிதி அனுப்பப்படாவிடின் அதிகபணம் மிகுதியாகும்.

## பெரிய நன்கோடை

இந்தூர் சமஸ்தான அரசர் இந்திப் பாஷையைத் தென்னிந்தியாவில் விருத்திசெய்வதற்காகவேண்டித் தொண்டாற்றும் பொருட்டு 5000 ரூபா நன்கொடையாகக் கொடுத்துள்ளார்.

## காங்கிரஸ் தலைவரின் தென்னிந்திய யாத்திரை

காங்கிரஸ் விஷயங்களைக் குறித்துப் பிரசாரஞ்செய்தற்காகக் காங்கிரஸ் தலைவராகும் பாபு இராசேந்திரப்பிரசாத் அடுத்த ஐப்பசி மாதம் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ்செய்வார். இவர்க்கு உபசாரஞ்செய்து வரவேற்பதைக்குறித்துப் பற்பலவிடங்களிலும் போதிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. பலஇடங்களிலும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படும். சென்னைநகரசங்கத்தில் காங்கிரஸ்தலைவர்க்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கும் நோக்கத்துடன் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அது நிறைவேறாதுபோனது பெருந்துக்கமே. தேசவிரோதிகள் அநேகர்நிறைந்த அச்சபையினர் வேறெவ்விதமாக முடிவு செய்வர். இப்போது ஜஸ்டிஸ் கட்சியினரே அச்சபையில் ஆதிக்கமுடையர். காங்கிரஸ்மீதுகொண்ட துவேஷத்தைப் பாபு இராசேந்திரப்பிரசாத் அவர்களிலும் சாட்டுகின்றனர் போலும்.

## சென்னைச் சட்டசபையின் காலம் மறுபடியும் நீடிக்கப்பட்டது

இந்திய அரசினரின் உத்தரவுடன் சென்னைச் சட்டசபையின்காலம நீடிக்கப்பட்டது. மூன்றுவருடத்துக்கொருமுறை தெரியப்படும் பிரதிநிதிகள் சென்ற ஆறுவருடமாகத் தமது ஸ்தானத்தில் வேரூன்றி விட்டனர். இப்போது அங்கத்துவம்வகிப்போர் சனங்களின் உண்மைப்பிரதிநிதிகளாகவிருப்பினும் ஒருபோது காலம்நீட்டியது அதிக நட்டத்தை வருவியாதிருக்கும். சுயநலப்புலிகளும், அரசினரின் ஆதரவை நாடுபவராகும் ஜஸ்டிஸ் கட்சியினரையும் கொண்ட சபையை நீடித்துப் பயனென்? இப்போது மேற்படி சபையைக் குலைத்துவிடின் காங்கிரஸ்வாதிகள் சபைக்குள் நுழைந்துவிடுவார். அதனல் பெருந் தொந்தரவு ஏற்படுமென அரசினர் எண்ணுகின்றனர்போலும்.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஹு ஆவணிமீ உவ

## நீக்கப்படுவது அவசியமல்லவாம்.

அரசினர் சனங்களிடமிருந்து வரியை எத்தனையோ விதமாக அறவிடுகின்றனர். சில வரிகள் நேரே அறவிடப்படுகின்றன. சில வரிகள் பொதுசனங்கள் அறியாதபடி தோலிருக்கச் சுளைகவர்ந்தவாறு அறவிடப்படுகின்றன. பொது சனங்கள் அரசினர்க்குத் தாம் கொடுக்கும் வரி மிகச்சிலவேயென எண்ணுகின்றனர். உள்ளபடி ஆராய்ந்து பார்க்கின் இலங்கையில் வசிக்கும் ஒவ்வொருவரும் அரசினர்க்கு வருடவீதம் சராசரி 30 ரூபாவுக்குக் குறையாது வரி கொடுக்கின்றுரென்றே கூறவேண்டும்.

சமீபத்தில் ஏற்பட்ட புதியவரி வருமான வரியாகும். வருட வீதம் 4800 ரூபா வருமானமுடையோரையே இவ்வரி ஆரம்பத்தில் பாதித்துநின்றது. இப்போது வருடவீதம் 2400 ரூபா வருமானமுடையோரையும் பற்றிப்பிடித்து விட்டது. இனி அடுத்தமுறை 1000 ரூபா வருடவீதம் வருமான முடையோரையும் பாதிக்கக்கூடும் இவ்வாறு இவ்வரியேற்பட்டதின் காரணமாக அரசிறை வருமானம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. அன்றியும் பணக்கஷ்டமும் சிறிது நீங்கியதால் பொருளாதார நிலைமையும் ஓரளவுக்கு நன்மையைநாடியதாகக் காணப்படுகின்றது இவற்றை மந்திரிமார் உற்றுநோக்கிச் சென்ற சிலவாண்டுகளாகப்பொதுசனங்களுக்குப்பெரும் அல்லலையுண்டாக்கிவந்ததும், மிகக் கொடியதாகயாவராலும் கருதப்பட்டதுமான ஒரு வரியை முற்றுக நீக்க ஒருப்பட்டனர். ஒருவர் இறந்தால் அவரது ஆஸ்தியின் பெறுமதியில் இன்னவீதம் அரசினர்க்கு வரியாகக் (Death Duties) கொடுக்கவேண்டு மென்பதே அதன் சாரம்.

இவ்வரியால் இலங்கைவாசிகள் அடைந்த துயரமும் சங்கடமும் சிறிதன்று. இவ்வரி நீக்கப்படலாமென வரவுசெலவுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்டிருப்பதைக்கண்டு யாவரும் பெருமகிழ்ச்சியெய்தினர். இவ்விஷயம் இப்போது அரசாங்கசபையில் விவாதிக்கப்படுகின்றது. இப்பிரேரணையைஎல்லா அரசாங்கசபையங்கத்தவரும் ஓரேமனதாய் ஆதரிப்பாரென எண்ணினேம். ஆனுல் இப்போதுஇதைநோக்குங்கால், சில அங்கத்தவர் இவ்வரி நிரந்தரமாக இருக்கவேண்டுமென்றும் சிலர் இவ்வரி சிறிது திருத்தப்பட வேண்டுமென்றும் கூறுகின்றனர். தேசப் பொதுமக்களின் உண்மை நிலையையும் இவ்வரி ஏற்பட்டமையால் நேர்ந்த குறைகளையும் நன்கறிந்த மற்றைய அங்கத்தவர் இவ்வரி முற்றுக நீக்கப்பட வேண்டுமென்றே வாதித்தனர்.

யாழ்ப்பாணப் பிரதிநிதிகளுள் ஒருவர் தவிர்ந்த ஏனையோர் இவ்வரி இருப்பதையே ஆதரித்தனர். அவருள் ஒருவர், இவ்வரி திருத்தப்பட வேண்டுமெனவும் கூறினர். யாழ்ப்பாணத்தின் நிலைமையை நன்கறிந்த இவர்கள் இவ்வரியை ஆதரித்து நிற்பதைக்கண்டு பிரமையடையவேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பொதுவாக நிலம்புலங்கள் அதிக வருமானத்தைக் கொடுப்பனவன்று. காணியின் விலை அதிகமாக விருப்பினும், அதனுல்வரும் வருமானமோ சிறிதுமில்லையென்று கூறினும்சாலும். ஒருவர் இறந்தகாலத்தில் அவரது காணிகளின்பேரால் வரி இறுக்கப்படவேண்டின், அதன் வருமானத்திலிருந்து இறுக்கக்கூடியதாகுமா என்பதை இவ்வங்கத்தவர்கள் நோக்காததேனே? பொதுவாகத் தத்துவச்செலவுக்காகக் காணிகளில் ஒருபாகம் விற்கப்படுவதும், இதனுல் அதிக நட்டமடைவோர் விதவைகளும், சிறு பிள்ளைகளுமேயென்பதனையும் யாவருமறிவர். அதிக வருமானமுள்ள காணிகளையுடையோர் ஒருபாகத்தை வரியாகக் கொடுப்பதாயின், அதனுல் பெரும் நட்டமின்று. ஏழைகளும், இயற்கை வளமும் குறைந்த யாழ்ப்பாணத்தில் இவ்வரியால் சென்ற இநபது வருடங்களாக யாழ்ப்பாணத்தவர் அடைந்த நட்டமும் கஷ்டமும் சிறிதன்று. இவ்வரி நீங்கின் பெரும் நன்மையுண்டாகுமென நாம் பன்முறையும் எடுத்துக்காட்டியுள்ளோம். மேலும், இவ்வரியை நீக்குவதால் ஏழைகட்கு நன்மை ஏற்படாதெனச் சிலர் வாதிக்கின்றனர். ஏழைகளுக்கு வேலையளிப்பவரும், உபகாரராய் உதவிபுரிபவருமாகும் தனவந்தரை நசித்துவிடின், ஏழைகளின் நிலைமை மேனிலையை அடையுமா? தனவந்தர் விருத்தியடைந்தாற்றுன் ஏழைகளும்நன்மையையடைவர். ஆகையால், இவ்வரி மிக அநீதியாகவிருந்து வருத்தும்வரையும் ஏழைகள் பாடு கஷ்டந்தான்.

அன்றியும், வருமானவரியும் தனவந்தரையே பாதிக்கின்றது வருமானத்தில் ஒருபாகமும், பின் இறக்கும்போது தமது ஆஸ்தியில் ஒருபாகமும் அரசினர்க்கு வரியாகக் கொடுக்கப்படின் பின் மிகுதி யாது? இருவழியிலும் ஒருவர் நட்டமடைவதை நாம் ஆதரிக்கவியலாது. பிரதானமாக அதிக வருமானத்தைக் கொடாத நிலங்கள் இருக்கும் யாழ்ப்பாணத்தில் தத்துவத்தின்பொருட்டுச்செலவாகும் பணத்தை எங்கிருந்து பெறுவது? நிலத்தை விற்றே பெறவேண்டும். ஆகையால், எப்படியாயினும் இக் கொடிய வரி நீங்க வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமும் நம்பிக்கையுமாகும். இவ்வரி நீக்கப்படுவது அவசியமென்பதைத் தேசநலத்தை நாடும் எவரும் மறுக்கமாட்டாரென்றே எண்ணுகின்றேம்.

## மாற்றம் அவசியமின்று

தற்போது அரசாங்கசபை யங்கத்தவரைத் தெரிவுசெய்யும்முறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்போவதாக முன்னர் கூறப்பட்டது. அவ்விஷயம் சென்றவாரம் அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டது. ஒரு பகுதிக்கு எத்தனை அங்கத்தவர் அபேட்சகராக வருகின்றுரோ அத்தனை பேருக்கும் ஒவ்வோர் நிறத்தினைக் குறித்து, அந்நிறப்பெட்டி அத்தனை பேருக்கும் தெரிவு நடத்தப்படும் இடங்களில் ஒரு அறையில் வைக்கப்படும். தெரிவாளர் தமக்குக்கொடுக்கப்பட்ட தெரிவுப்பத்திரத்தை (Ballot Paper) எப்பெட்டியில் தமக்குப்போடப் பிரியமோ அதனைப் போட்டுச் செல்வர். இதுவே சென்ற அரசாங்க சபைத் தெரிவில் கையாளப்பட்ட முறை. தெரிவுப்பத்திரம் பெட்டியில் போடுவதை எவரும் காணமுடியாது. இம்முறையில் சில இழுக்குகள் இருப்பதாகவும் அது திருத்தப்பட வேண்டுமெனவும் கருதப்பட்டது. வாக்குரிமைபெற்ற சிலர் தமக்குக் கொடுக்கப்பட்ட பத்திரத்தை எப்பெட்டிக்குள்ளாவது போடாது மறைத்து வெளியே கொணர்ந்து கூடிய விலைக்கு அதை விற்க அபேட்சகர் சார்பில் சிலர் விலைக்குவாங்கிப் பின் தமக்கு நம்பிக்கையுடையார் மூலமாக தாம் விரும்பிய பெட்டிக்குள் அதைச்சேரச்செய்தனராம். இதை நிற்பாட்ட எண்ணிப் போலும், அரசினர் புதிய ஒரு முறையை கொண்டுவர எண்ணினர். அதாவது எத்தனை அபேட்சகர்கள் முன் வருகின்றுரோ அத்தனை பேருக்கும் ஒவ்வோர் நிறத்தைக் குறித்துவிடுவர். பின் தெரிவு நடக்குங்கால் வாக்காளரிடம் ஒரு கடதாசி கொடுக்கப்படும். அதில் அபேட்சகர்களுடைய நிறங்கள் சதுரமாக அச்சிட்டு அதன் நடுவில் அவர்கள் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கும் வாக்காளர் இப்பத்திரத்தைப் பெற்று ஒரு அறைக்குள் கொண்டுசென்று தமக்கு விருப்பமானவரது கோட்டுக்குள் ஓர் புள்ளடியிட்டு பின் அதனை மடித்து வெளியே கொணர்ந்து தெரிவுத்தியோகத்தர் சமுகத்தில் அவர் முன் வைக்கப்பட்ட பெட்டிக்குள் போடவேண்டும். இத்தெரிவு முறையில் பெட்டி ஆக ஒன்றேயுளது. எல்லாரும் தமது பத்திரத்தைப் போடவேண்டும்; போடாது செல்லவியலாது.

இம்முறை ஏற்றதாகுமாவென்பது ஆராயத்தக்கது. தெரிவுக் கடதாசி பெட்டிக்குள் போடாது தடுத்தற்கே இப்புதிய முறை ஏற்பட்டதாகும். ஒருவர் தமது மடிக்குள் ஒரு கடதாசியை மடித்துக் கொண்டு சென்று தெரிவு கடதாசியைப் பெற்று அறைக்குள் சென்று அதை மடியில் வைத்து மற்றக் கடுதாசியை வெளியே கொணர்ந்து பெட்டிக்குள் போடுவது இயலாதா? இப்புதிய முறை மேலும் கல்வியறிவில்லாதவர்கட்கு பெருங் கஷ்டத்தை உண்டாக்கும். பென்ஸிலைக் கொண்டு குறித்த நிறத்துள் புள்ளடி போடுவதென்பது இலகுவான காரியமன்று. அநேகர் இதைப் பிழையின்றிச் செய்யவியலாதவராவர். ஆகையால் சென்ற தெரிவில் நடந்த மாதிரி நிறப்பெட்டிகள் வைத்து அவைகட்குள் விருப்பப்படி போட விடுவதே ஏற்றதாகும்.

## ஓர் உத்தம வித்தியாதரிசகரின் பிரிவு

யாழ்ப்பாணத்து வண்ணர்பண்ணையைச் சென்ன ஸ்தானமாகவுடையவரும், மட்டக்களப்புப் பகுதியில் மெதடிஸ் சபையின் கீழ் உபதேசியாராயிருந்தவருமான திரு. ஜோர்ச் வைரமுத்து அவர்களின் இரண்டாவது புதல்வனும், கொழும்பு ஆங்கில ஆசிரிய கல்லூரியிற் பயின்று, ஆசிரியராகத் தொண்டாற்றிப் பின்னர், வித்தியாதரிசியாக இரத்தினபுரி, மட்டக்களப்பு என்னுமிடங்களில் கடமைபார்த்து யாவராலும் நன்குமதிக்கப்பட்டவரும், தமிழில் பல நூல்களை மொழிபெயர்த்தும்,' புதிதாக இயற்றியும், கலா விநோதராயும், சிறந்த புத்தி சாதுரியம் நேர்மை ஆதியாம் சுகுணங்கள் வாய்ந்தவராயும் விளங்கிய திருவாளர் ஜே. ரி. வைரமுத்து அவர்கள் தமது 32-வது வயதில் மலேரியா என்னும் நோய்காரணமாகச் சென்ற 10-ந் திகதி சனிக்கிழமை 5 மணியளவில் மானிப்பாய் வைத்தியசாலையில் தேகவியோகமாயினர் என அறிந்து மிகத் துயருறலாயினேம்.

இவர், தெல்லிப்பழையைச்சேர்ந்த கட்டுவன் திரு. உவில்லியம்ஸ் வேலுப்பிள்ளை ஆசிரியரவர்களது நான்காம் புதல்வியான ஸ்ரீமதி. மேரி ஞானம்மா என்னும் பெண்மணியை மணந்து, இரு ஆண்மக்களையும் இரு பெண்மக்களையும் பெற்றவர். மட்டக்களப்புக் கொக்கட்டிச்சோலை டக்றர் திரு. ஜேம்ஸ் செல்லையா என்பவருக்கும், மட்டக்களப்பு ஆங்கிலபாடசாலை ஆசிரியர் திரு. வேதநாயகம் அவர்களின் மனைவியாருக்கும் சகோதரர். கல்வி விஷயமாக இவர் பல மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் செய்த உதவிகள் மிக மிகப் பலவாகும்.

இவரது மரணச் சடங்குகள் யாவும் மிக விமரிசையாகக்கொண்டாடப்பட்டது. பல வித்தியாதரிசகர்களும், போதகர்களும், நண்பர்களும் சமுகமளித்தனர். பிரேதசேமம் கிறிஸ்தவ முறைப்படி வீட்டிலும் சேமக்காலையிலும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இவர், கிறிஸ்தவராயினும், எம்மதத்தவருடனும் சகோதர பான்மையுடன் அன்புபாராட்டும் இயல்பும், பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையுமுடைய ஓர் உத்தமபுருடராய் விளங்கியவர். உடுவில் 'மான்' ஆங்கில வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராயிருந்தகாலத்தும், பின் வித்தியாதரிசகராகக் கடமைபார்த்த காலங்களிலும் நட்புமுறையில் எமக்குச்செய்த உதவிகளும் பலவுள. இவரது பிரிவு அவர் தம் மனைவி மக்கள் பெற்றுர் உற்றுருக்கேயன்றி அவரையறிந்த யாவர்க்கும் ஆருத் துயரத்தையே விளைக்கும். இவ்வுத்தம நண்பரின் பிரிவு குறித்துத் துயருறும் யாவர்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

## மதிப்புரை

### யவனமஞ்சரி

[இஃது யாழ்ப்பாணத்துப் பரித்தித்துறை ஸ்ரீமத் த. இராமநாதபிள்ளை B. A., அவர்களால், அரிஸ்தாதில் என்னும் கலைஞர் பெருமான் யவன பாஷையில் எழுதிய ஒழுக்கநூலின் ஆங்கில மொழிபெயர்ப்பி னின்று தமிழில் பெயர்த்தெழுதப்பட்டது. இதன்விலை ரூபா ஒன்று.]

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" எனப் பல்காலும் அறைகூவிச்சென்ற பச்சைத்தமிழன் பாரதியின் மறைமொழிக்கிணங்கத் திருவாளர் இராமநாதபிள்ளையவர்களின் அரிய தமிழ்த்தொண்டை நாம் மிகமிகப் பாராட்டுகின்றேம். இவ்வித அரிய பலநூல்கள் தமிழில் வெளிவருமாயின் தமிழ்க்கலை மென்மேலும் ஆக்கம்பெறுமென்பதற்கோர் ஐயமுமுண்டோ?

இவ்வரிய நூலின்கண்ணே; வாழ்க்கையின்நோக்கம், அறம், நீதி, அடக்கம், கேண்மை, அன்பு, இன்பம் முதலிய பத்துப் பகுதிகள் பல அதிகாரங்களாக வகுக்கப்பட்டு, ஒவ்வொன்றினதும் நிறை, முறை இயல்பு என்பன அளவைநூற் பிரமாணத்தையொட்டித் தர்க்கரீதியாக விளக்கப்பட்டுள்ளன.

இது, பண்டைய யவனபுரவாசிகளது தெய்வ வழிபாடு, தத்துவ ஞானம், நாகரீகம் முதலிய பல அறத்தாறுகளை விளக்கிச் செல்வதோர் சிறந்த நூலென்பதொருதலை. அறத்தாறிதுவென அறிந்து, ஒழுக்க நெறி நின்று, இவ்வுலக வாழ்க்கையிற் செம்மையுற்று, மேல்வரும் பேரின்ப வாழ்க்கைக்குத் தம்மைத் தகுதியுடையராக்குவோர்க்கு இவ்வொழுக்கநூல் பெரிதும் பயன்றருமென்பதே எமது துணிபு

இதன் மொழிபெயர்ப்பு, "சுருங்கச் சொல்லல்" முதலிய பத்தழகும் விரவப் பெற்று விளங்குவது பேருவகை தருவதாகும். "செந்தமிழ்" என்னும் அரிய சஞ்சிகையில் இது பகுதி பகுதியாக முன்னர் வெளிவந்தமையும், உயர்திரு சுவாமி விபுலானந்தா அவர்களின் அணிந்துரை பெற்றிருப்பதுமே இதன் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாகும்.

தருக்கநூலாராய்ச்சியும், தமிழ்ப் புலமையும் நிரம்பிய தெய்வத்தமிழ்த் திருவாளன் இராமநாத பிள்ளையவர்கள், மேற்புலத்தே தோன்றிய அரிய நூல்கள் பலவற்றைத் தமிழில் பெயர்த்துத் தமிழ்த் தாய்க்கு அணி பல புனைந்து மணிமுடி யணிந்து பல்லாண்டு வாழப் பரம்பொருளின் திருவருள் துணைபுரிவதாக.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்."

## வல்லைச் சிவப்பி வழக்கு

### 100 ரூபா அபராதம் அல்லது 6 மாதச்சிறை

யாழ்ப்பாணம் 12

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் டிஸ்திறிக்நீதிபதி திரு. ஸீ. குமாரசாமி அவர்கள் முன்பாக வல்வெட்டி வாசிகளாகிய (1) வீரன்—சுப்பன், (2) வேலன்—சுந்தரம் என்பவர்கள்மீது 15 வயதுப் பிராயமடைந்த சுவக்கி அல்லது சிவப்பி என்னும் குமரியைக் கடத்திச்சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. டபிள்யு. துரைசுவாமியும் நியாயவாதி திரு. T. R. நல்லையாவும் 1-ம் எதிரி சார்பாக நியாயதுரந்தரர் J. F. பொன்னம்பலமும் 2-ம் எதிரியின் சார்பாக அட்வகேட் V. ஜோசெப்பும் நியாயதுரந்தரர் K. மகாலிங்கமும் விவாதித்தார்கள்.

வழக்காளி பக்கச்சரிதையில் 2-ம் எதிரி சிறிது நேரமாக இச்சகம் பேசியதுடன் சிவப்பிக்குச் சவுக்காரம் முதலிய அநேக உபகாரங்கள் கொடுத்ததாகவும், சிவப்பியிடமிருந்த சவுக்காரத்தை அவளது தகப்பன் கண்டு எதிரியை எச்சரித்ததாகவும், சம்பவம் நடைபெற்றவன்று பெண்ணும் பெண்ணினது பெற்றோரும் படுக்கைக்குச் சென்றதின்மேல் 1-ம் எதிரி அங்குசென்று பெண்ணை எழுப்பி, அவளை 2-ம் எதிரி நின்ற இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், அப்புறம் 2-ம் எதிரி அவளைச் சந்தித்ததின்மேல் அவளைத் தனது வீட்டிற்குக் கொண்டு சென்றதாகவும், பெண்ணைக் காணாத தகப்பன் இரவு ஒரு மணியளவில் உடனேயே பொலிஸ் விதானைக்கு அறிவித்ததாகவும், விடிவதற்குச் சில மணிநேரத்தின் முன் விதானை பெண்ணையும் 2-ம் எதிரியையும் கைது செய்ததாகவுங் கூறப்பட்டது.

நீண்டநேர விசாரணையின் பின்னர் நீதிபதி 1-ம் எதிரியை விடுதலை செய்து 2-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதமும் தவறினால் 6 மாசச்சிறைவாசமும் அத்துடன் 200 ரூபாவில் 2-வருடத்திற்கு நல்நடத்தைப் பிணையும் எனத் தீர்ப்புக் கூறினார். ந-நி.

## வளர்த்த காளை வயிற்றைக் கிழித்துக் கொன்றது

வஹாகொடை எனும் கிராமத்தைச்சேர்ந்த கே. பி. நோனிஸ் அப்பு என்னும் ஒரு வயோதிபனை அவனுக்குச் சொந்தமான காளைமாடு சில தினங்கள்முன் வயிற்றைக் கிழித்துக் கொன்றுவிட்டது.

அவன் தனது தோட்டத்தில் மூர்க்கத்தனமான காளைமாடு ஒன்றை கட்டி வைத்திருந்தான். அம்மாடு கயிற்றை அறுத்துக்கொண்டு கோபாவேசத்துடன் அவனது வீட்டைநோக்கி ஓடிவந்தது. வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அம்மாடு கொன்றுவிடக்கூடுமோவெனப் பயந்து ஓடிச்சென்று மாட்டின் கயிற்றை அவன் பிடித்துக்கொண்டான். உடனே அது தனது எஜமான்மீது பாய்ந்து தன் கொம்புகளால் பலமுறையும் தாக்கியது. இதைக் கண்டதும் அவனது மனைவி பெருங்கூக்குரலிட்டாள்.

அக்கம்பக்க வீடுகளிலுள்ளோர் தடிகளும் கற்களும் கொண்டுவந்து மாட்டைத் துரத்தினர். நோனிஸ் அப்புவின் தோளும் முழங்காலும் முறிந்துபோயின. அவனது வயிறு விலாப்புறம் கிழிக்கப்பட்டுப் போயிற்று. ஒருமணி நேரத்திற்குள் அவன் மாண்டான்.

## அந்தோனியைக் கொன்ற அந்தோனி

### கரையூரில் நாடகம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கரையூர்வாசியாகிய மனுவல் அந்தோனி என்பவன் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டான்.

#### விபரம்.

கரையூரில் சென்ற திங்கட்கிழமையன்று இரவு ஓர் நாடகம் நடிக்கப்பட்டது. நாடகக் கொட்டகைக்கு முன்னால் சில்லறைச் சாமான்கள் விற்பனை செய்வதற்காக நிரந்தரமான ஓர் கடையைக் காலஞ்சென்ற அந்தோனி என்பவன் வைத்திருந்தான். நாடகம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் நாடகமேடைக்கு யாரோ கல்லால் எறிந்ததாகவும், அக்கற்களுளொன்று அந்தோனியினது கடையில் விழ்ந்ததாகவும் அதனைக்கண்ட அந்தோனி வெளியே வந்து "யாரடா கல்லால் எறிந்தவன்" எனக் கேட்டதாகவும், உடனே வைத்தி அந்தோனி என்பவன் காலஞ்சென்ற அந்தோனியினது தலைமுடியைப் பற்றிப்பிடித்துக்கொண்டு "எங்களைக் கேட்பதற்கு நீங்கள் யாரடா" என்று கேட்டதாகவும், இதற்கிடையில் சின்னத்தம்பி அந்தோனி என்பவன் மனுவலந்தோனி முதுகில் கத்தியால் குத்தியதாகவும், காயமடைந்த அந்தோனியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகவும், அங்கு அவன் தனது மரணவாக்குமூலத்தைக் கொடுத்ததின்மேல் இறந்ததாகவும், அறியக்கிடக்கின்றது.

இதனைக்கேள்வியுற்ற A. I. வைமன் ஸ்தலத்திற்குச் சென்று எதிரியைச் சிறைப்படுத்தி நீதிபதி முன்னிலையில் நிறுத்தினார்.

நீதிபதி ஸ்தலத்திற்குச்சென்று விசாரணைநிகழ்த்தியதன்மேல் மிகுதி விசாரணையை இம்மாதம் 20-ந்உ தவணையிட்டார். —நமது நிருபர்.

## கடலில் மிதந்த பிரேதம்

வெள்ளவத்தை ஸ்ரேஷனுக்கு அருகாமையிலுள்ள கடலில் ஓர் இளம பெண்ணின் பிரேதம் 16௨ மிதந்துகொண்டிருக்கக் காணப்பட்டது.

இறந்துபோன பெண்ணின் பிரேதத்தை அவளது சுற்றத்தார் அடையாளங் கண்டுகொண்டனர். அவளுக்கு வயது 20 என்றும் சிறிதுகாலமாக அவள் வீட்டிலிருந்து காணப்படவில்லையென்றும் கூறப்படுகிறது. இதுசம்பந்தமான மரண விசாரணை வெள்ளவத்தை பொலிஸ் ஸ்டேஷன் மைபச்சாலையில் நடைபெற்றது.

## தெல்லிப்பழை துவிபாஷா பாடசாலை.

பாடசாலை செப்ரெம்பர் மாதம் 10-ம் திகதி தொடங்கும். அனுதபிள்ளைகள் இங்கு சேர விரும்பின் விரைவாக விண்ணப்பஞ்செய்க. தமிழாசிரிய தராதரப் பத்திர வகுப்பும் இங்கு வைத்து நடத்தப்படும். விண்ணப்பஞ் செய்வோர் செப்ரெம்பர் 3-ந் திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்குக.

I. P. துரைரத்தினம்,
போசிரியர்.

## தேவை !

மேல்வகுப்புகளிலே இலக்கண இலக்கிய பாடங்களைத் திறமையோடு கற்பிக்கக்கூடிய அனுபவமுள்ள ஓர் ஆசிரியர் வேண்டப்படுகின்றார். கிறிஸ்தவராக விருந்தால் நலம். தகுதிப்பத்திரங்களுடன் 30-ந் திகதிக்குமுன்னர் விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

I. P. துரைரத்தினம்,
போசிரியர்.

(24) 18-8-35

## அரசாங்கசபை வரவுசெலவு விவாதம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டத்தில் ஏழைகளின் நன்மை கவனிக்கப்படவில்லையென்றும், பூதல்வரியை நீக்குவதால் பணக்காரருக்கே நன்மை விளையுமென்றும், இராமநாதன் கல்லூரி ஒரு சபையால் பரிபாலிக்கப்பட்டும், அதற்குப் பூதல்வரி கொடுக்கவேண்டுமென்றே சட்டத்தில் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதென்றும், ஏழைகளின் நன்மையைத் திரு. சேனநாயக்கா கருதியிருந்தால், அரிசி காய்கறிப் பொருள்களின் தீர்வையைக் குறைக்க முன்வந்திருப்பாரென்றும், இந்திய இஞ்சிமீது தீர்வையை உயர்த்தியதால் அதன் விலை 100-க்கு 75 வீதம் ஏறியிருக்கிறதேயன்றி இலங்கையில் இஞ்சி உற்பத்தி அதிகரிக்கவில்லையென்றும், இலங்கைக்குத் தேவையான நெல்லை ஒரே இரவில் இலங்கையில் உண்டாக்கிவிட முடியாதென்றும், ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்துகொள்ளவேண்டுமென்றும், கதிர்காம ஆலயத்தைத் தங்கள்வசம் மாற்றும்படி இந்துக்கள் செய்யும் வேண்டுகோளைச் சிங்கள அங்கத்தினர் அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்றும், இலங்கையின் நன்மையின்பொருட்டுத் தமிழ் அங்கத்தினர் மற்றவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்களென்றும் கூறினார்.

திரு. அ. மகாதேவா பின்னர் பேசுகையில், உணவுப் பொருள்களுக்காக இலங்கையிலிருந்து ஒவ்வொரு வருடமும் 5 கோடி ரூபாய் வெளியே போகிறதென்றும, நமக்குத் தேவையான உணவு முழுவதையும் இலங்கையிலேயே உற்பத்திசெய்யும் நோக்கத்துடன் செய்யப்படும் காரியங்கள் வரவேற்கப்படவேண்டுமென்றும், யப்பான் துணிக் கட்டுப்பாடு ஏகாதிபத்தியச் சலுகையோடு சம்பந்தப்பட்டதாயிருக்கிறபடியால்தான் மந்திரி சபையினர் அதுவிஷயத்தில் சகாயஞ் செய்ய முடியாமலிருந்தார்களென்றும், எனவே, அவர்கள் அடுத்தபடியாகப் பிறிட்டிஷ் துணிமீது உள்ள தீர்வையைக் குறைத்திருக்கின்றனரென்றும், பூதல்வரி நீக்கத்தின் பயனாகப் பணக்காரருக்குத்தான் நன்மை ஏற்படுமென்று கூறுவது சரியல்லவென்றும், இலங்கையில் ஏழைகளும், பரமஏழைகளுமே யிருக்கிறார்களன்றிப் பணக்காரர் இல்லையென்றும், இலங்கையரை ஏழை, பணக்காரர் என்று பாகுபடுத்துவோர் கிளர்ச்சிக்காரரென்றும் கூறினார்.

திரு. மகாதேவா மேலும் பேசுகையில், வடமாகாணத்திலுள்ள தெருக்களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்குமாகப் போதிய பணம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி வைக்கப்படவில்லையென்றும், சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெகு கேவலமான நிலைமையில் இருந்துவருகிறதென்றும், அசாதாரண வேலைகளுக்காகச் செலவிடப்படும் 70 லட்சம் ரூபாயில் யாழ்ப்பாண நகரத் தொகுதிக்காக 3,200 ரூபாய் மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் குறைகூறினார்.

## சத்சோதிட சபை

### பஞ்சாங்க முரண்பாட்டைப்பற்றி சத்சோதிட சபையார் தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள்.

#### கணித வகை

1. கிரகங்களுக்குக் கிரக ஒவ்வாமை முதலியவைகளால் ஏற்படும் "கதிபேதங்களை" அனுசரித்துச் சாயனரீதியாய்க் கிரியைசெய்து ஈற்றில் அயனும்சத்தைக் கழித்து நிரயனஸ்புடமடைதல்.

2. கிரக ஒவ்வாமைமுதலியவைகளால் ஏற்படும் "கதிபேதங்களை" அனுசரிக்காது அயனும்சத்தை ஆரம்பத்தில் கழித்துக் கிரியைசெய்து நிரயனஸ்புடமடைதல்.

#### ஆக்ஷேபம்

1. சாயனரீதியாய்க் கணிப்பதற்குக் காரணமென்ன?

2. நிரயனரீதியாய்க் கணிப்பதற்குக் காரணமென்ன?

3 இவைகளில் திருஷ்டிக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததெது?

4 ஆரியபட்டாசாரியாரது ஆரியசித்தாந்தை அனுசரித்து வருஷியாற் செய்யப்பட்ட வாக்கியசித்தாந்தத்தில் கிரக ஒவ்வாமை முத்லியவைகளால் ஏற்படும் கதிபேதங்களைச் சேர்க்காது விட்டதுக்குக் காரணம் யாது?

5. கிரஹணம் சாயனரீதியாய்க் கணிக்க வேண்டுமென்பதை எக்கட்சியினரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அவ்விதம் கிரகசாரத்திற்கேன் கணிக்கப்படாதென்பதற்குத் தக்க நியாயமென்ன?

6. பஞ்சாங்கங்களில் நக்ஷத்திரஹோரை, விக்ஷேபம், கிராந்தி முதலியவைகளைக் கணித்தாலென்ன?

7. யூறனஸ் (இந்திரன்) நெப்டியூன் (வருணன்) (புதிதாய்க்கண்டுபிடிக்கப்பட்டவை) பூமியை, பூமியிலுள்ள உயிர்களைப் பாதிக்குந் தன்மையுடையவைகளா?

#### பொதுவிஷயம்

1. கிரகத்திற்குக் கிரகம் சத்துருத்துவம், இராசிகளில் கிரகங்கள் சத்துருத்துவ மித்துருத்துவம் நூல்களில் விதந்துரைக்கப்படலால் அவைகளைப்பற்றித் தத்துவ சாஸ்திரத்திற் கிணங்க அத்தாட்சிப் படுத்துக?

2. தேசைக்கிரமம் தேசங்கடோறும் வித்தியாசமாயிருத்தலில் இந்த நாட்டில் அனுஷ்டிக்கும் மகாதசைக்கிணங்க "காலசக்கரதசைக்கு" எவ்வாசிரியரது கொள்கையை அனுசரிக்க வேண்டும்!

3. பலன் கூறுவதற்கு வேறு சிறந்த வழிகள் உள்ளனவாயின் அவை எவை?

4. சாயனரீதியாகப் பலன் கூறுவது பொருத்தமா?

5. பஞ்சபக்ஷி, எவ்வாசிரியரது கொள்கையை அனுசரித்தற்குரியது!

#### முகூர்த்தம்

1. வருட, மாத, வார, திதி, நக்ஷத்திர, லக்கின ஆரம்ப அந்தங்களில் முகூர்த்தங் கொள்ளலாமா?

2. விடியற்காலத்தில் சூரியோதயம் வரை விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம் முதலியவைகளுக்குச் சிறந்த காலமா?

#### பிறவிஷயம்.

1. பஞ்சாங்கத்தில் எவைகளை அனுசரிக்க வேண்டும்?

2. பஞ்சாங்கத்தில் எவைகளை விலக்க வேண்டும்.

3. பஞ்சாங்கத்தில் எவைகளைப் புதிதாய்ச் சேர்க்கவேண்டும்.

#### நூல்.

தெய்வங்கள், மகரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், வானசாஸ்திரிகள், இனனும் பலரால் வானகணித சித்தாந்தங்கள் காலத்துக்குக்காலம் ஏற்பட்டதற்குக் காரணம் யாது?

## மோட்டார் விபத்தால் ஆசிரியர் மரணம்

யாழ்ப்பாணம் 16

சென்ற 14ந்தேதியன்று இரவு 7-மணியளவில் வரணியைச் சேர்ந்த இடைக்குறிச்சி என்னுமிடத்தில் கைதடி வித்தியாசாலை ஆசிரியர் திரு. அருணாசலம் என்பவர் பைசிக்கிளில் செல்லுகையில் பரித்தித்துறை வாசியாகிய நீலவர்ணம் என்னும் டிறைவர் செலுத்திய H 571-ம் இலக்கமுள்ள ஏற்றும் மோட்டார் இரதம் தட்டிவீழ்த்தியதாகவும், அதனால் அருணாசலமென்பவரது தலையில் படுகாயமேற்பட்டதாகவும் பைசிக்கிளும் அதிக பழுதடைந்துவிட்டதாகவும் அவரைச் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லுகையில் அவரது உயிர பிரிந்ததாகவும், இது சம்பந்தமாகப் பொலிசார் புலன் விசாரித்ததாகவும், ஈற்றில் நேற்றையதினம் ஸப் இன்ஸ்பெக்டர் கொறேயாவும், பொலிஸ் கான்ஸ்டபிள் பெரியதம்பியும் பரித்தித்துறைக்குச் சென்று நீலவர்ணமென்பவனைத் தேடியபோது அவன் தனது சொந்த ஊருக்குப் பிரயாணஞ் செய்வதற்கெனப் புகையிரத ஸ்ரேசனுக்குச் செல்வதாகக் கேள்விப்பட்டுப் பொலிசார் பஸைப் புகையிரதஸ்தானத்திற்குச் சென்று அங்கு நீலவர்ணமென்பவனைக் கைதியாக்கி இன்று சாவகச்சேரிப் பொலிஸ் கோட்டில் ஒப்படைத்தார்கள். ந-நி.

சிறுவர் பகுதி

# சேர். தொமஸ் மூர்.

சி. த.

தொமஸ் மூர் என்பவர் ஓர் வழக்கறிஞனின் மகன். 1478-ம் ஆண்டு பிறந்தவர். பாடசாலை விட்டவுடன் கந்தபுரி ஆட்ச்பிஷப்புடைய சேவையிலமர்ந்தார். பிஷப்புக்குப் பையனுடைய புத்திக்கூர்மையிலும், சாமார்த்தியத்திலும் மிக விருப்பம்.

ஒக்ஸ்போர்ட்டில் படித்தபின்பு, மூர் என்பவர் சட்டமாணவனுயும், பாராளுமன்றஅங்கத்தவனுயும் வந்தார். எட்டாவது ஹென்றி சிம்மாசனமேறியதும், மூர் அவனுடைய பிரியா நண்பனுயினுர். "நைற்" பட்டமும் பெற்றுர். இவருடைய பழக்கவழக்கங்களும், சேவையும் மிக நேர்த்தியாயிருந்தமையால், அரசன் போசனம் முடிந்ததும், இவரையழைத்து சம்பாஷித்துக்கொண்டிருப்பான். இதனுல், வீடுபோவது கஷ்டமாயிருந்தது. ஆகவே கதைபேசுவதை யிவர் குறைத்தனர். அரசன் இவரை முன்போல அழைப்பிப்பதில்லை. எனவே மூர் வீடுபோக வசதியுங்கிடைத்தது.

மூர் என்பாருடைய இல்வாழ்க்கை மிகவும் சந்தோஷமானதும், செட்டானதுமாகும். தனது மூன்று குமாரத்திகளிலும் மிகுந்த அன்புடையவர். அவர்களை மிகக் கவனமாகப் படிப்பித்தார்.

அரசன் பிரான்சோடு யுத்தஞ் செய்வதில்லையெனத் தீர்மானித்தபோது மூர் மிகவும் சந்தோஷம் அடைந்தார். அரசனும் மூரும் மிகவும் அந்நியோந்நியமாக விருந்தனர். அரசன் மனைவி கதறைன் என்பவளை விவாகநீக்கம் செய்ய முயன்றபோது இவர் பிரதமநீதிபதியாயிருந்தார். அரசனது செய்கை பிடிக்காமையினுல், இவர் அப்பதவியைத் தாமாகவே துறந்தார். இவர் மிகவும் நேர்மையுடைய நீதியரசராக விளங்கினுர். கைக்கூலி வாங்கும் வழக்கம் இவரிடத்தில்லை. தனது சொந்தக்காரராயிருப்பினும், ஏற்றவராகக் காணப்படினன்றி உத்தியோகம் கொடுக்கமாட்டார்.

வேலையினின்றும் விலகியபின், இவர் செல்சீ என்ற இடத்திலே, குடும்பத்தோடும் அமைதியாக வாழ்ந்தனர். எட்டாவது ஹென்றி தனது மூத்த மனைவியின் விவாகநீக்கத்துக்கு இவர் மாறுயிருந்தமையால் இவர்மீது வெறுப்புக்கொண்டான். ஆகவே யிவர் மறியலிற் போடப்பட்டார். இதன்பின்பு ஹென்றியே மதத்தலைவர் என்றதோர் சட்டம் ஆக்கப்பட்டது. இதற்கு உடன்படாத எத்தனையோ குருமார் கொலைசெய்யப்பட்டனர். மறியற்சாலையிலிருந்து, இவர் இராசதுரோகமாகப் பேசினுரென்று குற்றஞ்சாட்டப்பட்டனர். வைஸ்ற்மினிஸ்றர் மண்டபத்தில் விசாரணை நடந்தது. இவருக்குக் கொலைத்தண்டம் விதிக்கப்பட்டது. ஒருவாரத்தின் பின்பு இவர் தூக்குமரத்துக்கு அழைக்கப்பட்டனர். இவர் ஏறும்போது தூக்குமரம் இவரது பாரத்தினுல் அசைந்தது. அங்கேயவர் முழந்தாட்படியிட்டுச்செபம் பண்ணினுர். பின்பு கொலையாளியைப் பார்த்து, "தைரியமாயிரு. உன்கடமையைச் செய்வதிற் ருமதியாதே. எனது கழுத்து மிகவும் குறுகியதாகையால், குறிதவற விடாதே" என்று புன்சிரிப்போடு கூறினுர். அவர் தனது தலையை அமைதியாகக் கட்டைமீது வைத்தார். பின்பு தலையை உயர்த்தித் தாடியை அப்புறப்படுத்திவிட்டு, ஒரு குற்றமும் செய்யாத இத்தாடி வெட்டுப்படுவது கூடாது" என்று கூறினுர். தான் அதிகமாக விரும்பிய தினத்திலேயே மூர் பரகதி அடைந்தனர்.

# கலம்பகம்

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெர்போன் நகரில் வருகிற செப்ரெம்பர் மாதம் நடைபெறும் பிறிட்டிஷ் வைத்தியர்களின் மகாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதியாக டக்டர் குணரத்தினம் குக் அவர்கள் செல்வாராம்.

o o

சோவியத் ருஷியாவில் ஒருவித மரத்தூளிலிருந்து மதுவகைகளும், சீனியும் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கிருர்களாம்.

o o

பருத்தித்துறையிலுள்ள ஒருவர் எறிவெடி வைத்துக் கட்டப்பட்ட ஒருபார்சலைக் கொண்டுபோனபோது கால்தவறிக் கீழேவிழுந்தார். அதனுல் பட்டாஸ் வெடித்துக் காயப்படுத்தியதால், அவர் மரணமடைந்தாராம்.

o o

சென்றகிழமை நீர்வேலிப் பிள்ளையார் கோயிலின் உற்சவத்தில் நடைபெற்ற வாணவிபத்துக் காரணமாக ஒருவர் உயிர்துறந்தாராம்.

o o

வாணிவாசியும் ஆசிரியருமான திரு. அருணுசலமென்பவர் தனது வீட்டுக்குச் சமீபமாக, தாசியரை ஏற்றிச்சென்ற மோட்டார் வண்டியினுல் தட்டுப்பட்டுப் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுகையில் இடைவழியில் உயிர்துறந்தாராம்.

o o

சென்ற திங்கட்கிழமை இரவு கரையூரில் ஒரு நாடகம் நடைபெற்றது. அந்த நாடகக் கொட்டகைமுன் கடைவைத்து வியாபாரஞ்செய்த மனுவேல்--அந்தோனி என்பவரை, வைத்தி-அந்தோனி, சின்னத்தம்பி-அந்தோனி என்னுமிருவரும் கத்தியால்குத்திக் கொன்றுவிட்டனராம். கொலைசெய்த இருவரும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனராம்.

o o

நீர்கொழும்பு செயின்ற் செபஸ்தியான் கோயிலில் குழப்பஞ்செய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கொழும்பு-செட்டியார் தெருவில்வசிக்கும் எட்டுப்பேரில், ஒருவருக்கு 60 ரூபா அபாரதமும், ஆறு பேருக்கு 30 ரூபா வீதம் அபாரதமும விதிக்கப்பட்டது. ஒரு எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

o o

சீனு தேசத்தில், புகைரதப்பகுதி, தொழிற்பகுதி, யுத்தப்பகுதி ஆகிய பகுதிகளின் மந்திரிகள் மூவரும் தங்கள் பதவிகளிலிருந்து விலகிவிட்டனராம்.

o o o

ஜப்பானிய யுத்த நிர்வாகத் தலைவரான மேஜர் ஜெனறல் நகட்டா என்பவர் தனது காரியாலயத்தில், ஒரு போர்வீரனுடன் ஒரு விஷயத்தையிட்டுக் கண்டித்துப் பேசிக்கொண்டிருக்கையில் வாளால்வெட்டிக் கொல்லப்பட்டாராம்.

o o o

சென்ற 1934-ம் ஆண்டில் இலங்கையில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக மாண்டிருக்கின்றனராம்.

o o o

சென்ற வருடம் 157 விவாகநீக்க வழக்குகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டுமென்றே புறக்கணிக்கும் வழக்கம் மற்ற இடங்களிலும்பார்க்க யாழ்ப்பாணத்தில் அதிகமாம்.

o o

அகில இந்திய ஹிந்திமகாநாட்டார் ஒருலட்சரூபாய் சேர்த்து மகாத்மாகாந்திக்கு அளிப்பதற்காக இந்தூர் சமஸ்தானுதிபதியிடம் பணங்கேட்கச் சென்றிருக்கின்றனராம்.

o o

புரோம் ஜில்லாவைச்சேர்ந்த பாடாங் கிராமத்தில் நடைபெற்ற ஒரு விவாகதினத்தில் ஏற்பட்ட கலகங் காரணமாக 4 பேரைக் கொன்றும் 7 பேரைப் படுகாயப்படுத்தியும் விட்டு ஓடி மறைந்து திரிந்த பொங்கி என்பவர் தற்போது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டாராம்.

o o o

கர்நூலிலிருந்து 30 பேருடன் சென்ற படகு ஒன்று துங்கபத்திரா நதியில் கவிழ்ந்ததால் அதிற்சென்ருேருள் 17 பேர் உயிர்துறந்தனர். ஏனையோர் நீந்திக் கரைசேர்ந்தனராம்.

o o

பம்பாயை அடுத்த அம்படிநாத்திலுள்ள மேற்கிந்தியத் தீக்குச்சித் தொழிற்சாலையில் 1000 தொழிலாளர் வேலைநிறுத்தஞ் செய்திருக்கின்றனராம். காரணம் 9 தொழிலாளர் வேலையினின்றும் நீக்கப்பட்டதேயாகும்.

ஹைதரபாத்தைச்சேர்ந்த சூரியப்பேட்டைத் தாலூகாவிலுள்ள திம்மபூர் கிராமத்தில் ஒரு பெண் தான் புதிதாகக் கட்டிய வீட்டில் புதையலிருப்பதாக அறிந்து அதை எடுக்க எண்ணி இருபெண்களைப் பலிசெய்துவிட்டாளாம்.

o o o

ஹொரானையைச்சேர்ந்த மோட்டர் பஸ் கொண்டக்றரான ஏ. மாட்டின் என்பவர் குறிக்கப்பட்ட அளவுக்குமேல் பிரயாணிகளை ஏற்றினுரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 50 ரூபா அபாரதம் விதிக்கப்பெற்றுர். இவர் இதற்குமுன் பலமுறைகளில் இதேவிதமான குற்றச்சாட்டுகளுக்குப் பெயர் மாறிக்கொடுத்துத் தண்டனை பெற்றவராம்.

o o o

சென்ற 10-ந்தேதி சென்னைத் தேசாதிபதி சட்டசபை மண்டபத்துக்குள் நுழையும்போது எல்லா அங்கத்தினரும் எழுந்து நிற்க, ஸ்ரீமதி ருக்குமணி லட்சுமீபதி என்னும் பெண் அங்கத்தினர்மாத்திரம் எழுந்து நிற்கவில்லை. காரணம், தேசாதிபதியைத் தான் இந்த மாகாண அரசியற்றலைவராக மதிக்கவில்லையென்பதாம்.

o o o

நீர்கொழும்பு செயின்ற் செபஸ்தியான் ரோமன் கத்தோலிக்க சபையைச்சேர்ந்த எட்டுப்பேர் கத்தோலிக்க சபைக்குக் கீழ்ப்படியாமல் நடந்துகொண்டதற்காகத் திருச்சபையினின்றும் நீக்கப்பட்டனராம்.

o o o

வரப்போகும் அரசாங்கசபைத் தேர்தலில் அபேட்சகர்களுக்கு வாக்களிக்க உரிமையுள்ள இந்தியர் யார் என்பதை விளக்கி இலங்கை இந்தியச்சங்கத்தார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனராம்.

o o o

பாட்னு என்ற இடத்தைச் சேர்ந்த சாடியா என்ற இந்துப்பெண்ணைப் பலாத்காரமாகக் கவர்ந்துசென்று விவாகஞ்செய்தார்களென மூவர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை நடைபெறுகையில், சாட்சியாகச்சென்ற குறித்தபெண் சாட்சிக்கூண்டில் பிரசவவேதனைப்பட்டதால் வைத்தியசாலைக்கு அனுப்பப்பெற்றுளாம்.

# பல திரட்டு

**குற்றம்:**—வெள்ளவத்தையைச் சேர்ந்த றிக்ஷோ கூலி ஒருவன் தெருவீதியில் நிர்வாணமாக நின்றதற்காகக் கொழும்பு முனிசிப்பல் கோட்டில் நீதிபதி ஆறு கிழமை கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

**மாற்றம்பெற்றுர்:**—யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உபபரிசோதகராக மூன்று வருடங்கள் வரையிற் கடமை பார்த்த திரு. டி. எச். ஆர். ஏ. கொறியா இரத்தினபுரிக்கு மாற்றப் பெற்றிருக்கிருர்.

**பிரிவு:**—சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்புப் பெண்களுள் மிகவும் மரியாதை பெற்றிருந்த ஸ்ரீமதி. நமசிவாயம் அவர்கள் தேகவியோகமாயினுர். இவர் தற்போது அரசினர் பணஈட்டுவங்கித் தலைவராகும் திரு. ஜெ. தியாகராசா அவர்களின் மனைவியாரின் தாயாராவர்.

**கயநோய்:**—இந்தியாவில் ஒருவருடத்திற்கு 300,000 பேர் கயநோய் காரணமாக இறக்கிருர்களாம்.

**லாகூர் விஜயம்:**—ஆங்கில நாடகாசிரியராகப் பேர்படைத்த திரு. பேனுட்ஷோ அவர்கள் மாணவமகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதற்காக ஒரு சமையம் இவ்வருடத்தில் லாகூருக்கு விஜயஞ் செய்வாரென ஓர் செய்தி கிடைத்திருக்கிறது.

**ஈழகேசரி:**—ஈழகேசரிப் பதிப்பாளர்மீது பொலிசாரால் தொடரப்பட்ட வழக்குச் சென்ற 15-ந் திகதி யாழ்ப்பாணம் அடிஷனல் பொலிஸ் நீதிபதிமுன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பகுதியும்பகுதியில் மொழிபெயர்ப்பாளர் திரு. வைத்திலிங்கமவர்கள் வாராமையால் வழக்குச் செம்டம்பர் 12-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

# அல்வாய்ப் பள்ளனின் கொலைவழக்கு

## தன்னைப்பாதுகாக்கவே துப்பாக்கியாற் சுட்டார்

### எதிரி விடுதலைசெய்யப்பட்டார்

யாழ்ப்பாணம், 12

பருத்தித்துறைப் பொலீஸ்கோட்டில் பொலீஸ் நீதிபதி திரு. C. F. போல் முன்பாக, அல்வாய்வடக்கு வாசியும் ஐக்கிய மலாய்நாட்டுப் பென்சனருமாகிய சுப்பர் வடிவேலு என்பவர்மீது சென்ற ஆடி மாதம் 10-ந் திகதியளவில் அவ்வூர் வாசியாகிய நாகன் சோமன் என்னும் பள்ளனைச் சுட்டுக்கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்புக்கூறப்பட்டது.

இந்நேரத்தில் கோட்டைச்சுற்றியனேகர் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எதிரி தற்பாதுகாப்பினிமித்தமே துப்பாக்கிப்பிரயோகஞ் செய்ததாகவும் அற்றேர்ணி ஜெனறல் அவர்கள் 'கட்டளைப்பிரகாரம் எதிரியை விடுதலை செய்வதாகவுங் கூறினுர். அத்துடன் நீதிபதி இறந்த பள்ளனின் சகாக்களாகிய சில பள்ளரையுங் கூப்பிட்டு எதிரியுடன் யாதொரு தொந்தரவுக்கும் போகக்கூடாதென எச்சரிக்கை செய்தார். ந—நி.

சிட்டுக்குருவி சத்தினுல் செய்யப்பெற்ற
**மின்சார லேகியம்**
சாப்பிடுங்கள்
ஒரேவேளையில் குணந்தரும்
48 நாள் டின் 1க்கு ரூபா **5-0-0.** வி. பி. வேறு
இனும்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனும்!
**எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,**
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)
கொளும்பு ஏசண்டு:
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ் ஸ்ரீட், கொளும்பு.
[(10) 14-7-35—12]

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—5.

# தெல்லிப்பழைக் கொலைவழக்கு

## மாமனைக் கோடரியால் வெட்டிய மருமகன்.

### அன்னம்மாவைக் கட்டித்தூக்கிய வரலாறு.

### தம்பிக்குப் பெண்கொடாமையே கொலைக்குக் காரணமாம்.

## எதிரிக்கு மரண தண்டனை.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம், 16.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும், ஆங்கிலம் பேசும் ஜூரிக்கனவான்கள் முன்பாகவும் தெல்லிப்பழைகிழக்கு வாசிகளாகிய (1) காசிப்பிள்ளை–இராசையா என்பவர்மீது கடந்த வைகாசிமாதம் 22-ந் தேதி அவ்வூர் வாசியும், பெண்கொடுத்த மாமனுமாகிய வல்லிபுரம்–நாகலிங்கம் என்பவரைக் கொலைசெய்ததாகவும், (2) முருகேசு–கந்தசாமி என்பவர்மீது மேற்கூறிய செயலுற்கு உடந்தையாகவிருந்து உதவிசெய்ததாகவுந் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதியும், எதிரிகளுக்காக நியாயதுரந்தரர் திரு. எச். ஆர். அரியகுட்டியின் அனுசரணையின்பேரில் நியாயவாதிகள் திரு. எஸ். துரைசுவாமி தம்புவும், திரு. கே. குமாரகுலசிங்கமும் ஏற்பட்டனர்.

முடிக்குரிய நியாயவாதி வழக்கின் விபரத்தை ஜூரிக்கனவான்களுக்கு எடுத்துக் கூறியதின்மேல் டாக்டர் கே. இராசா அவர்கள் இறந்தவரது உடம்பிற் காணப்பட்ட 10 காயங்களைப்பற்றி விபரமாகக் கூறினர்.

அதன்மேல் தெல்லிப்பழைவாசியாகிய தட்டார வகுப்பைச்சேர்ந்த இளையதம்பி–ஐயாத்துரை என்பவர் சாட்சியங் கொடுக்கையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:–

"இறந்தவராகிய நாகலிங்கத்தின் மூத்த மகளை நானே மணமுடித்தேன். 1-ம் எதிரியே இரண்டாவது மகளை மணமுடித்தார். இளையமகளாகிய அன்னம்மா என்னும் பெண்பிள்ளை இன்னமும் விவாகஞ் செய்யாதிருக்கிறாள். காலஞ்சென்றவரது வீடு பிரிக்கப்பட்டு ஓர்பகுதியில் காலஞ்சென்றவரும் அவரது மனைவியும் மற்றப்பகுதியில் எதிரியும் மனைவியும் அவர்களது சிறு குழந்தையும் வசித்துவருகிறார்கள். காலஞ்சென்றவர் பலவருடங்களாகச் சிங்கப்பூரில் தட்டாரவேலை செய்துவந்தவர். இறப்பதற்கு ஒருமாதத்தின் முன்னரே அவ்விடமிருந்து வந்தவர். சென்ற பங்குனிமாதம் 25-ந் திகதியன்று இரவு 9 மணியளவில் அன்னம்மா என்னும் பெண் தங்கள் வீட்டுப்பக்கத்திலிருந்து விளக்குக் கொழுத்தும்போது 1-ம் எதிரியின் சகோதரனாகிய செல்லத்துரை என்பவன் கட்டிப்பிடித்து இழுத்தான். இதைக்கண்ட அன்னம்மாவும் தாயும் கூக்குரலிட, அனேகர் வந்து பிடித்துவிடச் செல்லத்துரை ஓடிவிட்டான். பின்னர் அவனுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கைச் சமாதானப்படுத்தும்வண்ணம் 1-ம் எதிரி முயற்சித்தான். வாய்க்கவில்லை இச்சங்கதியைக் கேள்வியுற்ற தகப்பனாகிய காலஞ்சென்றவர் சிங்கப்பூரிலிருந்து இங்கு வந்தார். இச்சம்பவம் நடைபெற்றபின்னரே பெண்கடத்தல் வழக்கு முடிவடைந்தது. அவ்வழக்கில் செல்லத்துரைக்கு 2 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இது நடைபெறுவதற்கு 2–3 நாட்களின்முன்னரே 2-ம் எதிரியாகிய 1-ம் எதிரியின் மைச்சான் அங்குவந்து எதிரியுடன் தங்கியிருந்தார். அன்றையதினம் மல்லாகத்திற்குப் போவதற்காகச் சைக்கிள் எடுக்கும் வண்ணம் ஒழுங்கைவழியே சென்றேன். ஒழுங்கைச் சந்தியில் போகும்போது காலஞ்சென்றவர் வீட்டை நோக்கிப் போவதைக் கண்டேன். அவர் படலையடிக்குப் போனபோது 2-ம் எதிரி ஒழித்திருந்து பாய்ந்துபோய்க் காலஞ்சென்றவரைக் கட்டிப்பிடிக்க மறைவில் நின்ற 1-ம்எதிரி ஓடிவந்து கண்டகோடரியால் 3 முறை வெட்டினர். வெட்டுகள் வலதுகையிலும் விலாவிலும் பட்டன. உடனே நான் கூக்குரலிட்டுக்கொண்டு எனதுவீட்டுக்கு ஓடினேன். அதன்மேல் காலஞ்சென்றவர் நின்ற இடத்துக்குப் போனேன். அப்போது அங்கு அவருக்குப் பக்கத்தில் அன்னம்மா நின்றாள். எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின்னர் நான் பொலிஸ் விதானையிடஞ் சென்று வாக்குமூலங் கொடுத்ததின்மேல் அவரை அழைத்துவந்தேன். என்னைவிட எனக்குப்பின்னாகவந்த வீரகத்தி–இராசையாவும் இச்செயலைக் கண்ணுற்றார். விதானையே காயமடைந்தவராகிய எனது மாமனை வைத்தியசாலைக்கு அனுப்பினார். அன்று பொலிஸ் சார்ஜனுக்கும் வாக்குமூலங் கொடுத்தேன்."

மீண்டும் சாட்சி குறுக்குவிசாரணையின் போது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"எதிரியினது நாயை நான் துப்பாக்கியால் சுடாமலிருக்க அவரே என்மீது பொய்வழக்கை வைத்தார். சாவகச்சேரியில் கள்ளத்தனமாகச் சாராயம் விற்றதாக என்மீது வழக்குத்தொடரப்படவில்லை. ஆனால் 1 போத்தல் சாராயம் வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் ரூபா 10 அபராதங் கொடுத்தேன். நான் கொழும்பில் இருந்தபோது கள்ளத்தனமாக அபின் வைத்திருந்ததாக ஓர் வழக்குத் தொடரப்பட்டதேயாயினும் விடுதலை செய்யப்பட்டேன். நான் என்னுடைய சகோதரனாகிய கதிர்காமத்தம்பி என்பவனுக்கு ஒருமோட்டாரிரதம் கட்டுக்காசுக்கு எடுத்துக்கொடுக்க கட்டுக்காசு கட்டாததால் கம்பெனியார் காரைக்கொண்டுபோக எனது சகோதரன் நான் களவாகக் காரைக்கொண்டு போனதாக வழக்குவைத்தான். என்னிடத்திலாவது எனது வீட்டிலாவது அன்றையதினம் துவக்கு இருக்கவில்லை. சம்பவம் நடைபெற்றவன்றே நாயைச்சுட்ட வழக்கும் பெண்கடத்தல் வழக்கும் மல்லாகம் கோட்டில் தவணையிடப்பட்டிருந்தது. என்மீது நாயைச்சுட்டதாக அவர்கள் பொய் வழக்கு வைத்திருத்தலினால் நான் கோபிக்கவில்லை. இவ்வழக்கு 1-ம் எதிரியால் சோடிக்கப்பட்டது. அந்நேரத்தில் என்னுடைய கையில் பொல்லிருக்கவில்லை. எதிரியின் காயமாகிய பொல்லடி அடையாளம் எவ்விதம் வந்ததென எனக்குத் தெரியாது. இராசையா என்பவர் அன்னம்மாவைக் கல்யாணம்முடிக்கக் காத்திருக்கவில்லை."

அதன்பின்னர்க் குமர்ப்பெண்ணாகிய நாகலிங்கம் மகள் அன்னம்மாகொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் பின்வருமாறு:–

"எனது தந்தையார் சிங்கப்பூருக்குப் போனகாலத்தில் நான் எனது தாயாருடனேயே வசித்துவந்தேன். எனதுவீட்டின் ஓர்பகுதியில் எதிரியும் மனைவியும் மற்றப்பகுதியில் நாங்களும் இருந்தோம். செல்லத்துரையை எனக்குக் கல்யாணம் பேசியது தெரியாது. எனது தந்தையார் சிங்கப்பூரிலிருக்கும்போது ஓர்நாள் இரவு செல்லத்துரை என்பவர் நான் விளக்குக்கொழுத்திக்கொண்டிருக்கையில் என்னைக் கட்டிப்பிடித்து இழுத்தார். நான்குளறினேன். இதனைக் கேள்வியுற்ற எனது தாயாரும், எனது மூத்த சகோதரியும் எனது மாமன் இளையதம்பியும் அங்குவந்து அவனது காத்தைப் பிடித்து விடுவித்ததுடன் அவனைக் கலைத்துவிட்டார்கள். சம்பவம் நடைபெறுவதின் முன்னர் நான் மலவிமோசனம் செய்யப்புறப்படுகையில் கையில் கண்டகோடாரியுடன் 1-ம் எதிரியும் 2-ம் எதிரியும் வீட்டினின்று வெளியேபோவதைக் கண்டேன். சிறிது நேரத்தின் பின்னர் படலைப்பக்கமாகவும் கிழக்குப்பக்கமாகவும் கூக்குரல் கேட்டது. உடனே நான் தந்தையார் கிடந்த இடத்தடிக்கு ஓடிப்போனேன். அப்போது 1-ம் எதிரி கண்டகோடரியுடனும் 2-ம் எதிரியும் மேற்குப்பக்கமாக ஓடினார்கள். அப்பொழுது காலஞ்சென்றவர் பேசமுடியாத நிலைபரத்தில் அறிவுகெட்டுக்கிடந்தார். நான் ஒழுங்கைக்குப் போனபோது பேரனாகிய வல்லிபுரம் நின்றதைக் கண்டேன். நான் ஒழுங்கையில் நிற்கும்போது அத்தானாகிய ஐயாத்துரையும் வீ. இராசையாவும் வந்தார்கள்."

சாட்சி மீண்டும் குறுக்கு விசாரணையின்போது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:–

"நாயைச் சுட்டதாகக் கேள்விப்பட்டேன். 1-ம் எதிரி எனது இளைய சகோதரியை மணமுடித்தமை ஐயாத்துரைக்குப் பிடிக்காமையால் அன்றுதொடக்கம் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வதில்லை. பொலிஸ் விதானைக்கும் வாக்குமூலங் கொடுத்தேன். ஐயாத்துரை இம்மாதிரிச் சொல்லெனச் சொல்லித்தரவில்லை. எனது தந்தையார் ஓர்முறை என்னைக் கட்டிப்பிடித்த செல்லத்துரையின் கைவிரல்களில் மூன்றைக் கண்டகோடாரியால் வெட்டியது உண்மைதான்."

அதன் பின்னர் வீரகத்தி இராசையா, தெல்லிப்பளை கிழக்கு விதானை, பொலீஸ் சார்ஜெண்ட் செல்லையா, வேலாயுதம் முதலியோர் காட்சியங் கூறியபின் வழக்காளிபக்க விவாதம் முடிவடைந்தது.

### எதிர்பக்க விவாதம்

இவ்வழக்கின் 1-ம் எதிரியும் இறந்தவனது மருமகனுமாகிய காசிப்பிள்ளை இராசையா என்பவர் கொடுத்தவாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

"எனது வயது 28. நான் அல்வாயில் வசிப்பவன். எனது மனைவி தெல்லிப்பளையில் இறந்தவரது வீட்டில் வசித்துவந்தாள். எனது தொழிற்சாலை அவ்வாயிலிருக்கிறமையால் அவ்விடமிருந்து கொண்டு மனைவியிடமும் வந்து போவது வழக்கம். சடங்கு முடித்த நாள்தொடக்கம் ஐயாத்துரை என்மேல் கோபமாகவே இருக்கிறார். சம்பவம் நடைபெற்றதற்கு முதல் நாள் நானும் கந்தசாமியும் (2-ம் எதிரி) அல்வாயிலிருந்து தெல்லிப்பளைக்குப் போய் எனது மனைவி இருக்கும் வீட்டிலேயே தங்கினோம். அன்றிரவு அவ்வீட்டிலுள்ள விறாந்தையில் நாங்கள் இருவரும் நித்திரை செய்தோம். எனது மனைவி அறைக்குள் படுத்திருந்தாள்.

மறுநாட்காலை நான் நித்திரைவிட்டெழுந்து மலசலங்கழித்த பிறகு வெளியே சென்றேன். படலைக்கூடாக ஒழுங்கையில் சென்றவுடன் நாகலிங்கமும் ஐயாத்துரையும் என்னைத் தாக்கினார்கள். ஐயாத்துரை ஒரு பொல்லால் பலதரம் அடித்தார். நாகலிங்கம் கொடுவாக்கத்தியால் என்னை வெட்டினார். நான் அவருடைய வெட்டுகளைக் கையால் தடுத்தேன். பின் கத்தியை அவர் கையிலிருந்து பறித்தேன். பின் ஐயாத்துரை தனது கையிலிருந்த பொல்லை நாகலிங்கமிடம் கொடுத்தார். அவர் என்னை அடிக்கும்போது நான் கத்தியால் கண்டபடி வீசினேன். அப்போதுதான் காயங்கள் நாகலிங்கத்தின் சரீரத்தில் உண்டாயது. எத்தனைதரம் வெட்டியதென எனக்குத் தெரியாது. நான் கத்தியை எறிந்துவிட்டு ஓடிவிட்டேன். கந்தசாமி கட்டிப்பிடிக்கவில்லை. நான் ஒழுங்கைக்கு வரும்போது அவர் வரவில்லை. பின்தான் வந்தவர். பின் நான் அவரையும் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டேன்.

இறந்த நாகலிங்கம் பன்முறையும் என்னுடன் சண்டைக்கு வருவதுண்டு சித்திரைமீ நான் எனது விறாந்தையில் படுத்திருக்கும்போது என்னை இரும்புக் கம்பியால் அடித்தனர் அப்போது ஐயாத்துரை வந்து என்னைத் துவக்கால் சுட்டுப்போடுவதாகவும் பயமுறுத்தினர். விதானைக்கு நானிவ்விஷயத்தை அறிவித்தேன். அவர் வந்து விசாரித்தார். அப்போது நாகலிங்கம் வீட்டில் இல்லை.

இதன்பின் 1-ம் எதிரி சார்பாக அவரது நியாயதுரந்தரர் திரு. தம்பு வாதித்தார். 1-ம் எதிரி அன்று மல்லாகம்கோட்டில் தமது வழக்குக்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தவர். நாகலிங்கத்தை அவர் தாக்கவேண்டுமென ஒருபோதும் எண்ணமாட்டார். ஆனால் இறந்த நாகலிங்கமும் ஐயாத்துரையும் நாய்சுட்ட வழக்கு விஷயமாக மிகவும் கோபமுடையாராகவிருந்தனர். ஐயாத்துரைமீது 1-ம் எதிரி வழக்குக் கொடுத்ததின்பேரில் இவர்கட்குப் பெரியஆத்திரமுண்டு. அதன்காரணமாக முதலாம் எதிரியைத் தாக்க எண்ணியது உண்மையாகவிருக்கலாம். இறந்த நாகலிங்கத்தின் கையிலிருந்த கத்தியையே இவர் பறித்து வெட்டியிருக்கவேண்டும். ஆகையால் இவர் கைபிழைபாடாகக் கொலைசெய்தாரென எண்ணுவதே ஏற்றதென்பது என் கருத்து.

இதன்பின் 2-ம் எதிரியாகிய கந்தசாமி கொடுத்த வாக்குமூலம் வருமாறு:—

"நான் 1-ம் எதிரியின் மைத்துனன். அவருடன் முதனாள் சாயந்திரம் அல்வாயிலிருந்து தெல்லிப்பழைக்கு வந்தேன். அவர் தனது வழக்குவிஷயமாக வந்தவர். முதனாளிரவு நான் அவரின் விறாந்தையில் நித்திரைசெய்தேன். விடிய 6 மணியளவில் படலையில் பெருஞ் சத்தம் கேட்டது. எழுந்து அங்கு சென்றேன். அங்கே நாகலிங்கம் கத்தியுடனும் ஐயாத்துரை பொல்லுடனும் நின்று இராசையாவைத் தாக்கினர். ஐயாத்துரை பின்னுக்குநின்று இராசையாவுக்குப் பொல்லால் அடித்தார். நாகலிங்கம் கத்தியால் ஓங்கி வெட்டினார். இராசையா கத்தியைக் கையால் தட்டிவிட்டார். இரண்டாம்முறை ஓங்கும்போது கத்தியைப் பறித்தார். ஐயாத்துரை பொல்லை நாகலிங்கத்திடங் கொடுத்தார். நாகலிங்கம் அடித்தார். இராசையா கத்தியால் வெட்டினார். நான் ஓடிவிட்டேன்.

கேள்வி: இராசையா ஓடமுன் ஓடிவிட்டாயா?—இல்லை; இராசையாவுடன் கூடப் போனேன். இறந்த நாகலிங்கம் விழுந்ததை நான் காணவில்லை. நான் கட்டிப்பிடிக்கவுமில்லை. எனக்கும் நாகலிங்கத்துக்கும் கோபங் கிடையாது. நான் பயந்தே ஓடினேன்."

பின் 2-ம் எதிரி சார்பாகத் திரு. பார் குமாரகுலசிங்கமவர்கள் எழுந்து விவாதித்தார். அவர் இச்சம்பவத்தில் சிறிதும் பங்குபற்றவில்லையென்பது உண்மையெனவுங் கூறினர். இறந்த நாகலிங்கத்தை இவர் கட்டிப்பிடித்திருப்பின் பத்துக்காயங்கள் வருவித்தபோது இவருக்கு ஒரு சிறிய காயமாவது ஏற்பட்டிருக்குமே, அல்லது இவர் வஸ்திரத்தில் இரத்தம் காணப்படுமேயென்றுங் கூறினர்.

பின் நீதிபதி யூரிமாருக்கு இச்சம்பவத்தையும் சாட்சிகளின் வாக்குமூலத்தையும் எதிரிகளின் வாக்குமூலத்தையும் நன்கு பரிசிலனைசெய்து அவைகளின்தன்மைகளை எடுத்துக்காட்டினர். யூரிமார் பின் ஆலோசனைசெய்து முதலாம் எதிரி பாரதூரமான கொலையைச்செய்ததால் கொலைக்குற்றவாளியென்றும், இரண்டாம்எதிரி சுற்றவாளியென்றுங் கூறினர். இரண்டாம் எதிரி விடுதலையாக்கப்பட்டனர், முதலாம் எதிரிக்கு இத்தீர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. "ஏதாவது சொல்லப்பிரியமா" என்று நீதிபதி கேட்டார். அப்போது முதலாம் எதிரி சொன்னதாவது:-

"நான் இறந்த நாம்லிங்கத்தால் அடைந்த தொந்தரவுகட்கு அளவில்லை. அவர் மிகவுங் கெட்டவர். கல்யாணம்முடித்த நாளாக எல்லாவற்றையுந் தாங்கிவந்தேன். இப்போது தாங்கமுடியாமற்றான் அவரை வெட்டினேன். அவர் என்னைக் கொலைசெய்யவந்தபோது நான் அந்நேரம் என்னசெய்வதென்று தெரியாது கத்தியைப்பறித்து வெட்டினேன். கடவுள் என்மீது இரக்கங்காட்டாது விடார். இத்தீர்ப்பு மிகவும் அநியாயமானது."

நீதிபதி பின் கூறிய தீர்ப்பாவது :-

"காசிப்பிள்ளை இராசையா கண்டிக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே பொகம்பரு சிறைச்சாலையில் புரட்டாசி மாதம் 20-ந் திகதி வெள்ளிக்கிழமை உயிர்போகும்வரையும் தூக்கப்படவேண்டியது."


யா. ஆ. தி. பா. வி. ச.
பிரவேச வகுப்பு
சைவாசிரிய கலாசாலை
திருநெல்வேலி

ஷை கலாசாலையில் 22-9-35 தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச வகுப்பு வைத்து வேதனமின்றிக் கற்பிக்கப்படும். குறித்த வகுப்பிற் சேர விரும்புகிறவர்கள் 15-9-35க்கு முன் ஷை கலாசாலை அதிபருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 1-8-35.

இங்ஙனம், சி.சுவாமிநாதர், அதிபர்.

(18) 4-8-35—2.

# பெரிய ரொக்கப் பரிசுகள்

**புதுமையான இந்த நவினப் போட்டியில் அவசியம் ஜயிக்கவேண்டும்!**

களிப்பையும் ஊக்கத்தையும் தரும் இந்தப் போட்டிக்கு ரொக்கப்பரிசுகள் ரூ. 850 வழங்கப்படும்.

## முதற் பரிசு ரூ. 500

**2-வது பரிசு ரூ. 250**

**3-வது பரிசு ரூ. 100**

தவிர, 200 சந்தோஷப்பரிசுகள் ஒவ்வொன்றுக்கும் 12 லக்ஸ்டொய்லெட்ஸோப் பெரிய கட்டிகள் கொடுக்கப்படும்.

**எத்தனை தேங்காய்கள் இந்தப் படத்தில் இருக்கின்றன?**



படத்தில் காட்டியிருப்பது ஒரு தென்னை மரம். இலங்கையிலுள்ள தென்னைமரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்தான் ஸன்லைட்ஸோப் செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. ஸன்லைட்ஸோப் செய்வதற்கு வேண்டிய மற்றெல்லா சாமான்களையும்போல இந்த எண்ணெயும் நன்ருய் சுத்தி செய்த பின்பே சேர்க்கப்படுகிறது. தூய்மையான சரக்குகளால் மட்டுமே ஸன்லைட் ஸோப் செய்ய முடியும்—அதனுல்தான் ஸன்லைட் ஸோப் எப்பொழுதும் ஒரே தன்மையுள்ள பரிசுத்த ஸோப்பென்று உத்திரவாதம்செய்யப்பட்டிருக்கிறது நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இப்படத்தில் உங்களால் பார்க்க முடியும் தேங்காய்கள் எத்தனை என்பதை எண்ணி, அந்தத் தொகையை இதனடியில் இருக்கும் கூப்பனில் எழுதிப் பின் உங்கள் பெயரையும் விலாசத்தையும் எழுதுங்கள். அப்படி எழுதிய கூப்பனுடன், ஸன்லைட்ஸோப் பெரிய இரட்டைக் கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொயிலெட் ஸோப் பெரிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் ஸோப் சிறிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 9ஐயும் சேர்த்து ஒரு கவரில் போட்டு மூடி அடியில் கண்டபடி விலாசம் எழுதி தபால்மார்க்கம் அனுப்புங்கள்.

**விலாசம் எழுதவேண்டிய விபரம்:—**

"ஸன்லைட் ஸோப் போட்டி"

**ஏ. சங்கரய்யர் அன் சன்ஸ்,**

91, குமாரவீதி, புறக்கோட்டை,

தபால்பெட்டி 366, கொழும்பு.

**இந்த போட்டிபந்தயம் 7-9-35அன்று முடிவடையும். இத்தேதிக்கு பிறகு வந்துசேரும் கூப்பன்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.**

சரியானவிடை அல்லது கூடியவரை சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசு அளிக்கப்படும் இதரப் பரிசுகள் மறறுமுள்ள விடைகளின் மகிமைக்குத்தக்கவாறு வழங்கப்படும்.

### கூப்பன்.


இந்தப் படத்தில் நான் கணக்கெடுத்திருக்கும் தேங்காய்களின் தொகை ............

பெயர் ............

விலாசம் ............

............

நீங்கள் எத்தனை விடைகள் வேண்டுமென்ருலும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு கூப்பனுடனும் ஸன்லைட் சோப் பெரிய இரட்டைக்கட்டிகளை சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் சோப் பெரிய கட்டிகளைச் சுத்தியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 3, அல்லது லக்ஸ் டொய்லெட் சோப் சிறிய கட்டிகளைச் சுததியிருக்கும் அச்சுக்கடதாசிகள் 9ஐயும் சேர்த்து அனுப்பவேண்டும். இப்போட்டி சம்பந்தமாக யாதொரு விதமான கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. ஸன்லைட்சோப் கம்பெனியாரின் தீர்ப்பே முடிவானதாக ஒப்புக்கொள்ளவேண்டும். இப்போட்டியின் முடிவுதிட்டங்கள் இந்தப் பத்திரிகையில் 29-9-35 அன்று பிரசுரிக்கப்படும்.




பலபேர் சரியான விடை அல்லது கூடியவரை சரியான விடை அனுப்பியிருந்தால் ரொக்கப் பரிசுகளை அவர்களுள் சம பங்கிட்டுக் கொடுக்கப்படும். சந்தோஷப் பரிசுகளை மற்றுமுள்ள விடைகளின் மகிமைக்குத் தக்கவாறு வழங்கப்படும். இந்தப் போட்டியின் விடையை ஸீல் போட்ட கவரில் கொழும்பு நாஷனல் வங்கி ஆபீஸில் ஒப்படைத்திருக்கிறது. போட்டி முடிவு தேதிக்குப் பிறகே ஷை கவர் திறக்கப்படும்.

பரிசளிப்பவர்:—

லீவர் பிரதர்ஸ் லிமிட்டெட்,
போர்ட் ஸன்லைட், இங்கிலாந்து.



**வியாபாரத்தில் விருத்தியடையவேண்டுமானுல்**

**ஈழகேசரியில் விளம்பரஞ் செய்யுங்கள்.**


## மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானேதய சங்க வித்தியாசாலையில் நடைபெற்ற பகிரங்கக்கூட்ட அறிக்கை.

மயிலிட்டிதெற்குப் பாலர் ஞானேதயசங்க வித்தியாசாலையிலுள்ள, குற்றஞ்செய்யாத உபாத்திமார் மூவரைச் சைவ வித்தியா விருத்திச்சங்க மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சடுதியாக மாற்றியதால் வித்தியாசாலையில், தற்போது எற்பட்டிருக்கும்குழப்பத்தைப்பற்றியும், இவைகாரணமாக ஊரில் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியைக்குறித்தும் யோசிக்கும்பொருட்டு, 1935-ம் ஆண்டு ஆவணிமாதம் 6-ந்திகதி செவ்வாய்க்கிழமை சாயந்தரம் 7 மணியளவில் வித்தியாசாலை மண்டபத்தில், சங்க அங்கத்தவர்களும், பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளின் பெற்ருரும், வித்தியாசாலையின் நன்மையை விரும்பியவர்களுமாய், சுமார் 200 பேர் அடங்கிய ஓர்பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் திரு. சி. கந்தவனம் அவர்கள் அக்கிராசனராகவும், பென்சனர் திரு. பூ. பத்திநாதர் அவர்கள் காரியதரிசியாகவுந் தெரிவுசெய்யப்பட்டபின் விஷயங்கள் நடைபெற்றன.

அத்தருணம் சமுகமளித்தோரிற்பலர் மேற்கூறிய விஷயங்களைப் பற்றித் தெளிவாக விளங்கப்படுத்தியபின், கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. வித்தியாசாலை மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் பிழைசெய்த ஆசிரியரை மாற்றியதோடு, முறைப்பாடுசெய்த ஆசிரியர்மார் மூவரையும் தகுந்த நியாயங்காட்டாது சங்கத்தினதும், பள்ளிக்கூடப் பிள்ளைகளின் பெற்ருரினதும் விருப்பத்துக்கு மாருக மாற்றியதும், தகுதியற்ற சில உபாத்திமாரை நியமித்ததும் பிழையென இப் பகிரங்கக்கூட்டம் கண்டிக்கிறது.

2. சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியநிர்வாகசபை அங்கத்தவர்களுடன், நாம் விரும்பிய சிலரையும் சேர்த்து ஓர்பகிரங்க விசாரணை நடத்திப் பிழைகண்ட ஆசிரியரை மாற்றுவதேயன்றி ஏனைய உபாத்திமாரைத் திருப்பவும் இவ் வித்தியாசாலையில் வைக்கவேண்டும் என இக்கூட்டம் விருப்புகிறது.

3. மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் இப்போசெய்த மாற்றம் பெலப்பிக்கப்படும் பட்சத்தில் இன்னும் ஊர் உபாத்தியாயர்களை நியமித்தே பள்ளிக்கூடத்தை நடாத்த வேண்டுமென இக்கூட்டம் வற்புறுத்துகின்றது.

4. மேற்கூறிய தீர்மானங்களைக்குறித்து வேண்டிய ஒழுங்குகள் கூடிய சீக்கிரம் செய்யப்படவேண்டுமெனவும், அவ்விதஒழுங்குகள் செய்யும் வரையும் பிள்ளைகள் கலையாவண்ணம் பள்ளிக்கூடத்தை விடுதலைசெய்யும்படி மனேச்சரையும் பெரும்டாக வித்தியாதரிசியையும் கேட்டுக்கொள்ள வேண்டுமெனவும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

5. மேலே சொல்லப்பட்ட 2-ம் 3-ம் 4-ம் தீர்மானங்களில் வேண்டியன கூடிய சீக்கிரம் செய்யாவிட்டால் வித்தியாசாலையின் "மனேச்மென்ரை"த் திரும்பவும் பாலர் ஞானேதய சங்கத்தாரிடம் ஒப்புவிக்க வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

6. மேலே சொல்லப்பட்ட தீர்மானங்கள் யாவும் சைவ வித்தியா விருத்திச்சங்க நிர்வாகசபை அங்கத்தவர்கள் யாவருக்குமனுப்பி ஒருகிழமைக்குள் வேண்டியயாவும் செய்யும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமெனவும், அப்படிச் செய்யாத பட்சத்தில் இத் தீர்மானங்கள் யாவையும் வித்தியாபகுதியாருக்கு அனுப்பிப் பகிரங்க விசாரணை செய்யும்படி கேட்கவேண்டுமெனவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இத்துடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று. (கடிதம்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப் படும்.

நவல் பகுதி

# அருணோதயம் அல்லது சிம்மக்கொடி.

பத்தாவது அத்தியாயம்

## துன்பமும் இன்பமும் தோழமை ஆழமும்

(5-ம் இலக்கத் தொடர்ச்சி)

**மௌன** நிலையிலிருந்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விட்டனள். ரஞ்சிதமலரில் அவள் அபிமானமும் அன்பும் பெரிதாயிருந்தமையால், மூடபுத்தியிலோ, வேறேதும் அதிர்ஷ்ட வசத்தாலோ இன்றேல் விதியின் கூற்றாலோ அவள் தனக்குள் ஏதோ ஒரு உறுதியான நிர்ணயஞ் செய்து, கடைசி வரையில் அதைக் கடைப்பிடித்தே தீரவேண்டுமென்று எண்ணியவளாய் அந்த விஷயத்தில் மனதை லயிக்க விட்டிருந்தனள். அவள் வாய் பேசா ஊமையைப் போலிருப்பதைக் கண்ட அவள் தந்தை விளையாட்டாகப் பேசத் தொடங்கி, "ரஞ்சிதம் இராக் காலங்களில் சொப்பனங் காண்கிறாள். ஆனால் அடேயப்பா! நமது குழந்தையோ பகற்கனவு கண்டுகொண்டிருக்கிறாள் பார்த்தீர்களா? இதோ!" என்று கூறி நகைத்தார். அதே சமையத்தில் யாவரும் 'கொல்'லெனச் சிரித்தனர். தவமணியின் மனதில் ஒருவித நாணம் குடிகொண்டதெனினும் அவள் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "இல்லையப்பா—மலரின் சொப்பனம் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கக் கூடுமெனச் சிந்தித்துக் கொண்டும், அவள் இன்ஸ்பெக்டரின் கீழ் சிக்கிக் கொண்டு எவ்வளவு நிர்ப்பந்தப் பட்டிருப்பாளென்று யோசித்துக் கொண்டுமிருந்தேன். வேறொன்றுமில்லை. தமாசாகப் பேசி மற்றவர்களின் வயிறு வாயைப்புண்ணாக்குவதுதான் உங்கள் இயற்கை ஜோலியென்பது யாவற்குந் தெரியுந்தானே. எடுத்தாப்போல் உங்கள் வாயில் தமாஷ் பேச்சு வந்துவிடுகிறதே; அதுதான் எனக்கு ஆச்சரியம்" என்று புன்னகையுடன் கூறி, கண்சிமிட்டி ஒய்ந்தனள். அருமைநாயகம் பெலமாய்ச் சிரித்துக் கொண்டு, "தவம் இனிமேல் என்னை வாய் திறக்கவும் விடமாட்டாள் போலிருக்கிறது. போச்சடா போச்சு! தாழ்ப்பாள் ஒன்றுவாங்கி நமது வாய்க்குப் பூட்டுப் போட்டுவிடு மகளே; அப்போது நான் நீ சொல்லாமலே பேசாமலிருந்து விடுகிறேன்," என்றார். இவ்விதம் வேடிக்கையாகவிருந்து பேசிவிட்டு அருமைநாயகமும் இல்லாளும் தங்கள் மாளிகைக்குச் சென்றுவிட்டனர். மாசிலாமணியும் மனையாளும் வீட்டுக் கருமங்களைக் கவனிக்கச் சென்றனர். தோழிகளிருவரும் பின்னுமொரு முறையாகத் தனிமையில் விடப்பட்டனர். அவர்கள் ஆனந்தமாகப் பல கதைகளையும் பேசித் தங்களையுல்லாசப் படுத்திக் கொண்டிருந்தனர். வெளிப் பார்வையில் ரஞ்சிதமலர் சந்தோஷமாக இருந்தாளேயன்றி, உண்மையில் அவள் உள்ளத்தில் பாரச்சுமை போன்ற துயரமூட்டையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அவள் கூடியமட்டும் தன் கவலையை மறைத்து, தனக்கன்பானவர்களைச் சந்தோஷப் படுத்துவதில் சிரமமெடுத்து வந்தனள். ஆனால் அவள் மனப்பிணி பெரிதாய் வளர்ந்து வளர்ந்து வந்து அவளை உருக்குலைத்துக் கொண்டிருந்தது. என்றுமே நோயணுகியிராத அவளுக்கு இப்போது அடிக்கடி அற்ப சொற்ப வருத்தங்கள் வந்து கொண்டிருந்தன. அவள் தேகமோ மெலிந்து கொண்டு வந்தது. இவ்வித ஸ்திதியிலிருந்தும் யாவருஞ் சந்தோஷமாயிருக்கும்படி தன்னாலான பிரயாசையெடுத்துக் கொண்டு வருவாளாயினள். ஆனால் அவள் தேகம்? உருக்குலைந்து, துரும்பாய் மெலிவடைந்து கொண்டு வருவதைக் கவனித்து வந்த மாசிலாமணி முதலியோருக்கும் தவமணிக்கும் மறுபடியும் விசன காலம் ஆரம்பமானது. அவள் உடம்பைச் சீர்ப்படுத்த வேண்டி, கைதேர்ந்த வைத்திய நிபுணரொருவரிடமிருந்து விலைபேறப் பெற்ற ஔடதங்கள் வாங்கிக் கொடுத்தும் பயனில்லை. அவள் கோலம்கேவலமாய் விட்டதைக்கண்ட தவமணி அடங்காத் துயரத்துடன் ஒருநாள் அவளண்டை சென்று, "அன்பே, என் மலர்! படித்தும் உனக்குப் புத்தியில்லை. பலதையுங் கற்ற பண்டிதையான உனக்கு நான் புத்திபுகட்டுவதற்கு எம்மட்டு! 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பதை நீ தெரிந்து கொண்டும் பேதமையை மேலும் மேலுஞ் சாதித்து உனக்கும் எங்களுக்கும் துயரைவிளைத்துக் கொண்டிருக்கிறாயே. இதென்ன துர்ப்புத்தி! ஒருவரைக் காதலித்தாய்; அவருன்னை உல்லங்கனஞ் செய்து உன் காதலை ஏற்றுக் கொள்ளாது சென்றுவிட்டார். ஆசையல் அவ்விஷயத்தையிட்டு மறந்து விடு. கடந்தவைகளைப் பற்றி நினைத்து மனதை வருத்துவது மூடத்தனம். நீ மட்டும் வருந்தினால் போதாதா? உன்னில் அன்பு வைத்திருக்கும் எத்தனை உயிர்கள் உன்னால் அல்லும் பகலும் அநவரதமும் ஆறாத் துயருடனிருந்து வருந்துகின்றன வென்பதையாவது யோசித்து அவ்வுயிர்களுக்கு ஆறுதலையளிப்பது உன்னைச் சேர்ந்த பாரமல்லவா? உனது தேகம் இவ்வளவு கேவலநிலைமையையடைந்துவிட்டது. என்னால் தாங்க முடியவில்லை. உனது தற்கால கோலத்தைப் பார்த்து வருந்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிலும் நான் தற்கொலை புரிந்தாவது தொலைந்து விடலாமோ வெனத் தோற்றுகிறது" என்று விசனத்தோடும் அன்போடுங் கண்டித்துக் கூறினள். ரஞ்சிதமலர் அவளையரவணைத்து இனிமையாகப் புன்னகை செய்தவண்ணம், 'எனதுயிரிலும் பார்க்கப் பெரியதாய் நான் மதித்துவரும் என் ஆருயிர்மணி! கலங்கவேண்டாம்; நான் இறந்துவிடமாட்டேன். நான் காதலித்த கணவனை அடையப் பெறாவிடில் கன்னிகையாகவே இருந்துவிடத் தீர்மானித்துக்கொண்டேன். அதனால் எனக்கு ஒருவிதமான துன்பதுயரமுங் கிடையாது. ஆனால் அந்த மகாநுபாவரை மாத்திரம் நொடிப் பொழுதும் மறந்திருக்க என்னால் முடியவில்லை. அவரோர் உத்தம புருடர்; வீர பராக்கிரமம் பொருந்தியவர். மன்மதனுக்கிணையானவர். அவரை மறந்தாலொழிய என் பிணி அகலமாட்டாது. அவரை மறந்திருக்கவும் முடியாது. நீ கவலைப்படவேண்டாம். எனது அன்னையையும் அண்ணாவையும் கண்டு களிப்பதற்கு நான அவசியம் உயிரோடிருப்பேனென்ற நிச்சயம் எனக்குள்ளிருக்கிறது. என் தெய்வம் மனம் வைத்தால் நாளைக்கே என் உடப்பு நல்ல நிலைமைக்கு வந்துவிடும். அப்போது நீயும் ஏனையோரும் பெரு மகிழ்ச்சியடைவீர்கள்." என்று கூறினள்.

(தொடரும்)

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

(முற்றொடர்.)

சகுனி:— மருக! சகுனிமாமாவுக்கா இக்கருமம் முடியாது. நீ ஓர் கருமம் செய்யக்கடவாய். நாளையத் தினம் தேவருலகினும் இல்லையென்று சொல்லத்தகுந்த ஓர் அழகிய மண்டபத்தைச் சிற்பநூல் விதிவழுவாத தொழிலாளரைக்கொண்டு கட்டுவிப்பாய். பின் பஞ்சபாண்டவரைப் புதுமண்டபம் காணவரும்படி அழைத்துத் தருவாய். அவர்கள் வந்து மண்டபச் சிறப்பைப்பார்த்து மகிழ்ந்திருக்குஞ் சமையத்தில் தருமரைத் தேவரும் விரும்பும் சொக்கட்டாணுடைவரும்படி கேட்போம். முரசுக்கொடியோன் மறுக்காது இசைந்தனனாக வெண்ணிக்கொள். பின்பு என் சாமர்த்தியத்தையும் பார். ஐவருடைய வாழ்வு, அரசு, பதி முதலியவற்றையும் வென்று தருகிறேனே இல்லையோவென்பதையும் பார். என்னைச் சாமான்யமானவனென்று நினையாதே.

துரியோ:— மாமா! தங்களைச் சாமான்னியமாய் நினைத்தவன் யார்? தங்களைத் தாய் மாமனாகப் பெற்ற எனது தவமே தவம். தாங்களொன்றிருக்குமளவும் எனக்கு யாது குறை! (விதுரனை விளித்து) சிற்றப்பா! சகுனி மாமா பாண்டவரை வென்றுதருவதாய்க் கூறுகின்றார்.

விதுரன்:— ஏ துரியோதனா? பாண்டவரிடத்துள்ள செல்வங்களைக் கவருவதே உனது கருத்தானால், அதற்காக அவர்களோடு வஞ்சகச் சூதா ஆடவேண்டும்? உனது பிதா ஓர் நிருபம் எழுதி அவருக்கு அனுப்பிவிட்டால் எல்லாவற்றையும் தடையின்றிக் கொடுத்துப்போடுவார்களே. பின் அவரைக் காட்டுக்கோடச்சொல்லிவிட்டால் அங்ஙனமே ஓடிவிடுவார்கள். எல்லா வாழ்வும் உனக்காய் விடுமல்லவா? இங்ஙனம் செய்தால் உன்னை யொருவரும் பழிகூற மாட்டார்கள். அன்றி, மாயச்சூதுபுரிந்து அவர்களைவென்று பொருள்களை யபகரித்தால், மும்மூர்த்திகளும் வேதங்களும் நிலைநிற்குமளவும் உன்செயலைக்குறித்த பழிமொழி நீங்காது, அறிந்துகொள்வாய்.

துரியோ:— (சினந்து) ஏது வெட்கமில்லா மொழிகளைக் கூறுகின்றீர்! அன்பினையுடைய தந்தையர்க்குத் தம் புதல்வரி லொருசாரன்புண்டா? ஒரு பிள்ளையினிடமிருந்து பெற்று மற்றொரு பிள்ளைக்குக் கொடுத்தால் உலகம் பழியாதா? அன்றியும்,

ஊன்பெற்ற நெடுவேலோய்! உமக்கு முந்தன் கிளைக்கு முண்டு யுறவுமிங்கே, வான்பெற்ற மனக்கருத்தோ பாண்டவர்மே லிருக்கிறதை மட்டிட் டேன்யான், என்சற்று மிரக்கமிலை நான்மடிந்தபி றகாநீ ரிரங்குவீரால்?, தான்செத்த பின்புலகங் கவிழ்ந்தாலென் நிமிர்ந்தாலென் சாற்றுவீரே.

உமக்கும் உமது சுற்றத்தவர்க்கும் உண்டியும் உறவும் எனது மாளிகையில். ஆனால் உமது அன்போ பாண்டவர்மேற் பதிந்திருக்கின்றது. என்மேற் சற்றேனு மிரக்கமில்லையா? செத்தபின்பா என்னிடத்திலிரக்கங்கொள்ளப்போகின்றீர்? "தான்செத்தபின்பு உலகங் கவிழ்ந்தாலென்ன நிமிர்ந்தாலென்ன"?

விதுரன்:— ஏ துரியோதனா! தந்தையர்க்குப் புதல்வர்மீது ஒருசாரன்பில்லையென்று நீயே கூறினாய். உனது வாக்கினாலேயே எனக்குப் பிள்ளைகள்மீது ஒருசாரன்பில்லையென்பது வெளிப்படையாகி விட்டது. நூற்றுவராகிய நீங்களும் பாண்டு புத்திரரும் நேய நெறிதவறாமல் ஒருமித்துக் கூடி வாழ்ந்தால், பலதேசத்தரசர்களு முங்களைப் பணிந்து நிற்பார்கள். அன்றி நீங்களும் அவர்களும் ஒருவரோ டொருவர் எதிர்த்தால், குருகுலத்தைச் சார்ந்தவர்கள் இருபிரிவினராகி ஒருவரோடொருவர் எதிர்க்கின்றனர் என்று கூறிப் பகைவர்கள் உம்மைப் பழித்துத் தோற்கடிப்பார்கள். ஆகையால் உறுதியிதுவென அறிந்துகொள்வாய். தீமையேயன்றி வேறொன்றும் உணராத வஞ்சக மனங்களையுடையார் கூறிநின்ற நெறிச் செல்வதன்றி வேறொன்றுமறியாத நீ இனியாகிலும் சரியான நெறியில் நடக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

துரியோ:— (இழிவுபெற நகைத்து) ஏ! நீர் நிறுத்தறம் வளர்க்கின்ற தருமனுடைய மனத்தின் கண்ணே நீதியையும், தந்தையர் கூற்றுக்கு எதிர்மொழி பகருகின்ற என்பால் வடுவையும் வரைசெய்தறிந்தீர். (இழிவுபெறக் கைகூப்பி) அடியேனுடைய குற்றங்களைப் பொறுத்தருளுவீராக. (விதுரன் எழுந்து செல்கின்றான்) மாமா! தங்களெண்ணப்படி நீண்டவோர் பளிங்கு மண்டபம் கட்டுவிப்பீர்களாக. தம்பிமாரே! மாமாவோடு கூடிப் பார்க்கவேண்டிய காரியங்களைப் பார்த்து மண்டபத்தை முற்றுவியுங்கள்.

சகுனி—தம்பியர்:— அங்ஙனமே செய்விக்கின்றோம்.

காட்சி முடிகின்றது.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

1936-ம் ஆண்டுக்குரிய சிரேட்டபாடசாலை விடுகைத்தாரதரபத்திர வகுப்பிற்குரிய

இலக்கியக் குறிப்பு

(தமிழ்மணிமாலை—II)

பல்வகை ஆராய்ச்சிகளுடனும் 150 பக்கங்களுடனும்

கொழும்பு சகிருக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

திரு. மு. நல்லதம்பி அவர்களால் எழுதப்பட்டது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்

இல்லறத்து வழுவாது வாழ்பவன் தெய்வத்து ளொருவனாக மதிக்கப்படுவான்.

# மறுப்புறுப்புமூரண் மறுப்பு.

(திரு. க. முருகேசபிள்ளை, புலவர்கானநகர்.)

யுவ ஆடி மீ சஙு-ம் உ வெளிவந்த கேசரியில் "மறுப்புறுப்புமூரண்" ந. பரமானந்தன் என்னும் பெயருடன் ஒருவர் எழுதிய வியாசத்தை வாசித்துப் பார்த்தேன். அவ்வியாசத்தின் சாரமாவது:-தெய்வானையம்மை திருமணப்படலம் உஎஙு-ம் செய்யுள் "பொன்னகமதனிடை" என்ற சொற்றொடருக்கு, இமயமலையிடத்தென்பது இயைபில் பொருள் என்பதும், மேருமலையிடத்து என்னும் பொருளே இயைபுடைப் பொருள் என்பதும் பிறவுமாகும்.

அவ்வியாசத்தின் கணுள்ள தோஷங்களை விசாரித்தல் மண்சோற்றில் கல் ஆய்தல் போலும். ஆதலின் அதனை லக்ஷியத்தின் பாற்படுத்துக் கண்டித்தல், மகாபாணப் பிரயோகத்திற்கு, முயலை லக்ஷியப்படுத்தல் போல வடுச்சொற்கேதுவாம். ஆயினும் கந்தபுராண நூலாராய்ச்சியில்லார்க்கு உண்மையுரை யிஃதென்று தெளிந்து கோடலாகாமையின், தெய்வயானையம்மையார் தவஞ்செய்தது மேருமலையிலா? இமயமலையிலா? சூரபன்மனுதியோரைச் சங்கரித்த சுப்பிரமணியக்கடவுள் திருப்பரங்குன்றத்தில் சுப்பிரமணியப் பெருமானுக்குத், தெய்வயானையம்மையாரை மணஞ்செய்து கொடுத்தனரா? என்ற செய்திகளை ஆராய்ந்துண்மையிதுவென வுணர்த்தல் காரணமாக வீண்டாராய்வாம்.

தெய்வயானையம்மையார் மேருமலையில் சுப்பிரமணியப் பெருமானை நினைந்து தவஞ் செய்திருந்தார் என்பதற்குப் பிரமாணமென்று, அவ்வியாசத்திற் காட்டிய செய்யுள் வருமாறு:-

"கொவ்வை போலிதழ்க் கன்னியை மஞ்ஞெவதி கொடுபோ, யவ் வியானையே போற்றிய தனைய காரணத்தாற், றெய்வயானை யென்றொரு பெயரெய்தியே சிறிது, நொவ்வுறாது வீற்றிருந்தனள் குமரனை நுவன்றே."

இச்செய்யுளில் தெய்வயானையம்மையார் சுப்பிரமணியப் பெருமானை நினைந்து தவஞ் செய்திருந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கின்றதா? 'குமரனை நுவன்று சிறிது நொவ்வுறாது வீற்றிருந்தனள்' என்று கூறியதன்றித், தவஞ்செய்தார் என்று சொல்லப்படவில்லை. இங்கே காட்டிய செய்யுளுக்கடுத்த செய்யுள் வருமாறு:-

"பெருமை கொண்டிடு தெண்டிரைப் பாற்கடல் பெற்றுத், திருமடந்தையை யன்புடன் வளர்த்திடும் திறம்போற், பொருவில் சீருடையடலயிராவதம் போற்ற, வரிசை தன்னுடனிருந்தன டெய்வத மடந்தை"

முந்திய செய்யுளிற் தவஞ் செய்திருத்தலைச் சொல்லினராயின் இச்செய்யுளில் அதைமறந்து, பாற்கடல், இலக்குமியைப் பெற்று அன்புடன் வளர்க்குந் தன்மை போல, அயிராவதநும் போற்றத் தெய்வயானையம்மையாரும் வரிசையுடன் இருந்தனர் என்று ஆசிரியர் கூறுர்.

உண்மையறியாது இங்ஙனம் உரைத்து மகிழ்வாருமுளரென்று கருதியே ஆசிரியரும், அடுத்த செய்யுளிலும் தமது மதத்தை நாட்டி நிறுத்தனர். இன்னும் இப்படலத்தின் ரு-ம் சு-ம் செய்யுட்களும் இதற்காதாரமாகவுள. அவை வருமாறு:—

"முந்து மின்னமுதக் கொடி மூவலகேத்து, மிந்திரன் மகளாகியே வளர்ந்தனையிருத்தி. சுந்தரிப் பெயரினையவ டொல் புவி தன்னி, லந்தண்மா முனி புதல்வியாய் வேடர்பாலமர்தி"

"நன்று நீவிர்கள் வளர்ந்திடு காலையாநண்ணி, மன்ற னீர்மையா லுங்களை மேவுது மனத்தி, லொன்று மெண்ணலீர் செல்லுமென் றெம்பிரானுரைப்ப, நின்ற, கன்னியர் கைதொழுதேகினர் நெறியால்"

இவைகளில் "அமுதக்கொடி! மூவலகேத்துமிந்திரன் மகளாய் வளர்ந்தனையிருத்தி" "வளர்ந்திடு காலை யானண்ணி மன்ற நீர்மையால் உங்களை மேவுதும்" என்று கட்டளையிட்டருளியபின், அப்பெருமானை நினைத்துத் தவஞ் செய்தற்கு ஓர் காரணமுமில்லை என்பதுமறிக. "பொன்னகமதனிடைப் புராரி சேயினைத், தன்னகமிசை கொடுதவத்தை யாற்றினுள்" என்றது, பூர்வ சென்மச் செய்தியையென்க இக்கந்தபுராண நூலின் இடையிடையே, ஆசிரியர் பூர்வசென்மச் செய்திகளை வைத்துக் கூறியிருப்பது, இந்நூலாராய்ச்சி உடையார்க்கேயன்றிப் புறச்சமயச் சார்புடையார்க்குப் புலனுகாதென்க. முற்பிறப்பிற் செய்தியே கூறியதென்பது:-

"பன்னிரு மொய்ம்புடைப் பகவன் பாற்படப், பின்னலஞ் சுரிகுழற் பிடியும் பொய்கைவாய், முன்னுற வருந்தவ முயன்று வைத்தனள், இன்னுழி யதன்பயன் எய்திற்றே கொலாம்" (தெய்வயானை திருமணப்படலம் ந)

இது கூறிய சந்தர்ப்பம்:-(இந்திரன் சாய்ந்திடு தம்பகை கடந்து, பொன்னகர் வேந்தியல் முறையருள் வேற்கை வீரற்கு, தெய்வயானையம்மையைத் திருமணஞ் செய்துகொடுக்கக் கருதித்தமது எண்ணத்தை விட்டுணுமூர்த்தியாதி தேவர்களுக்குக் கூறியபோது, விட்டுணுமூர்த்தி இந்திரனுக்குக் கூறியதாகும்.

விட்டுணுமூர்த்தி, இந்திரன் திரிகால வுணர்ச்சியில்லாதவனுதலின் உமது எண்ணத்திற்கியைய, நங்கையும் முற்பிறவியில் தவமியற்றி யிருக்கின்றூர் என்றும், இப்பொழுது அத்தவப்பயன் எய்தியது என்றுங் கூறினர். அம்மையார் இப்பிறப்பில் மேருமலையில் தவமியற்றினராயின், அதனையுஞ்சேர்த்துச் சொல்லியிருப்பார். அப்படிச்சேர்த்துக் கூறுது "பிடியும் பொய்கைவாய் முன்னுற அருந்தவமுயன்று வைத்தனள், இன்னுழியதன்பயன் எய்திற்றேகொலாம்" என்று முற்றவத்தைத் தெளிவாகக் கூறியதூஉங் காண்க.

இந்திரன் நன்றிகருதி மகளைச் சுப்பிரமணியக் கடவுளுக்குத் திருமணஞ்செய்து கொடுக்கத் துணிந்தான் என்று, கூறப்பட்டிருத்தலின், அம்மை மேருவிற்றவஞ் செய்தனராயின், அவனுக்கு அச்செய்தி தெரியவரும். தெரிந்திருந்தால் அம்மையாரது எண்ணமுமது என்பதும் எடுத்துக்கூறுவான். அதுவன்றி நன்றியறிதலாகக் கொடுக்கத்துணிந்தனன் என்று கூறுவதாலும், மேருமலையிற் சுப்பிரமணியப் பெருமானை நினைந்து, தவஞ்செய்தார் என்றதற்குத்தக்க உதாரணம் எடுத்துக்காட்டாமையானும், "மேருமலையிற் றவஞ்செய்தார்" என்றல் பொருந்தாமையுங் காண்க.

இன்னும் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் தெய்வதயானையம்மையாருக்கு, அவாதும் வள்ளியம்மையாரதும் பூர்வ சென்மச் செய்திகளைக் கூறியருளிய விபரம் வருமாறு:

"நோற்று நின்றிடு நுங்களை யெய்தியா, மாற்றவு மகிழ்ந் தன்பொடு சேருதும், வீற்று வீற்று விசும்பினும் பாரினுந், தோற்றுவீரென்று சொற்றனந் தொன்மையில்" "சொன்ன தோர் முறை தூக்கி யிருவருண் முன்ன மேவிய நீ முகிலூர் தரு, மன்னன் யாமக ளாகி வளர்ந்தனை, யன்னபோதனை யன்பொடுவேட்டனம்" (வள்ளியம்மை திருமணப்படலம் உசா-உச.)

என்று திருவாய்மலர்ந்தருளிய விடத்தும் "வளர்ந்தனை அன்னபோதனை யன்பொடு வேட்டனம்" என்று கூறியருளியதன்றித் தவஞ்செய்தது என்று கூருதிருக்கவும், மேருமலையிடத்துத் தவஞ்செய்தாரென்று செருக்கிக் கூறுவது எவராலும் எள்ளப்படற்பாலவாய வாறுணர்க. இந்திரன் அம்மையை நன்றிகருதிக் கொடுத்தனன் என்பது:—

"நன்றியிதனைக் கருதி நாங்கள் புரிகைம்மா(று), ஒன்றுமிலை யெண்ணினு முளத்தெழும் விருப்பால், வென்றியசுரேசர் கிளை வீட்டு குமரேசற், கின்று மகவான் மகளை யீந்திட நினைந்தான்" (தெய்வயானையம்மை திருமணப்படலம் உஉரு)

இது கூறிய சந்தர்ப்பம்:—(சுப்பிரமணியப் பெருமான், அம்மையாரைத் திருமணஞ் செய்யும்போது அவ்விடத்து வந்தருளிய சிவபெருமானை வணங்கிப் பிரமதேவர் கூறியது.) இன்னும்:—

"கன்னின்ற மொய்ம்பி னவுணக்களை கட்டல்செய்தாய், இங்நின்ற தேவர் சிறை மீட்டனை என்றனக்கு, முன்னின்ற தொல் சீர் புரிந்தாயது முற்று நாடிச், செய்ந் நன்றியாகச் சிறியேன் செயத்தக்கதுண்டோ" "முந்தேதமியேன் பெறுமங்கையிம் மொய்வரைக்கண், வந்தே யமர்வா ளவடன்னை வதுவைசெய்து, கந்தே புரை நின் பெருந்தோளிற் கலந்தி யாங்க, ளுய்ந்தே பிறவிப் பயன் பெற்றன மோங்கவென்றுன்."
(தெய்வயானை திருமணப்படலம் கஎ, கஅ)

இவை கூறிய சந்தர்ப்பம்:— (இந்திரன் சுப்பிரமணியப் பெருமானை யடைந்து தமதெண்ணத்தைத் தெரிவித்தது.)

இந்தவிடத்தும் ஒன்று கவனிக்கத்தக்கது. இந்திரன், அம்மையார் மேருமலையிற் றவஞ்செய்திருந்தால் அதையுங் குறிப்பிடுவான். அப்படிக் குறிப்பிடாமையானும், அம்மையார் மேருமலையிடத்துத் தவஞ் செய்யவில்லை என்பது புலனுகின்றது.

பொன்னகமென்ற முதலையுடைய செய்யுட்கு, வல்வை, இயற்றமிழ்ப் போதகாசிரியர் க வைத்தியலிங்கம எழுதிய தெய்வயானையம்மை திருமணப்படலவுரையினும், பொன்னகம்-இமயமலையிடத்தென்று எழுதியிருத்தலையுங் காண்க.

இவ்வேதுக்களால் தெய்வயானையம்மையார் இப்பிறப்பில் மேருமலையில் வீற்றிருந்ததேயன்றித் தவஞ்செய்யவில்லையென்பதூஉம், முற்பிறப்பிற்செய்த தவத்தையே "பொனனக" மென்ற முதலையுடைய செய்யுளிற்கூறியது என்பதூஉம் போந்தவாறு காண்க.

வலிந்து கொண்ட இயைபில் பொருள் மேருமலையிடத்து எனபதும், 'அறியுமாற்றலில்லாதவர்' என்று குறிப்பிட்டவரில், தாமுமொருவராகு மென்றெண்ணி, எவ்வாறுயினுங் குற்றம் கூறினேம் எனப் பெயரிடுது மென்னுஞ் செருக்கால், மாணவரில் மறைந்து நின்று, ஏதேதோ தெரிந்தவர் போலப் பிதற்றி, "மலக்குச் சொற்றேடுவார் கன்கணுளர்கள்" என்பதனை விளக்கி, நிரம்ப மயங்கிய வேளையிலே, கந்தபுராண வசனநூலையேனும் படித்தறியாது, செய்யுளுக்கு இயைபுரை எழுதுவோமென்று, ஆரம்பித்துக்கொண்டது, சிறுமியர் சிறுவீடுகட்டி விளையாடுதலை யொக்கும் என்பதும், மனக்கோட்டம், விட்டு நுண்ணறிவும், நடுவு நிலைமையுமுடையாராய் இனிது நோக்குவார்க்கெல்லாம், சாலப்புலப்படும். அன்றியும், கற்றுணர்வு சிறிதுடையாரு மற்றிவை எலாவுரை யென்பது இனிதுணர்வர்.

இன்னும் அவ்வியாசத்தில் "மேல் சுப்பிரமணியப் பெருமான் சூரபன்மனுதியோரைச் சங்கரித்தபின் அவ்வம்மையாரை மேருவினின்று மழைத்துத் திருப்பரங்குன்றத்தில் சுப்பிரமணியப் பெருமானுக்குத் திருமணஞ்செய்து கொடுத்தான் என்பது சரித்திரம்" என்று எழுதியுமிருக்கின்றூர். சூரபன்மனுதியோரைச்சங்கரித்த சுப்பிரமணியப்பெருமான் வேறு, அம்மையாரை மணஞ்செய்த திருப்பரங்குன்றத்திற்சுப்பிரமணியப் பெருமான் வேறு என்று, அவர் கண்ட நூற்பிரமாணங் காட்டாது வாளா கூறியது "விண்ணிலாதவன் றன்னை யோர் கனியென வெஃகிக், கண்ணிலாதவன் காட்டிடக் கையிலாதவன் போய், உண்ணிலாத பேராசையாற் பற்றுமாறெருக்கும். என்ற கதைபோலாகும்.

இதனுல் அவர் அறிவின் மதுகையின்மையின் அவ்வாறெல்லாங் குழறினுரென்பதும், நுண்ணறிவுடையார்க்கினிது விளங்கும்.

## சமத்துவ சங்கம், வதுளை.

இச்சங்கத்தின் மூன்ருவது நிருவாக சபை இன்று மாலை 5-மணியளவில் "ஞானவிலாஸ்" ஹாலில் கூடி பலவிஷயங்கள் பற்றி ஆலோசனை செய்தபின் சாதாரணக் கூட்டம்கூடி: தலைவர் ஞானபண்டிதன், காரியதரிசி, வைத்திலிங்கம்; திருவாளர்கள் ஏ. கே. ஆள்வாப்பிள்ளை (டிஸ்திறிக் கோட்டுக் காரியதரிசி) அ. செல்லத்துரை அவர்களால், முறையே ஜாதியும், மதமும் இவைகளால் ஆக்கப்பட்டிருக்கும் அடிமைத்தனமும், என்ற விஷயமாய் விரிவான சொற்பொழிவுகள் செய்யப்பட்டுப் பின் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தில் நடைபெறும்ஆபாசங்களை நேரில் கண்ட திரு. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தாம்கண்ட காட்சிகளைப்பற்றி விரிவாகவும், உருக்கமாகவும் சபையினருக்கு எடுத்துக்காட்டி கதிரையம்பதியில் கூடிய சைவ மகாநாட்டின் தீர்மானத்தை ஆமோதித்து "கதிர்காம ஆலயக் கமிட்டி" நியமிக்கவேண்டியது அத்யாவசியமென்று விரிவுரை செய்தபின் அடியிற் கண்ட தீர்மானம் ஏகமனதாய்ச் செய்யப்பட்டது.

"ஸ்ரீ கதிர்காமப்பெருமானின் மகாபுனிதமான ஆலயம்—சைவசமய மக்களின் உயிர்போன்றிருக்கும் ஏராளமான பொருள்கள் நம் சமயத்தினர் காணிக்கையாகச்செலுத்தியும் நம்மனேர்கள் அவ்வாலய விஷயமாய் ஒருவித முன்னேற்றமும் செய்யஉரிமையற்றிருப்பது பெரிதும் வருந்தத்தக்கது.

அன்றியும் நம் சமயத்தில் சிறிதேனும்பற்றில்லாத சிங்கள அதிகாரிகள், திருமுருகன் ஆலயத்தை ஆபாசமான முறையில் நடத்தி வருவது விவேகமுள்ள சைவ சமய அன்பர்களால் சகிக்கமுடியாத உண்மையாகும். ஆகவே கதிர்காமக்கோயில் நிர்வாகசபை ஒன்று நியமிக்க வேண்டியதும் அச்சபையில் நம் இந்துக்களும் அங்கம் வகிக்கவேண்டியதும் அத்யாவசியமென்று இச்சபை கருதுகிறது.

இததீர்மானத்தை பொது ஸ்தாபன காரியகர்த்தர் (Public Trustee) அவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பவேண்டுமென்றும் நமது தமிழ்ச்சங்கங்கள் இதர சைவசமயப்பற்றுள்ளவர்கள் யாவரும் இவ்விஷயமாய்க் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் வெகு தாழ்மையாய் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.


இம்மாதம் 31உ யன்று கொழும்பில் இவ்விஷயமாய் ஆலோசிக்கப்படும் மகாநாட்டுக்கும் இச்சங்க அங்கத்தினர்களில் சிலரை அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடிதம்


# எல்லோரும்

நட்க்ஷேத்திர (ஸ்ட்டார்) அடையாளமுள்ள உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டது.)

பாத்திரங்களையே

## வாங்குகிறார்கள்

இதனை வாங்குவது:

இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனல்,

**இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும் உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!**

**இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:

அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்,
122, மூன்றும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

(178) 5-8-34—8-35.


மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

## வலிகாமம் வடக்கு ஆங்கில ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று இந்தமாதம் 10-ம் திகதி சனிக்கிழமை காலை 9½ மணியளவில் தெல்லிப்பழை அமெரிக்கன மிஷன் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் சங்கஅக்கிராசனர் ஸ்ரீமான் தெ. வ. செல்லப்பா அவர்களின் தலைமையின்கீழ் நடாத்தப்பட்டது. முதலாவதாகச் சென்ற கூட்டத்தின் அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகாரம்பெற்றது. அக்கிராசனர் தமது முன்னுரையில் ஸ்ரீமான், சு. நடேசபிள்ளை. B. A., B. L, M. S. C. அவர்களின் குணதிசயங்களைப்பற்றியும், கல்வித்திறமை, இயல்பாயமைந்துள்ள மனோசக்தி, ஈஸ்வரபக்தி, தேசசேவையைச் சுயநலங்கருதாது செய்வதற்கிருக்கும் அளவிறந்த ஆர்வம் ஆதியவற்றைக் குறித்தும் பேசியபின், அரசாங்க சபைக்கு அவர் தெரிவுசெய்யப்பெற்றபின் முதன் முதல் சங்கத்துக்குச் சமுகமளித் திருக்கிறபடியால் சங்க அங்கத்தவர்களின்பேரால் அத்தருணத்தில் அவரை உபசரிப்பதாகவும் கூறினர். அதன்பின் "ஆசிரியர்களே ஓர் சாதியை ஆக்குபவர்கள்" (Teachers as Nation Builders) என்னும் பொருள் பற்றிய தமது விரிவுரையை நிகழ்த்துமாறு வேண்டினர். ஸ்ரீமான் நடேசபிள்ளையவர்கள் நல்லாசிரியன் யார் என்பதைப் பற்றியும் அவனில் அமைந்திருக்கவேண்டிய குணங்கள் திறமைகள் எவையென்பதைக் குறித்தும் விரிவாகப்பேசி, ஓர் தேசத்தை மேனிலையடையச் செய்வதற்கு ஆசிரியனுக்கிருக்கும் அருந்தருணமும் அவனிலமைந்திருக்கும் மின்சாரசக்தியும் வேறெத்தொழிலில் ஈடுபட்டுழைப்பவனுக்கு மில்லையென்பதாக மிகவும் உற்சாகமாக எடுத்துரைத்தனர். எமது தாய்நாடாகிய இந்தியா முன்னிருந்ததிலும்பார்க்க எவ்வளவோ உயர்ந்தநிலையை எய்தச்செய்ததற்கு திலகர், கோகலே முதலிய ஆசிரியர்பதவியிலமர்ந்திருந்த மகான்களே எவ்வளவோ சுய ஒறுப்புடன் அருஞ்சேவை புரிந்தனரென்பதாகக் குறிப்பிட்டு, அவர்கள் எவ்வளவோ திறமைவாய்ந்தவர்களாயிருந்தபோதும் மிகவும் சொற்ப சம்பளத்துடன் ஆசிரியர்மாராயிருந்து சேவை புரிந்தது எம்மவருள் அனேகருக்கு ஓர் நன்முன்மாதிரியாய் எப்பொழுதும் இருக்கவேண்டியதென்பதாகப் பேசினர். முடிவுரையாக, ஆசிரியர்மாருக்கு இருக்கும் மதிப்புக்குத் தக்கதாக அவர்களுடைய திறமை, ஒழுக்கம் ஆதியவைகளிருக்கவேண்டியதுமன்றி அவர்களுடைய தூயஇருதயத்தின் சக்தியைக்கொண்டு இயன்றளவு சுய ஒறுப்போடு தேசத்தொண்டு ஆற்றுவதன்பயனாய்த் தமது நாடு முன்னேற்றமடைந்த வேறு பல நாடுகளிலும்பார்க்க உன்னதநிலை எய்தத்தக்கதான சேவைபுரிதல் அத்தியாவசியமென்பதாகவும், ஆசிரியர்மாருக்கிருக்கும் கண்ணியத்தைப்போலவே அவர்களுடைய பொறுப்பும் மிகவும் அபாரமானதென்பதை அவர்கள் ஒருபோதும் மறந்துபோகக் கூடாதென்பதாகவும் கூறினர். முன்னிருந்த சட்டநிரூபண சபையிலும் தற்போதிருக்கும் அரசாங்கசபையிலும், ஆசிரியர்மாராயிருந்து அங்கத்தவர்களாய்த் தெரிவுசெய்யப்பட்டவர்களுடைய தொகை அவர்கள் செய்துவருவதும் செய்யவேண்டியதுமான சேவையுடன் ஒத்துநோக்கும்பொழுது அதிகம் குறைவாயிருப்பது தேச முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாயிருப்பதைப்பற்றி மிகவும் விசனத்துடன் கூறினர்.

ஸ்ரீமான் ந. சங்கரப்பிள்ளை B. A., அவர்கள் பிரசாரகர் குறிப்பிட்ட பிரதானமான விஷயங்களைத்தழுவி ஆசிரியர்களுக்குப் பயன்படத்தக்க அனேக குறிப்புக்களைத் தக்க உதாரணங்களுடன் எடுத்துரைத்தனர். அதன்பின் அக்கிராசனர் தமக்குமுன் காணப்படும் ஆசிரியர்களுள் அனேகர் ஐக்கியசங்கங்களில் முக்கிய ஸ்தானங்களை வகிப்பவர்களாயிருப்பதைக் குறித்துத் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் அவர்கள் அந்தப் பதவிகளிலிருந்துகொண்டு தேசத்திற்குச்செய்யக்கூடிய தொண்டுகள் அனேகமுண்டென்பதை அவர்கள் மறப்பதுசிதமல்லவென்றுங் கூறினர்.

சங்க உபஅக்கிராசனர் ஸ்ரீமான் கா. சின்னப்பா அவர்கள் மாதமுடிவில் வலிகாமம் வடக்கு ஆங்கில வித்தியாசாலைகள் சேர்ந்து நடாத்தவிருக்கும் சங்கீதக் கச்சேரிக்கு அங்கத்தவர்களனைவரும் ஆர்வத்தோடு அருஞ்சேவை புரிந்து அனுகூலமெய்தச்செய்தல் அவசியமென்றும், ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு பெரியாரைக்கொண்டு ஒரு விஷயத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்துவிப்பதோடுமாத்திரம் திருப்திப்படாது, ஒவ்வொரு கூட்டத்திலும் ஆசிரியர்மாருக்குப் பயன்படத்தக்க விஷயங்களைப்பற்றிய தர்க்கங்கள் அங்கத்தவர்களுக்கிடையில் நடப்பது பெரும் நன்மை பயத்தற்கு ஏதுவாகுமென்றும், இனிவரும் கூட்டங்களுக்கு அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் சமுகமளிக்கத்தக்கதாகச் சமுகமாயிருக்கும் அங்கத்தவர்கள் உதவிசெய்வது நன்றென்றும் கூறியபின், தலைவருக்கும் விரிவுரையாளருக்கும் கூட்டத்திற்குச் சமுகமளித்த ஆசிரியர்மாருக்கும் ஏனையோர்க்கும் மனமார்ந்த துதிகூறினர். அதன்பின் 11½ மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது. —கி. த.

# கொலை! கொலை! படுகொலை!!!

## சாணந் திரட்டுகையில் மாமனுக்கு வெட்டு.

## படுக்கையறையில் மனைவிக்கு வெட்டு.

## பாதுகாக்கச் சென்றவனுக்குக் குடலில் வெட்டு.

## கொலைசெய்தவன் கிணற்றில் வீழ்ந்திறந்தான்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம், 11.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவியாதெரு என்னுமிடத்தில் வாலிப வயதடைந்த பாக்கியமென்பவள் பிள்ளைப்பெற்ற ஒருமாத காலத்தில் கணவனாகிய தியாகராசா என்பவனாற் குத்தப்பட்டாள்.

பாக்கியத்தின் தந்தையாகிய செல்லையா என்பவரைச் சாணந்திரட்டும்போது எதிரியாகிய தியாகராசா வயிற்றில் வெட்டினர்.

பாக்கியத்தைக்காப்பாற்றப்போன அண்டைவீட்டுச் சின்னத்தம்பியும் பலமாகக் குத்தப்பட்டு அபாயகரமானநிலைமையில் ஆஸ்பத்திரியிற் கிடக்கிறார்.

எதிரிகளுள் ஒருவனும் கணவனின் சகோதரனுமாகிய சிவக்கொழுந்து என்பவன் கிணற்றில்வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டான்.

யாழ்ப்பாணம் பொலிஸ்நீதிபதி திரு. கே. ஆள்வாப்பிள்ளை விசாரணை நடத்தினர். அப்பொழுது கொலையுண்ட செல்லையா என்பவரின் புத்திரி நாகம்மா கூறிய சாட்சியம்:

எனது சகோதரி பாக்கியம் வைகாசி மாதம் அவளது புருஷன் வீட்டிலிருந்து எங்களது வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் வந்த 10 நாட் கழித்து அவளது புருஷன் தியாகு எனது சகோதரியை நோக்கி வயித்தியரைப்போய்ப் பார்த்துவிட்டு அவரது வீட்டிற்குத் திரும்பிச்செல்லும்படி அவளை அழைத்தார். அதற்கு என் சகோதரி தான் குழந்தையைப் பிரசவித்தபின்னரே அவரது வீட்டிற்குச் செல்லமுடியுமென்று தெரிவித்தாள். அதன்பிறகு மறுநாளே எனது சகோதரி குழந்தையைப் பிரசவித்தாள். அக்குழந்தை இறந்துவிட்டது. பின்னர் எனது சகோதரியின் புருஷன் தனது வீட்டிற்குத் திரும்பிச்செல்லும்படி மீண்டும் எனது சகோதரியை அழைத்தார். ஒருமாசம் கழித்துத்தான் போகமுடியுமென்று எனது சகோதரி அவரிடந் தெரிவித்தாள். அதன்பிறகு அவளுக்கும் புருஷனுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. எனது சகோதரியை அவள் புருஷன் அடித்ததற்காக அவரை எனது தந்தை தூஷித்தார். அதிலிருந்து எனது தந்தையும் அவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில்லை.

நேற்று அதாவது எனது சகோதரி குழந்தைபெற்ற 31-வது நாள் மாலை 4 மணிக்கு எனது சகோதரியின் புருஷன் எனது சகோதரியை மீண்டும் அவரது வீட்டிற்கு அழைத்தார். அதற்கு என் சகோதரி இரண்டு மூன்று மாதங்கழித்துப் போகலாமென்று பதிலளித்தாள். உடனே அவளது புருஷன் அவளைநோக்கி நீ நாளைக்குக் கட்டாயம் புறப்படவேண்டுமென்று தெரிவித்தார். இன்று காலை 8 மணிக்கு எனது சகோதரியின் புருஷனது சகோதரரான சிவக்கொழுந்து எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் எனது சகோதரியின் புருஷனை நோக்கி இன்றே எனது சகோதரியை அவர்களது வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி தெரிவித்தார். அதன்படி எனது சகோதரியின் கணவன் தியாகு தனது சகோதரன் தெரிவித்ததைத் தனது மனைவியிடங்கூறி அவளைத் தனது வீட்டிற்கு அழைத்தார். அப்பொழுது எனது தந்தையுமிருந்தார். அவர் சிவக்கொழுந்துவை நோக்கி எனது சகோதரி பாக்கியம் இன்னம் இரண்டு மூன்று தினத்தில் அவர்கள் வீட்டிற்குச் செல்லுவாள் என்று தெரிவித்துவிட்டு அவர் வெளியே போய்விட்டார். எனது சகோதரி இரண்டு மூன்று மாதங் கழித்துத்தான் போகமுடியுமென்று தெரிவித்ததால் அப்பொழுது அவள் புருஷன் அவளைநோக்கி "இன்று மத்தியானம் என்னநடக்கிறதுபார்" என்று தெரிவித்துவிட்டுத் தனது சகோதரன் சிவக்கொழுந்துவுடன் போய்விட்டார். இப்படித் தியாகு சொல்லியதை எனது தாயாரும் தகப்பனும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இன்று மத்தியானம் நான் விருந்தையில் இருந்தேன். எனது சகோதரி வீட்டிலுள்ள அறைக்குள் ஒரு பாயில் படுத்திருந்தாள். எனது தாயாரும் தகப்பனும் சாணம் சேகரிப்பதற்காக அரைமைல் தூரத்துக்கப்பாலுள்ள வயலுக்குச் சென்றிருந்தார்கள். மத்தியானம் தியாகுவும் சிவக்கொழுந்துவும் எங்கள் வீட்டிற்குவந்தனர். தியாகு எனது சகோதரியைநோக்கிச் சாப்பாடு போடும்படி சொல்லிக்கொண்டு அவள் படுத்திருந்த அறைக்குள் கத்தியை உருவிக்கொண்டே நுழைந்தார். அப்பொழுது எனது சகோதரி எழுந்திருக்க எத்தனிக்கவும் தியாகு அவளைக் கத்தியால் குத்தினர். அவர் குத்தியதை நான் பார்த்தேன். சிவக்கொழுந்துவும் அந்த அறைக்குள் நுழைந்தார். அவர் கையிலுங் கத்தியிருந்தது. எனது சகோதரி குத்தப்பட்டபின் அவளது தேகத்திலிருந்த நகைகளைச் சிவக்கொழுந்து கழற்றிக்கொண்டார். அதன்பிறகு சிவக்கொழுந்துவும் ஓடிவிட்டார். நான் கூச்சலிட்டேன். தியாகு என்னைத் துரத்திக்கொண்டு வந்தார் நான் மாணிக்கம் வீட்டிற்குள் ஓடிப் போனேன். மாணிக்கத்தின் வீட்டு வேலிவரை தியாகு என்னைத் துரத்தி வந்தார்.

அடுத்தாப்போல் கொலையுண்ட செல்லையாவின் மனைவியான தெய்வானை சாட்சி கூறியபோது பின்வருமாறு தெரிவித்தாள்: கொலையுண்ட பாக்கியம் எனது மகள். எனது புருஷனும் இன்று காலை கொலைசெய்யப்பட்டார். பிள்ளைப் பெறுவதற்காக பாக்கியம் இரு மாதங்களுக்கு முன் அவளது புருஷன் வீட்டிலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்திருந்தாள் அவளது புருஷனும் வந்திருந்தார் இவ்விருவருக்கும் அடிக்கடி சச்சரவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாக்கியத்தின் புருஷன் பாக்கியத்தை அவரது வீட்டுக்கு செல்லும்படி அழைத்தார் 31 நாட்களுக்கு முன் பாக்கியம் பிரசவித்தாள் நேற்றுக் காலை அவள் புருஷன் தனது வீட்டுக்குச் செல்லும்படி அவளை அழைத்தார். புதன்கிழமை போகலாம் என்று அவள் சொன்னாள். றுதைப் பற்றி என்ன நடக்கிறதென்அ பார்ப்போமென தியாகு தெரிவித்தார் அப்பொழுது சிவக்கொழுந்துவும் இருந்தார். இன்றுகாலை சாப்பாடு முடிந்தபின் நான் தனியாக வயலுக்குச் சென்றேன். எனது புருஷன் நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரியில் வேலை செய்யச் சென்றார். உரம் சேகரிக்க எனக்கு உதவிசெய்வதற்காக அவர் மத்தியானம் 12-மணிக்கு வயலுக்கு வந்தார், சிவக்கொழுந்துவும் தியாகுவும் அங்கு வந்தார்கள். அப்பொழுது எனது கணவர் நானிருந்த இடத்திலிருந்து 30 கெச தூரத்துக்கப்பாலிருந்தார் சிவக்கொழுந்து கையிலும் தியாகுகையிலிலும் கத்திகளிருந்ததை நான் பார்த்தேன் அவர்களிருவரும் எனது புருசனைக் கத்தியால் குத்தினர்கள் உடனே நான் கூக்குரலிட்டேன் என் சப்தத்தைக் கேட்டு ஏழெட்டுப்பள்ள சனங்கள் அங்கு வந்தனர். எனது வீட்டிலிருந்து கூக்குரல் சத்தம் வருவதைக் கேட்டேன் நான் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது எனது மகள் பாக்கியம் குத்திக் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததைக் கண்டேன் எனது புருஷன் குத்திக் கொல்லப்பட்ட பின்பு அவள் கொலை செய்யப்பட்டாள்.

அடுத்தவீட்டுக்காரரான மாணிக்கத்தின் மனைவி பொன்னம்மாள் சாட்சி கூறியபோது பின்வருமாறு தெரிவித்தாள். நான் பாக்கியத்தின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வசிப்பவள், அவள் வீட்டிலிருந்துவந்த கூக்குரற் சத்தத்தைக்கேட்டேன். நாகம்மா கூக்குரலிட்டுக்கொண்டே என்வீட்டுக்குள் ஓடிவந்தாள். என்ன சமாச்சாரம் என்று அவளைக்கேட்டேன். அப்பொழுது அவள் எதுவும் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. தியாகு கையில் கத்தியுடன் அவளைத் துரத்திக்கொண்டுவந்தான், அவன் என்னைக் குத்த எத்தனித்தான். என்ன சமாச்சாரம் என்று பார்க்கவந்தவர்களை உன்னால் குத்தமுடியுமா என்று நான் அவனைக்கேட்டேன். எனது மருமகன் வயிரமுத்து சின்னத்தம்பியும் அங்குவந்தார். அவரைக் கத்தியால் குத்துவதாகத் தியாகு பயமுறுத்தினான். சின்னத்தம்பி அப்பால் செல்ல முயலும்போது தியாகு அவரைப் பிடித்துக்கொண்டான். சிவக்கொழுந்து அவரது அடிவயிற்றில் கத்தியால் குத்தினான். அதன்பிறகு இருவரும் ஓடிவிட்டனர்.

டிஸ்திறிக் மெடிக்கல் ஆபீசர் டாக்டர் K. பொன்னையா அவர்கள் பிரேத பரிசோதனை செய்தார்.

எதிரிகளைப் பொலீசார் அதிக சிரத்தையுடன் தேடினர். சிவக்கொழுந்து ஓர் கிணற்றில்மூழ்கி மாண்டு கிடந்ததைக் கண்டனர். தியாகு நாவற்குளியில் ஓர் வீட்டில் ஒளித்துக் கொண்டிருக்கையில் பொலீசார் கைதியாக்கினர்.

கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்டபாடசாலைத்
தராதரப்பத்திர வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.

இல்லறத்துக்குத்தக்க மாண்போடு தன் கணவன் வாழ்வுக்குத்தக்க செலவுசெய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"


THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 18th August 1935, Sunday. { No. 7


## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.



எப்பொழுதும் நல்ல
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமு முள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை / பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.



## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கோள்ளப்படும்,

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35



## பவளகாந்தன் அல்லது
## கேசரிவிஜயம்

குறைந்த விலை! நிறைந்த பொருள்!

**17 அத்தியாயங்கள் 550 பக்கங்கள்**

**விலை ரூபா 2.**

தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்



## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினேம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P.O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.



அகில இலங்கை
## ஆதாய ஏலச்சீட்டுக்கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**
**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 4-ம் வகு. | 1000/- ரூபா | 40/- ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் ,, | 500/- ,, | 20/- ,, | ,, | 25 | ,, |
| C | 12-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் ,, | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | $12\frac{1}{2}$ | ,, |
| WC | 3-ம் ,, | 250/- ,, | 5/- ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 ,, | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் ,, | 100/- ,, | 1/- ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஆகஸ்ட்மீ 18-ந உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.